# கலித்துறைப் பாட்டியல்

என்னும்

# நவநீதப் பாட்டியல்

நவநீத நடனார் இயற்றியது


பதிப்பாசிரியர்கள்

எஸ். கலியாண சுந்தரையர்

எஸ். ஜி. கணபதி ஐயர்



மகாமகோபாத்தியாய

டாக்டர், உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம்

பெசன்ட்நகர், சென்னை-600 090

# கலித்துறைப் பாட்டியல்

என்னும்

# நவநீதப் பாட்டியல்

நவநீத நடனார் இயற்றியது


*பதிப்பாசிரியர்கள்*

**எஸ். கலியாண சுந்தரையர்**
**எஸ். ஜி. கணபதி ஐயர்**



மகாமகோபாத்தியாய
டாக்டர். உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம்
பெசன்ட் நகர், சென்னை - 600 090


மகாமகோபாத்தியாய
டாக்டர் உ.வே. சாமிநாதையர்
நூல் நிலைய வெளியீடு எண் - 2

முதற்பதிப்பு - 1944
இரண்டாம் பதிப்பு - 1961
மூன்றாம் பதிப்பு - 1994

© மகாமகோபாத்தியாய
டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம்
பெசன்ட் நகர், சென்னை - 600 090

விலை ரூ. 20

Printed at : Shrivenni Graphics
Offset Printers
Madras - 600 041



திரு. க. சுப்பிரமணிய ஐயர் அவர்கள்

ஐயரவர்கள் பேரர்

# பதிப்பாளர் குறிப்பு

சொல்லும் பொருளும் எனஎங்கும் தோய்பரஞ் சோதிதனைக்
கல்லும் கரையக் கரைவார்க் கமுதைக் கடிவினைநோய்
வெல்லும் பரமனைச் சுந்தர மூர்த்தி விநாயகனை
அல்லும் பகலும் நினைவார்க்குத் துன்பம் அகன்றிடுமே.

(ஐயரவர்கள் பாடல்)

சங்க இலக்கியங்கள் இன்று தமிழுலகில் பீடுநடை போடுகின்றன என்றால், அதற்கு முதற் காரண கர்த்தா டாக்டர் உ.வே. சாமிநாத ஐயரவர்கள் தான். அநந்வயாலங்காரத்திற்கு எடுத்துக்காட்டாகப் பதிப்புத்துறையில் ஏன்? எல்லாத் துறைகளிலுமே ஐயரவர்களுக்கு உவமைகூற வேண்டுமென்றால் ஐயரவர்களைத்தான் கூறவேண்டும்.

ஐயரவர்கள் அரும்பாடுபட்டுக் கறையானுக்கு உணவாகாமலும் ஆடிப்பெருக்குச் சமயத்தில் ஆற்றில் போகாமலும் பாதுகாத்துப் பல சங்க இலக்கியங்களையும், ஐம்பெரும் காப்பியங்களில் மூன்றையும், பல பிரபந்தங்களையும், அச்சு வாகனம் ஏற்றி என்றும் அழியாவண்ணம் நிலைபெறச் செய்தார்கள்.

அவர்பெயரால் பெசன்ட் நகரில் இயங்கிவரும் நூல்நிலையம் அவர் சேகரித்துவைத்துள்ள நூல்களையும், அவர் பதிப்பித்துள்ள நூல்களையும் தமிழுலகத்திற்கு அளித்துவருகின்றது. நவநீதப்பாட்டியல் என்றும் இலக்கண நூலை ஐயரவர்கள் குமாரர் திரு. கலியாணசுந்தரையர் 1944 ஆண்டு பழைய உரைகளுடன் வெளியிட்டார்கள். 1961 ஆண்டு இரண்டாம் பதிப்பாக இந்நூலை நூல்நிலையம் வெளியிட்டது. மூன்றாம் பதிப்பாக 1994 ஆண்டுத்தமிழ் அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க வெளியிடப்படுகின்றது.

இந்நூலைப்பதிப்பிக்க வேண்டுமென்ற பேரவா கொண்டிருந்தவரும், ஸ்ரீ ஐயரவர்களின் பேரருமான
**திரு. க. சுப்பிரமணிய ஐயரவர்களின் நினைவுக்கு**
இப்பதிப்பை மிகுந்த அன்புடன் அர்ப்பணம் செய்கிறேன்.

பெசன்ட் நகர் - 90
15-5-1994

வித்துவான் சு. பாலசாரநாதன்
ஆராய்ச்சித்துறை
டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம்

# முகவுரை

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்து பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல் காயுளங் கொண்டுதொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா லமுதந் தெளிக்கும்வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப் பேடே சகல கலாவல்லியே.

—சகலகலாவல்லி மாலை.

தமிழிலக்கியத்தை இக்காலத்தார் பேரிலக்கியம் சிற்றிலக்கியம் என இரண்டாக வகுத்து வழங்குவர்; பெருங் காப்பியங்களும் சிறு காப்பியங்களும் முன் வகையினையும் அந்தாதி, உலா, கலம்பகம், பரணி, பிள்ளைத் தமிழ் ஆதியன பின்வகையினையும் சாரும். சிற்றிலக்கியம் பிரபந்தங்கள் எனவும் வழங்கும். சங்ககாலத்தில் பிரபந்தங்கள் அதிகமாக இல்லை. பிற்காலத்தே தோன்றி நாளடைவில் அவை வளர்ச்சியுற்றன. பிரபந்தங்கள் தொண்ணூற்றாறு என்ற கொள்கை ஒரு காலத்தில் நிலவிவந்தது. இப்பொழுது அவற்றின் தொகை அந்த எண்ணைக் கடந்து நிற்கின்றது. அண்டகோசம், ஆடாமணி, ஆண்கூடல், இலக்குமி விலாசம், களவு கண்ணி, கன்னி மயக்கம், காமரச மாலை, கான வேட்டம், சிந்துமோகினி, சிலேடா சாகரம், தளசிங்காரம், தாமரை நோன்பு, துனி விசித்திரம், நொண்டி நாடகம், பண்ணை விசித்திரம், புறநாட்டுச் செய்கை, மதன சிங்காரம், வதன சந்திரோதயம், விசய வித்தாரம், வேடர் விநோதம் முதலியன தொண்ணூற்றாறு பிரபந்தங்களில் அடங்காதவையாகும்.

பெரும்பாலும் கடவுளரையோ, அரசர் பிரபுக்கள் ஞானசாரியர் வள்ளல்கள் புலவர்கள் முதலிய மானிடரையோ பாட்டுடைத் தலைவராகக் கொண்டு இவ்வித நூல்கள் புலவர் பெருமக்களால் இயற்றப்பெற்றன.

இலக்கியம் ஒன்று தோன்றியபின் அதற்கு இலக்கணம் அமைவது இயல்பாதலால் பிரபந்தங்கள் தோன்றியபின் அவற்றின் இலக்கணங்களை விளக்கும் நூல்கள் எழுந்தன. இவ்வித நூல்களே பாட்டியல்கள் ஆகும். பாட்டு என்பது இங்கே ஆகுபெயர்; அது செய்யுளைக் குறிக்காமல் செய்யுட்களால் ஆன நூலைக் குறிக்கும். இயல் என்பது இலக்கணம். எனவே, பாட்டியல் என்பது பிரபந்த இலக்கணமாகும்.

செய்யுளிலக்கணத்தைக் கூறும் நூல்கள் வேறு, பாட்டியல்கள் வேறு. முன்னவை செய்யுளின் உறுப்புகளாகிய எழுத்து, அசை, சீர், தளை முதலியவற்றையும் பாக்களையும்

அவற்றின் இனங்களையும் விளக்கிக் கூறும்; பாட்டியல் களோ பிரபந்தங்களின் வகையினையும், அவற்றின் இலக் கணங்களையும், அவற்றைப் பாடவேண்டிய முறையையும், பாடுதற்குரிய நால்வகை வருணத்தாரையும், அவர்களுடைய இயல்புகளையும், பாட்டுடைத் தலைவர் நூல் கேட்கவேண்டிய முறையையும், அரங்கேற்றுதற்குரிய அவையின் இயல்பினை யும், புலவர்களின் வகையினையும் விரிவாகக் கூறும்.

தமிழ் மொழியில் இதுவரையில் பல பாட்டியல்கள் அச் சேறி வெளிவந்துள்ளன. வெளிவாராதனவும் பலவுள. அவற்றுள் சில அழிந்தும் போயின. அவற்றின் பெயர்களும் சில சூத்திரங்களுமே இப்பொழுது நமக்குத் தெரிய வருகின் றன. *தத்தாத்திரேயர் பாட்டியல் என்பது பெயரளவில் மட்டும் இன்று அறியக் கிடக்கின்றது. பண்டாரப் பாட்டியலின் சில சூத்திரங்களே இப்போது கிடைத்துள்ளன. அவையும் வெளிவரவில்லை. பிரபந்தத் திரட்டு, பிரபந்த தீபம் என்பன முற்றிலும் கிடைத்துள்ளன எனினும் இன்னும் அச்சிடப் பெறவில்லை.

நவநீதப் பாட்டியல் என்னும் இந்நூல் நவநீத நடனா என்னும் புலவர் பெருமானால் இயற்றப் பெற்றதாகும். இது பொருத்தவியல், செய்யுண் மொழியியல், பொது மொழியியல் என்னும் மூன்று உறுப்புக்களையுடையது. இதன்கண் இலக்கணம் கூறப்பட்ட பிரபந்தங்களின் பெயர்களை 93-ஆம் பக்கத்திற் காணலாம். இதன் சூத்திரங்கள் கட்டளைக் கலித்துறையினால் அமைந்தவை.

முதலில் இலக்கண நூல்கள் நூற்பாவாலும் வெண்பா வாலும் இயற்றப் பெற்றன. பிற்காலத்தில் கட்டளைக் கலித்துறையால் இயற்றப்படும் வழக்கம் தோன்றியது. யாப்பருங்கலக் காரிகை, வீரசோழியம், களவியற் காரிகை முதலி யன கட்டளைக் கலித்துறையால் ஆனவை. நூல்களில் அடங்கியுள்ள கிரந்தங்களின் கணக்கை எடுத்துக் கூறுவது வடமொழியை ஒட்டி எழுந்த வழக்கமாகும். இந்தக் கணக் கெடுப்பதற்குக் கட்டளைக் கலித்துறை உதவுகிறது. நூல் களில் இடைச் செருகல்கள் நேராவண்ணம் ஆசிரியர்கள் சூத்திரங்களின் கணக்கைக் கூறுவதும், நூலை அந்தாதித் தொடையால் அமைப்பதும், இயல்களின் ஈற்றில் முதனினைப்

---

* தம் ஆசிரியருள் ஒருவரான செங்கணம் ஸ்ரீவிருத்தாசல ரெட்டியாரவர்களிடம் இந்நூலைப் பாடங் கேட்டிருப்பதாகவும், இது, விருத்தங்களால் அமைந்துள்ளதென்றும் டாக்டர் ஐயரவர்கள், 'சங்கத் தமிழும், பிற்காலத் தமிழும்' என்னும் நூலில் தெரிவித்திருக்கிறார்கள்.

புச் சூத்திரங்களைச் சேர்ப்பதும் தமிழில் ஒரு வழக்கம். கட்டளைக் கலித்துறையால் இயன்றமை பற்றி நவநீதப் பாட்டியலாகிய இந்நூலுக்குக் கலித்துறைப் பாட்டியல் என்ற ஒரு பெயரும் வழங்கி வரலாயிற்று.

இந்நூலிற் காணப்படும் கலித்துறைகளின் தொகை 108. சில செய்யுட்களின் அமைப்பை நோக்கும்போது இடைச் செருகல்கள் அவ்வப்போது ஏற்பட்டிருக்கலாமென்பது தெரியும்.

நவநீதப் பாட்டியலுக்கு முதனூல் அகத்தியனர் அருளிச் செய்த ஒரு பாட்டியலாகு மென்பது இந்நூலின் சிறப்புப் பாயிரத்தால் விளங்கும். பன்னிரு பாட்டியலில் அகத்தியர் பாட்டியல்* (55) என்ற பெயர் வந்துள்ளமையால் அகத்தியரால் இயற்றப் பெற்ற பாட்டியல் ஒன்று உண்டென்று ஊகிக்கலாம். அகத்தியனர் இயற்றியது பருணர் பாட்டியல் என்று நவநீதப்பாட்டியலின் சிறப்புப் பாயிரச் செய்யுளின் உரை கூறுகிறது (பக். 3.) மேலும் இந்நூலின் உரை பலவிடங்களில் அகத்தியரைப் பாராட்டியுள்ளது. ஆதி அகத்தியர் வேறு இவ்வகத்தியர் வேறு என்பது சிலர் கருத்து. இது வழிநூலென்பது, 'முதனூன் மொழிந்த நெறி, கேட்டுத் தெரிந்து கொள்' (65) என்பதனுலும் தெரியவரும்.

டாக்டர் ஐயரவர்கள் தொகுத்து வைத்துள்ள நூல்களுள் நவநீதப் பாட்டியல் சம்பந்தமான கடிதப் பிரதியொன்றும், மூலமும் உரையும் உள்ள ஏட்டுச் சுவடிகள் மூன்றும், மூலமட்டும் உள்ள ஏட்டுப்பிரதி யொன்றும் இருந்தன. கடிதப்பிரதி மூலமும் உரையும் அடங்கிய சுவடியைப் பார்த்து எழுதியது. அதில் அவர்கள் முக்கியமான சில திருத்தங்களைச் செய்திருக்கிறார்கள். அதன் தொடக்கத்தில் அவர்கள், 'சொந்தம். இந்நூலுக்கு உரைகள் இரண்டு உண்டு' என்று குறித்துள்ளார்கள். இதனுல் இதற்கு இருவர் தனித்தனியே உரைகள் இயற்றி யிருக்கிறார்கள் என்பது தெளிவாயிற்று. ஓர் உரை மிகவும் பழமையானது என்பது அதில் எடுத்தாளப்படும் நூல்களால் விளங்கும். அவற்றிற் பெரும்பாலனவற்றைக் காலத்தால் முற்பட்ட வெண்பாப் பாட்டியலின் உரைகாரர் கூட எடுத்தாளவில்லை. வெண்பாப்பாட்டியலைப் பற்றி இந் நூலுரையால் ஒன்றும் அறிவதற்கில்லை. மேலும் இந்நூலின் போக்கு வெண்பாப் பாட்டியலை ஒட்டியிராமல் பல விடங்களில் மாறுபட்டுள்ளது.

---

*இங்கே குறிக்கப்படும் எண்கள் கலித்துறை எண்களைக் காட்டும்.

இரண்டு உரைகளுள் கடிதப் பிரதியிலுள்ளது விரிவான உரை ; பல மேற்கோட் சூத்திரங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அவ் வுரையால் தெரியவரும் நூல்களாவன :— அகத்தியனார் ஆனந்த வோத்து (84-6), அணியியல் (105), அவிநயனார் கலாவியல் (96), இந்திர காளியம் (6, 22-3, 92), கல்லாடம் (35, 83, 93), கல்லாடனார் கலாவியல் (92), கல்லாடனார் வெண்பா (92), செய்யுள் வகைமை (33, 36, 42, 68, 96, 99, 104), திருப்பிரவாசிரியர் தூக்கியல் (104), தொல்காப்பியனார் [செயத பாட்டியல்] (21), தொல்லாசிரியர் [செய்தது] (101), பருணர் பாட்டியல் (3, 7, 26, 31, 73, 84, 87, 104-5), பிங்கல சரிதை (66), பொய்கையார், பொய்கையார் கலாவியல், பொய்கையார் பாட்டியல் (10, 31, 44, 75, 81, 92), மாமூலம் (5, 6, 22, 35, 68, 82, 87, 104), முந்திரியார் வஞ்சினம் (67), முள்ளியார் கவித்தொகை (34-6, 38, 40, 48), வாமன சரிதை (66.). இவற்றுள் †பருணர் பாட்டியல் சில விடங்களில் பருணப் பாட்டியல், பருணிதர் பாட்டியல் என்றும் காணப்படுகிறது. நவநீத நடனார் தம் நூலுள் இரண்டு இடங்களில் (46, 96) 'தொன்னூல் பருணிதர்' என்ற தொடரை ஆண்டுள்ளார். பன்னிரு பாட்டியலில் பரணர் செய்தனவாகப் பல சூத்திரங்கள் காணப்படுகின்றன. அவற்றுள், 'காப்பு முதலெடுக்கும்' (184) என்னும் சூத்திரம் இந்நூல் 26-ஆம் சூத்திரத்தின் உரையில் பருணர் பாட்டியலைச் சேர்ந்ததாகக் காணப்படுகிறது.

உரையுள்ள சுவடிகளுள் ஒன்றில், பலவிடங்களில் பிழை மலிந்துள்ளது விட்டுப் போன தொடர்களும் பல. இதனால் உரையிலும் மூலத்திலும் காணப்படும் ஐயங்கள் இன்னும் விளக்க மடைவதற்குரிய நிலையில் உள்ளன. விரிவான இந்த உரையை இப்பதிப்பில் 'உரை I' என்று குறித்துள்ளோம். இவ்வுரை யாசிரியர் 66 ஆங் கலித்துறைக்கு உரை எழுதும் போது தண்டியலங்காரத்திலிருந்து மேற்கோள் காட்டியிருப்பதால் அந்நூலாசிரியருக்குப் பிற்பட்டவராக இருக்கலாமென்று தோன்றுகிறது.

மற்றோர் உரை அத்துணைச் சிறப்பினதன்று. அதில் நூல் 81 கலித்துறைகளைக் கொண்டு முடிந்துள்ளது. உரை I இல் உள்ள மூலபாடத்தோடு அதில் உள்ள சில பாடங்கள்

---

† 'சங்கத்தமிழும் பிற்காலத்தமிழும்' என்னும் நூலில் வாருணப் பாட்டியல் என்னும் நூலொன்று கூறப்பட்டுள்ளது ; அஃது இதுதானோ வேறோ என்பது தெரியவில்லை.

மாறுபடுகின்றன. ஆதலால் அவை இப்பதிப்பில் பிரதிபேதமாகச் சேர்க்கப் பெற்றுள்ளன. அவ்வுரையைப் படிக்கும்போது பல விடங்களில் பிரதிபேதத்தை மூல பாடமாகக் கொள்ள வேண்டும். இப்பதிப்பில் அவ்வுரை* உரை II எனக் குறிக்கப்பட்டுள்ளது.

உரை I உள்ள பிரதியில் இல்லாத கலித்துறைகளை உடுக்குறி (*) இட்டும், உரை II உள்ள பிரதியில் இல்லாத கலித்துறைகளைச் சிலுவைக்குறி (†) யிட்டும் தெரிவித்துள்ளோம். முதலுரை கூறும் விஷயத்தையே இரண்டாம் உரையும் கூறுமிடங்களைப் புள்ளிகள் இட்டு நீக்கி அவசியமான பகுதிகளை மட்டும் காட்டியுள்ளோம். இவ்வுரைப் பிரதிகளினால் மூல பாடம் பலவகையில் திருத்த முற்றிருக்கிறது. இரண்டாம் உரைப்படி அமைந்த மூலப்பிரதி யொன்றும் இப்பதிப்பிற்கு உதவியாக இருந்தது. மூலத்திலும் உரையிலும் காணப்படும் சில தொடர்கள் வழுவுள்ளனவாகத் தோன்றினமையின் அவற்றின் திருத்தங்களைச் சில விடங்களில் குறிப்புரையில் காட்டியுள்ளோம். 85-ஆம் கலித்துறையின் ஈற்றுச்சீர் 'உவமைகளே' என்றிருப்பின் சிறப்புடையதாகும். ஆயினும் அது கிடைத்த எல்லாப் பிரதிகளிலும் 'உறுப்புக்களே' என்று காணப்படுகிறது. 93-ஆம் சூத்திரத்தின் உண்மை வடிவம் புலப்படவில்லை. மேற்கோட் சூத்திரங்களிலும் பலவற்றின் உண்மை வடிவம் புலனாகவில்லை. மேற்கோட் சூத்திரங்களுட் பலவற்றைத் தந்து 'என்பது தண்டியலங்காரம்' என்று ஒருமை தோன்ற எழுதப் பெற்றுள்ள இடங்கள் பல. அவற்றை மாற்ற வேண்டுவது அவசியமாயினும் அக்காலத்து உரைநடை புலப்படுவதற்காக அவை அங்ஙனமே பதிப்பிக்கப் பெற்றுள்ளன. 92-ஆம் சூத்திரவுரையில் 'மாபுராணம்' என்ற பெயர் காணப்படுகிறது. அந்நூலினின்றும் எடுத்துக் காட்ட வேண்டிய மேற்கோட் சூத்திரம் பிரதி செய்தவரால் எழுதப்படாமல் விட்டுப் போனது வருந்தத்தக்கது.

உரையில் மிகையாகத் தோன்றும் பகுதியை [ ] என்ற பகரக் குறிகளில் அமைத்தும் முதலுரையிலும் மேற்கோட் சூத்திரங்களிலும் விட்டுப் போன பகுதியை ............ என்ற புள்ளிகளிட்டுக் காட்டியும், விட்டுப்போனவற்றுள் தெரிந்த

---

* இவ் வுரையின் 18 கலித்துறைகள் அடங்கிய ஒரு பகுதி 'நவநீதப் பாட்டியல்' என்ற பெயருடன் 'பாட்டியற் கொத்து' என்ற நூலில் சேர்க்கப் பெற்று 1908-ஆம் ஆண்டில் வெளி வந்துள்ளது.

வற்றை ( ) என்ற பிறைக்குறிகளில் புலப்படுத்தியுள்ளோம். உரையில் ஐயமாக உள்ள இடங்களை வினாக் குறியிட்டுக் காட்டியுள்ளோம்.

டாக்டர் ஐயரவர்கள் தாம் அச்சிடவேண்டிய நூல்களுள் இதனை ஒன்றாகக் குறித்து வைத்திருத்ததும், இதுவரை வெளிவந்த அச்சுப் புத்தகங்களுள் முழுப்பாகமும் உரைகளுடன் இல்லாமையுமே இப்பதிப்பை நாங்கள் வெளியிடக் காரணமாயின. அவர்கள் காலத்திலேயே இது நிறைவேறியிருப்பின் மிகச் செவ்விதாக அமைந்திருக்கும் என்று நாங்கள் உரைப்பது மிகையாகும்.

ஐயரவர்கள் பெயரால் அடையாற்றில் நிறுவியிருக்கும் நூல் நிலையத்தின் இரண்டாம் வெளியீடாக இப்போது இது வெளிவருகிறது.

இந்நூல் நிலயத்துக்குப் போதிய நிதி இல்லாமையால் நூல்கள் வெளியிடும் பொறுப்பு முழுவதையும் இந்நூல் நிலயத்தின் அத்யக்ஷரும், அடையாறு கலாக்ஷேத்திரத்தின் தலைவருமாகிய ஸ்ரீமதி ருக்மிணி தேவியாரவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். தமிழ் மொழியினிடத்து மிக்க அன்பு கொண்டு அதன் வளர்ச்சிக்காக அருந்தொண்டாற்றி வரும் அவர்களுக்குத் தமிழுலகம் பெரிதும் கடமைப் பட்டுள்ளது.

வேண்டிய ஆதரவு இருந்தால் இன்னும் வெளிவர வேண்டிய நூல்கள் ஒவ்வொன்றாக வெளிவரும் என்பதை நாங்கள் தமிழன்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இந்நூல் பதிப்பிக்கப்பெற்று வருகையில் அவ்வப்போது பல ஆலோசனைகள் கூறியும் பல திருத்தங்களைச் செய்து கொடுத்தும் உதவிய சென்னை, கிறிஸ்டியன் காலேஜ் ஹைஸ்கூல் தமிழாசிரியராகிய ஸ்ரீ வி. மு. சுப்பிரமணிய ஐயர் B. O. L. அவர்களுக்கு நாங்கள் மிக்க நன்றி பாராட்டுகிறோம்.

மகாமகோபாத்தியாய டாக்டர்<br>உ. வே. சாமிநாதையர் நூல் நிலயம்<br>அடையாறு,<br>10-10-44

இங்ஙனம்,<br>S. கலியாணசுந்தர ஐயர்.<br>ச. கு. கணபதி ஐயர்.

## இரண்டாம் பதிப்பின் முகவுரை.

இவ்வரிய நூலின் இரண்டாம் பதிப்பினை நூல்நிலையம் வெளியிட அனுமதித்த கலாக்ஷேத்திரத்தின் தலைவர்க்கு எம் மனமார்ந்த நன்றி. இது அச்சாகும் போது புரூப் பார்த்து உதவிய அன்பர் ஸ்ரீ T. K. இராமாநுஜதாசர் அவர்களுக்கும், இதனை அச்சிட்டு உதவிய ரத்தினம் (பிராஞ்ச்) அச்சகத்தாருக்கும் எம் கடப்பாடு உரியது.

1—12—61. நூல் நிலையத்தார்.

---

## நூலாசிரியர் வரலாறு

சிறப்புப் பாயிரத்தால் இந்நூலை இயற்றியவர் நவநீத நடனார் என்பது புலனாகும். நவநீதநடன் என்பது கண்ண பிரானைக் குறிக்கும் பெயர்களுள் ஒன்று (இந்நூல் 3-ஆம் பக்கத்திலுள்ள குறிப்புரையைக் காண்க.) இவர் வாழ்ந்து வந்தது நவநீதநாடு என்று உரை கூறும். கம்பநாடு, கம்பர் என்ற பெயர்களுக்குள் தொடர்பிருத்தல் போல, நவநீத நாடு நவநீத நடன் என்ற பெயர்களுக்குள்ளும் தொடர்பு காணப் படுகிறது. இந்நாடு இன்ன இடத்திலுள்ளதென்று இப் பொழுது தெரியவில்லை.

இந்நூலின் உரை இவரை அரிபத்தர் (திருமாலின் அடியார்) என்று குறிக்கின்றது. இவருடைய பெயரும், நூலின் தொடக்கத்தில் திருமாலின் விஷயமாக இவர் கூறும் காப்பும் இதனை வலியுறுத்தும். திரிசிரபுரம் மகாவித்வான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளை யவர்களிடம் பயின்ற வித்வான் சுப்பராய செட்டியாரிட மிருந்த நவநீதப் பாட்டியல் ஏட்டுப் பிரதி யொன்றில்,

> 'கரிமுகத் தண்ணல் கடவுள ரைங்கரக் கணபதியைப்
> பரிவுரை மாமலர் சாத்திப் பணிந்துள பாவினத்தை
> அரிமத ஞன நவநீத னென்னு மியான்வகுத்த
> உரைசெயி லக்கண நவநீதப் பாட்டிய லுலகினுக்கே'

என்று ஒரு பாட்டு காணப்படுகிறதென்று ஐயரவர்கள் தம் கைப்படக் குறித்துள்ளார்கள். இச் செய்யுளின் தனி பிழை

பட்டிருந்தும், நவநீத நடனுர் வைணவ மதத்தவரென்பதும் வேறு கடவுளரிடத்தில் அவருக்குத் துவேஷ புத்தியில்லை யென்பதும் இக் கவியினுற் புலனுகின்றன. சிறப்புப் பாயி ரத்திற் காணப்படும், 'வேதத்தவன்' என்ற சொல் இவர் அந்தணராவர் என்பதனைக் காட்டும்.

இவர் தமிழ் மொழியில் நல்ல புலமை வாய்ந்தவர்; அதனிடத்து நிறைந்த பற்றுள்ளவர். தம் மொழியை, 'வேத முனிநாவார் தமிழ்' என்று இவர் கூறுகின்ருர். அகத்திய முனிவரைப் பல விடங்களிற் பாராட்டுகிருர். 'ஓதுவர் தொன் ணூற் பருணிதரே', 'அறைவர் கற்ருேர்', 'நாவலர் ஓதி னரே', 'சான்றவர் கொள்ளார்', 'புலவரெல்லாரும் இயம்பு வாரே' போன்ற தொடர்களைப் பெரும்பாலும் ஒவ்வொரு செய்யுளிலும் பெய்து கூறுவது இவருக்கு இயல்பு. இவருடைய கலித்துறைகள் உரையின் துணையின்றி எளிதில் பொருள் விளங்குவனவாக அமைந்துள்ளன.

# கலித்துறைப் பாட்டியல்

## என்னும்

# நவநீதப் பாட்டியல்

தற்சிறப்புப் பாயிரம்

1. கார்கொண்ட மேனிக் கறைகொண்ட நேமிக் கமலக்கண்ணன்
பார்கொண்ட பாதத்தை யேந்திப் [1]பகருவன் பாட்டியலைத்
தேர்கொண்ட வல்குற் றுடிகொண்ட சிற்றிடைச் செந்துவர்வாய்
வார்கொண்ட பூண்முலை வேல்கொண்ட வாள்விழி வாணுதலே.

(உரை I). *என்பது சூத்திரம் என்னுதலிற்றோவெனின் சிறப்புப்பாயிரம் உணர்த்துதல் நுதலிற்று.*

"வணக்கம் அதிகாரம் என்றிரண்டுஞ் சொல்லச்
சிறப்பென்னும் பாயிர மாம்" (பழஞ் சூத்திரம்)

*'கார் கொண்ட' என்றெடுத்து 'ஏத்தி' எனவே, பதயவ வணக்கமாயிற்று; 'பகருவன் பாட்டியலே' எனச் செயப்படு பொருளாயிற்று; 'தேர்கொண்டவல்குல்' என்பது முதலாக மகடூஉ முன்னிலை, செய்யுளை நோக்கி வந்தது.*

(உரை II). *மேக வண்ணமாய் இருக்கப்பட்ட திருமேனியையும், இரத்தம் தோய்ந்து சத்துருக்களைச் சயித்த சக்கராயுதத்தையும், தாமரைப் பூவையொத்த கண்ணையும் உடைய வனான ஸ்ரீவாசுதேவனுடைய பூமியை அளந்துகொண்ட திருவடியைத் தோத்திரம் பண்ணிப் பாவும் பாவினமும் கூட்டிப் பாடுகின்ற பிரபந்தங்களுக்கு இலக்கணம் சொல்லுவன், தேர் போன்ற.......நுதலையுமுடையாய், கேட்பாயாக என்றவாறு.*

*அஃதேல், இதனுள் மகடூஉ முன்னிலை என்று சொல்லப் படுவது யாரையோவெனின், சத்தி தேவியைச் சேவிக்கப் பட்ட பெண்கள் பதினாறு பேருண்டு; அவர்கள் பேர் மாலினி, மோகினி, யோகினி, போகினி, வீணி, பராயணி, கபாலி, கபாலயோசனி, அற்புதை, விந்தை, [2]அனிதை, வனிதை,*

(பி - ம்) [1] 'பகர்குவன்' [2] 'அணிதை'

வாசலை, மாயி, வராகி, நாரணி. இப்படிச் சொல்லப்பட்ட பதினாறு சத்திகளில் அதிபாக்கியமுள்ள மாலினி சத்தி என் பாளையே இலக்கணங்களுக்கு முன்னிலையாக வைப்பது என்று அறிக.

(குறிப்பு). பாட்டில் - பிரபந்த இலக்கணம்; பாட்டு - பிரபந்தம் ஆகுபெயர். இயல்-இலக்கணம். பதினாறு சத்திகள்: ஜயை; விஜயை. அசிதை, பராசிதை, நிவிருத்தி. பிரதிட்டை, வித்தியை, சாந்தி. இந்திகை, தீபிகை, ரோஸிகை, மோஷிகை, வியோமரூபை, அனந்தை, அநாதை அநாஸ்ததை; மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் சொல்லகராதி (1)

அவையடக்கம்

2. *சகத்தினில் முத்தமிழ் தன்னையுண் டாக்கிமுச் சங்கத்திலும்
அகத்திய மாமுனி யாக்கிய பாட்டியல் ஆனபௌவம்
நீகழ்த்துகை மின்மினி யாதித் தனுக்கு நிகரொக்குமென்
றுகப்பது [1]போலுமன் றேபுல வோர்முன் உரைப்பதுவே.

(உரை II). எ - து); அகத்திய பகவான் முதற்சங்கம் கபாடபுரத்தில் உண்டாக்கிய காலத்திற் சங்கப்பலகை ஏறினவர்கள் நாலாயிரத்துத் தொளாயிரவரும், நடுங்கங்கம் உத்தர மதுரையிலுண்டாக்கிய காலத்தில் சங்கப்பலகை ஏறியவர் நானூற்றுத் தொண்ணூற்றுவரும் கடைச் சங்கம் சிறு மதுரையிலுண்டாக்கிய காலத்திற் சங்கப்பலகை ஏறினவர்கள் நாற்பத்தொன்பதின்மருமாக முச்சங்கத்திலும் ஏறின புலவர்கள் ஐயாயிரத்து நானூற்று முப்பத்தொன்பதினமர் களால் ஆராயப்பட்ட இந்தப் பாட்டியலை நான் உரைப்பது எதுபோலவெனில், ஆதித்தன் பிரகாசத்துக்கு மின்மினி வண்டு சமமென்று உவக்குமாறு போலவாம் எ று.

(கு-ரை.). முதற்சங்கம் கடல்கொண்ட மதுரையிலும் இடைச்சங்கம் கபாடபுரத்திலும் இருந்தனவென்பதே பெருவழக்கு. புலவர் தொகையும் வேறுபடும்.

(பி - ம்.) [1] 'போலுமென்றே'

---

* இக்குறியிட்ட சூத்திரங்கள் உரை I பிரதியில் இல்லை,

சிறப்புப் பாயிரம்

3\. ஈட்டிய வெண்ணெண் கலையோ டியலிசை நாடகமும்
காட்டிய போதக் குறுமுனி [1]யாதி கலைஞர்கண்ட
பாட்டிய லானவை யெல்லாந் தொகுத்துப் பயன்படவே
நாட்டிய வேதத் தவனவ [2]நீத நடனென்பரே.

(உரை II). *எ - று. அளவில்லாமல் இருக்கப்பட்ட அறு பத்துநான்கு கலைகளையும் ஆராய்ந்து, இயலிசை நாடக மென்று முத்தமிழையும் உரைத்த குறுமுனியாகிய அகத்திய முனிவர் திருவாக்கில் உண்டாக்கப்பட்ட* [3] பருணர்பாட்டியல் *என்னும் பரப்பினை விரிந்த நூலுணர் மேதினியோர்க்குப் பயன்படப் பாட்டியலென்று தொகுத்துரைத்தான் நவநீத நாட்டு அரிபத்தனென சிறப்புப் பெயருடைய ஆசீர்வாத முள்ளான் நவநீத நடனென்னும் இயற்பெயரையுடையோன் எ - று.*

(கு - ரை.). பருணர்பாட்டியல் என்ற ஒன்றை அகத்திய முனிவர் செய்ததற்கு இவ்வுரையன்றி வேறு ஆதாரம் இதுவரையிலும் தெரிய வில்லை. இந்நூலாசிரியர் அரிபத்தரென்பது இவ்வுரையால் மட்டு மன்றித் தற்சிறபபுப்பாயிரத்தில் திருமால் வணக்கம் கூறப்படுவதாலும், நவநீத நடன் என்ற பெயராலும் புலனாகும். நாட்டிய வேதத்தவன் - நிலைபெறச்செய்த மறையவன். நவநீதநடன் என்பது கண்ணபிரா னுக்கு அமைந்த பெயர்களில் ஒன்று ; நவநீதம்-வெண்ணெய் ; வெண் ணெய்க்காக நடஞ்செய்தவன் ; 'பாவையர் மனைதொறும் வெண் ணெய்க் காடினனை '; 'நறு வெண்ணெய் ஆயர் மங்கைய ரிடவிட வமுதுசெய் தாடிய திருக்கூத்தும் ' (வி. பா. இராச. 119. நச்சுப். 1.). என்பர் - என்று சொல்லுவர். ஏ : அசை. ' நடத்தினனே ' என்ற பாடப்படி, ' நவநீதன் தொகுத்துப் பயன்படநடத்தினன்' எனக் கூட்டுக ; நடத்தினன் நிமழ்த்தினன் ; " யானு நடாத்துகின் றேனென் றெனக்கே நகைதருமால் " (யா. கா. தற்சிறப்பு. 2.). இவ்வுரை கொள்ளுமிடத்து, ' நாட்டிய வேதத்தவன் ' என்பதற்கு, ' நாட்டிய சம்பந்தமான வேதத்தையுடையவன் ' என்று பொருள் கொள்ளுக. ' நாட்டிய வேதா ' என்ற தொடர் வடமொழியில் அந்தணர் முதலிய பல சாதியினர்க்கும் வழங்கப்பெறும். (2)

[நாட்டிய வேதத்தினன், நட்டுவனைக் குறிப்பதும் ஆம்].

(பி - ம்.) [1] 'யாகக்' [2] 'நீத நடனென்பனே', 'நீத னடத்தினனே', 'நாட்டு நவநீதனே ' [3] ' பருணப் பாட்டியல் '

பாயிரமும் அவையடக்கமும் முற்றும்.

# 1. பொருத்தவியல்

.முதன்மொழிப் பொருத்தம்

1. மங்கலஞ் சொல்லெழுத் தெண்ணிய தானம் வருமிருபாற்
பொங்கிய வுண்டி வருணம் பகுத்திடு நாட்பொருத்தம்
தங்கிய நாற்கதி யெண்கண மென்று தமிழ்தெரிந்தோர்
இங்கிவை பத்தும் முதன்மொழி யாமென் [1]றியம்புவரே.

*(உரை I). எ-து. சூத்திரம்; எ-ன், மங்கலம் முதல் கணம் ஈறாகக் கிடந்த பத்தும் முதன்மொழி யென்பது உணர்த்....று. அவைதாம் மங்கலம், சொல், எழுத்து, தானம், பால், உணவு, வருணம், நாள், கதி, கணம் என இவை பத்தும் எ - று.*

*(உரை II). ஒருவன் ஒரு பிரபந்தம் பாடுமிடத்து மங்கலம்....கணம் என்று சொல்லப்பட்ட பத்துவகைப் பொருத்தமும் பிரபந்த முதற்சீர்க்கண் உண்டாக்க வேண்டுமென்று சொல்லுவர்.*

(கு - ரை.). இருபால் : ஆண் பெண் அலி எனப் பால் மூன்றாக (சூ. 7) இருக்க இங்கே இருபால் என்றது முதன்மொழிப் பொருத்தத்துக்கு ஏற்ற ஆண் பெண் பால்களை நினைத்தென்க. பொருத்தமென்பதை இடைநிலை விளக்காகக் கொண்டு மங்கலம் முதலிய ஏனை ஒன்பதனோடுங் கூட்டுக. நாற்கதி ; சூ. 20, 21. எண்கணம் - எட்டுக்கணம் ; 22-3. (1)

(பி - ம்.) [1] 'றியம்பினரே'

மங்கலப் பொருத்தம்

2. திருமணி பூத்திங்க ளாரணஞ் சொற்சீர் எழுத்துப்பொன்றேர்
வருபுனல் கார்புயல் மாநிலங் கங்கை மலையுலகம்
பரிகடல் யானை பருதி யமுதம் புகழ்முதற்சீர்க்
குரியநன் மங்கலம் சொல்லென்று நாவலர் ஓதினரே.

*(உரை I). எ - ன், திரு, மணி, பூ, திங்கள், ஆரணம், சொல், சீர், எழுத்து, பொன், தேர், புனல், கார், புயல், நிலம், கங்கை, மலை, உலகம், பரி, கடல், ஆனை, பருதி, அமுதம், புகழ் ஆக இருபத்துமூன்று மங்கலச் சொல் முதற்சீருக்கு வைக்கலாம்,*

புகழ் சீர்த்தி கீர்த்தி எனலும் ஆம்.

தேர், பரி, களிறு, ஆரணம், ஞாயிறு என்பன எல்லாரும் உடன்படாமையினால் சிறப்பில்லையெனத் தெரிந்து கொள்க. இவை பிறவும் சொன்னவற்றினோடு கொள்க.

" சங்கு சக்கரம் மதியம் அரிமா
இடபம் வெள்ளம் அரசன் நிறைகுடம்
தோட்டி விளக்கு வட்டி கடல்சூலம்
நாவாய் தாமரை (?)
செயிர்தீ ரிலேகை திருப்பொறி யாகும்"

இவையும் முதன் மங்கலச் சொல்லுக்கு வைக்கப்படும் எ - று.

(உரை II). திரு........புகழ் என்று சொல்லப்பட்ட இருபத்துமூன்று சொல்லும் ஒரு பிரபந்தத்துக்கு முதற்சீர்க்கண் வைக்கலாம். வைக்குமிடத்துப் பாட்டுடைத் தலைவன் பெயர் முதலெழுத்துக்கும், பிரபந்த முதற்சீர் முதலெழுத்துக்கும் மற்ற ஒன்பது பொருத்தமும் உண்டாகிய மங்கலச்சொல் வைத்துக்கொள்க.

(கு - ரை). சீர்த்தி கீர்த்தி என்பன புகழின் பரியாயப் பெயர்கள். 'பரியாய நாமம் வரினும் இழுக்காது' (வெண்பாப். 1, 2, உரை). மங்கல மொழி அடையடுத்து வருதலுமுண்டு (முருகு. 1, அடிக்.); "சங்கு சக்கரம் .........யாகும்" : இது சிறிது வேறுபாடுகளுடன் திவாகரம் 12-ல் கீழ்வருமாறு காணப்படுகிறது :

'சங்கு சக்கரம் மதியம் அரிமா இடபம், வேழ மாசநம் நிறைகுடந் தோட்டி, விளக்கு முடிகடல் சூலங் கொடியே, தாமரை செயிர்தீ ரிலேகை திருப்பொறி, யாகு மென்ப ரறிந்திசி னோரே' (2)

சொற் பொருத்தம்

3\. *கங்கையு மானுங் கடுக்கையுந் திங்களும் காப்புடைய
துங்கன் முகினிற வண்ணனும் வேலையிற் றுல்கதிரும்
ஐங்கரத் தற்புதன் றன்னையு மாறு முகத்தனையும்
பங்கயத் தோனையுங் கூறுக பாவிற் பரிவுடனே.

(உரை II). எ - து. சொற்பொருத்தம் ஆமாறு உணர்த் ... று.

ஒரு பிரபந்தம் பாடுமிடத்து முதற்கண் கொலை முதலாகிய சொற்கள் வாராமல் கங்கையையும் மானையும் கொன்றை மாலையையும் சந்திரனையும் தரித்த அரனையும், நெடுமாலையும், ஆதித்தனையும், ஐங்கரக் கடவுளையும், ஆறுமுகத்தானையும், பிரமனையும் முன்னாக வைத்துப் பாட வேண்டும் எ - று.

(கு - ரை) இக்காரிகை சிறப்புடையதாகத் தோற்றவில்லை. (3)

4. † பொருள்தெரி யாமை சிறப்பின்றி நிற்றல் பொருள்பலவாய்
வருமொழி யாதல் வகையுளி சேர்தல் வருஞ்சீருடன்
முரிதரு மீறுடைத் தாத லெடுத்தவச் சீர்செய்யுமேல்
சரிவலை யாயவை தாமமை யாவென்று சாற்றுவரே.

(உரை I). எ - ன், எடுத்த முதற்சீர்க்கு வரும் இழுக்கிவை வாராம லியம்புக எ - று.

எடுத்த முதற்சீர்ப் பொருள் புலப்படாதொழியினும், சிறப்புடைய மங்கலச் சொல்லின்றி மொழியினும், துணிந்து ஒரு பொருளினைச் சொல்லாது பல பொருளாகத் தோன்றி நிற்பினும், சொல்லிறுதி யிலதான வகையுளி யோசையிடினும், முதற்சீரின் ஈற்றெழுத்தும் வருஞ்சீரின் முதலெழுத்தும் சந்தி வகையால் திரியினும், இவ்வழுவுள் யாதானுமொன்று அங்கு வரினும் ஆனந்தம் எ - று.

(கு - ரை) முரிதல் - இங்கே திரிதல். முதன்மொழிக்கு வரும் இழுக்கை வெண்பாப் பாட்டியல் பின்வருமாறு கூறுகிறது:

'வகையுளி சேர்தல் வனப்பின்றாய் நிற்றல், தொகையார் பொருள் பலவாத் தோன்றல்—தகையில் பொருளின்மை ஈறு திரிதலே போல்வ, தருமுதற்சீர்ச் சொற்காகுந் தப்பு.' வகையுளி: பொருள் நோக்காது இசைநோக்கி அடுத்துள்ள இருசீர்களில் ஒருசொல் நிற்குமாறு கூறுதல். (4)

---

† இக்குறியுள்ள சூத்திரங்கள் உரை II பிரதியில் இல்லை.

எழுத்துப் பொருத்தம்

5. மூன்றைந்தே ழொன்ப தெழுத்தாம் வியனிலை யாய்முதற்சீர்
தோன்றிடி னன்றிரண் டீரிரண் டாறெட் டெழுத்துத் தொன்னூல்
சான்றவர் கொள்ளார் சமநிலை யாமென்று தாழ்குழையை
மான்றரு கோல மதர்விழி யோட்டிய வாணுதலே.

(உரை I). *எ-ன், முதற்சீர்க்குரிய எழுத்தவை உணர்த்....று.*

*(இ-ள்). எடுத்த முதற்சீர் வியனிலையாகிய மூன்றெழுத்தானும் ஐந்தெழுத்தானும் ஏழெழுத்தானும் ஒன்பதெழுத்தானும் வரின் அவை ஆகும். சமநிலையாகிய இரண்டெழுத்தானும் நான்கெழுத்தானும் ஆறெழுத்தானும் எட்டெழுத்தானும் வரின் குற்றமாம் எ-று.*

*என்னை,*

"மெய்யுடனாகி(ய) வியனிலை தானே
எய்துஞ் சமநிலை யிழுக்கென மொழிப"

*என்பது* மாமூலம்.

(கு-ரை). வியனிலை - எழுத்துக்கள் ஒற்றைப்படையாக நிற்கும் நிலை; வியம்-ஒற்றைப்படைஎண்; 'வியமெல்லாம் பாலை' (அகநா.செய்யுளடைவைக் குறிக்கும் பாட்டு). சூ. எட்டில் கூறும் வியனிலை சமநிலை வேறு; இங்கே உள்ளன வேறு. எழுத்து, சமநிலையாமென்று கொள்ளாரென்று கூட்டுக. முதற்சீர்க்கு எழுத்தெண்ணிங்கால் மெய்களையும் கூட்டிக்கொள்ளுக. இரண்டெழுத்தான் வருவது ஒன்றின்றி வரும் தேமாச்சீர் என்க; முதிற் சீருக்கு இது கொள்ளத்தக்கதன்று. எடுத்த வச்சீர் என்று முற்சூத்திரத்தில் வருவதை ஈண்டும் தந்து உரை எழுதினர். (5)

தானப் பொருத்தம்

6. குறிலைந்துந் [1]தந்நெடில் கூட்டிஐ ஔஎஒக் கொண்டடைவே
முறைமையிற் பாலன் குமர னரசன்மூப் பேமரணம்
இறையவன் றன்பெயர் தான்பால னுமென எண்ணிவந்த
நெறிமையின் மூப்பும் மரணமும் பாடிடல் [2]நீக்குவரே.

(உரை I). *எ-ன், தானம் ஐந்தும் ஆமாறு உணர்த்...று*

(பி-ம்.) [1] 'நன்னெடில் கூடி' [2] 'நீக்கினரே'

(இ - ள்). இவை கொள்ளுமிடத்துப் பாட்டுடைத் தலைமகன் இயற்பெயர் முதலெழுத்தைப் பால னு க க் கொண்டு, முறையே எண்ணி மூப்பும் மரணமுமாம் வருக்க எழுத்துக்கள் மங்கலச்சொல் முதலெழுத்தின்கண் வரின் அவை அப்பெயர்க்கண் நன்மையாகாவென நீக்குவர் எ - று.

"தன்பெயரெழுத்துப் பால னுக
வந்த மூப்பும் மரணமும் வரைப",—மாமூலம்.

"நட்புதா சீனம் பகையென் றுள்ளம்
ஒப்புடைக் குறிக ளொருமூன் ருகும்."

"பாலன் குமார னிராசத மென்னும்
மூவகைத் தானமும் நட்பென மொழிப."

"விருத்த முதாசீன மரணம் பகையென
எடுத்துப் பகர வேண்டு மென்ப."

(உரை II). பாலன்......மரணம் என ஐந்து வகைப்பட்ட தானம் உண்டு. அவை கொள்ளுமிடத்து முதற்சீர் முதலெழுத்திற் கூடிவரும் உயிரெழுத்து அகரமும் ஆகாரமும் பாலன்; இகரமும் ஈகாரமும் குமரன்; உகரமும் ஊகாரமும் அரசன்; எகரமும் ஏகாரமும் ஐகாரமும் மூப்பு; ஒகரமும் ஓகாரமும் ஔகாரமும் மரணம். இது பார்க்கும் வகை: பாட்டுடைத் தலைவன் பெயர் முதலெழுத்துயிரும் பிரபந்த முதற்சீர் முதலெழுத்துயிரும் ஓர் உயிரெழுத்தாகில் அது பாலன்; தலைவன் பெயர் முதலெழுத்துக்கு இரண்டாவது உயிராகில் குமரன்; மூன்றுவது உயிராகில் அரசன்; நாலாம் உயிராகில் மூப்பு; ஐந்தாம் உயிராகில் மரணம்.

"மூப்பும் மரணமும் மொழிந்த காலை
நிலையிற் குலைதல் செல்வம் நீங்குதல்
கொலையிற் பிணியிற் கூட்டுத லாகும்"

என்பது இந்திரகாளியார் என்னும் ஆசிரியராற் கூறப்பட்டது.

(கு-ரை.) இறையவன்-பாட்டுடைத்தலைவன். உதாரணம்: குலோத்துங்கன் என்ற பெயருக்கு முதல் தானம் உ, ஊ; இரண்டாம் தானம் எ, ஏ, ஐ; மூன்றும் தானம், ஒ, ஓ, ஔ; நான்காம் தானம் அ, ஆ; ஐந்தாம் தானம் இ, ஈ ஆகும். இ வ ற் று ள் முதல் மூன்று தானங்களின் எழுத்துக்கள் நூலின் முதற்சீர் முதலெழுத்தாகக் கொள்ளத்தக்கவையாகும். (6)

பாற் பொருத்தம்

7. குற்றெழுத் தாடூஉ மகடூஉ நெடினல்ல வென்றுகொள்வர்
மற்றெழுத் தாமுயிர் மெய்க்குறி லாணெடில் அவ்வகையே
ஒற்றெழுத் தாய்த மலியென்று பாட்டின்முன் ஓத வொட்டார்
பொற்றொடிச் சிற்றிடைப் போர்வே லயனப் புணர்முலையே.

(உரை I). எ - ன், மூவகைப் பாலும் ஆமாறு உணர்த்....று

(இ - ள்). அ, இ, உ, எ, ஒ இவை ஐந்து குற்றெழுத்தும் ஆடூஉ என்றறியப்படும். ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ இவை நெட்டெழுத்தேழும் மகடூஉ என்று அறியப்படும். இவை இனங்களின் முதற் செய்யுளின் முதலெழுத்தாகக் கொள்க. உயிர்மெய்க்கும் இவ்வாறு. ஆய்தமும் ஒற்றெழுத்தும் அலியாதலான் மொழிக்கு முன் வைக்கப்படா.

"பேடாகும் ஒற்றுக்கள் பெண்ணும் உயிர்மெய்கள்
ஆடூஉ வுயிரென் றறையலாம்—நாடுங்கால்
பெண்ணு மெழுத்தே பெருங்கவியின் முன்னெடுத்துக்
கண்ணுரக் காட்டல் கடன்"

என்று சொன்னாரும் உளரெனக் கொள்க. சொல்லாதலானும் பிற சான்றோர் செய்யுளிடத்து உயிர் முதல்களும் வருதலானும் உயிர் உடன் பட்டாரெனக் கொள்க. ஆரணம், உலகம், அமுதம், எழுத்து என்பன மங்கலம். [சொல்ல வேண்டும் காரணம்] ஆண்பாற் புகழ்ச்சிக்கு ஆணெழுத்தும், பெண்பாற் புகழ்ச்சிக்குப் பெண்ணெழுத்தும் சிறப்புடைத்தென்று சொன்னாரும் உளரெனக் கொள்க.

"ஆண்பாற் புகழ்ச்சிக் காணெழுத் துரிய
பெண்பாற் புகழ்ச்சிக்குப் பெண்ணெழுத் துரிய
அவ்விரு பாற்கு மலியெழுத் தாகா
தம்முள் மயங்கினும் தவறின் றென்ப"

என்பது பருணர் பாட்டியல்.

(உரை II)............ஆண்பாலுக்குப் பெண்பால் எழுத்தும் பெண்பாலுக்கு ஆண்பாலெழுத்தும் வைக்கலாகாது.

உரை I-இல் இனங்களென்று குறிப்பிடப்பட்டவை பன்னிரு பாட்டியலில் இனவியலிற் கூறப்பட்ட நூல்கள் போலும்,

(கு - ரை). குற்றெழுத்து - உயிர்க்குறில். அவ்வகையே—நெட்டுயிரைப் போலப் பெண்பாலாகும். (7)

சமநிலை, வியனிலை

8. *சாற்றுந் தலைவ னியற்பெய ருக்குத் தகும்வகையே
தோற்றும் வியன்வரி லானந்த மாகுஞ்சொல் லாவெழுத்தாம்
ஏற்ற வெழுத்து வரினு மிசைந்த தியற்பெயர்க்கே
ஆற்றும் பொருத்த மனைத்துஞ் சமநிலை யாமென்பரே.

(உரை II). எ-து, உண்டிப்பொருத்தம் ஆமாறுணர்த்....று

பாட்டுடைத் தலைவன் இயற்பெயர் முதலெழுத்து முதலாகத் தொட்டு அவன் பேர் பிரபந்தச் செய்யுளின் முதலெழுத்தளவும் எண்ணி வந்தால் சமநிலையாகில் உத்தமம், வியனிலையாகில் ஆகாதென்று சொல்லுவர் புலவர்.

(கு - ரை). ஆனந்தம் - குற்றம். சொல்லா எழுத்து - முதன் மொழிக்குச் சொல்லத் தகாத எழுத்து. சமநிலை, வியனிலை: சூ.5. I உரைப்பிரதியில் இச் சூத்திரம் வேறு உருவில் அமைந்துளது; சூ. 82. (8)

நஞ்செழுத்தும் அவற்றின் இயல்பும்

9. †கூறு மளபு மகரக் குறுக்கமும் யரலவின்
ஏறுமா வோவும் யரலவொற் றேடுமேழ் நெட்டெழுத்தும்
வேறுள வாய்தமும் நஞ்செழுத் தாகும்வெற் பாதிபத்தின்
ஈறு முதலு மியலப் பெறுவென்பர் ஏந்திழையே.

(உரை I). எ - ன். நஞ்செழுத்தாமாறும் அவற்றின் இயல்பும் உணர்த்........று.

அளபெடையும் மகரக் குறுக்கமும் யா, ரா, லா, யோ, ரோ, லோ எழுத்தும் (பதினெட்டு) ஒற்றும் நெட்டுயிர் ஏழும் ஆய்தமும் என இவை நஞ்செழுத்தாம். (இவை) பாட்டுடைத் தலைமகன் தசாங்கத்தயல் வரப் புணரப் பெறா; எ - று.

"நஞ்செனப் படுமவை ஒப்புட னிற்பின்
துஞ்சுதல் கெடுதலெனச் சொல்லினர் புலவர்."

இவற்றுள் நெட்டெழுத்தேழும் சொன்னாராயினும் எல்லார்க்கும் உடன்பாடன்று.

(கு - ரை.) அளபு : உயிரளபெடை, ஒற்றள பெடை. யரலவின் : இங்கே, யகரம் விட்டிசைத்தது. வெற்பாதி பத்து - மலை முதலிய பத்து; அவை தசாங்கம் ; சூ. 24. இந்நூலாசிரியர் நெடிலை நஞ்செழுத் தென்று கூறுதற் கேற்பச் சிதம்பரப் பாட்டியலார் அமுதவெழுத் தல்லாத வெழுத்துக்களை நஞ்செழுத்தென்பர்; (பொருத். சூ. 4.) (9)

அமுதெழுத்தும் அவற்றின் இயல்பும்

10. †அறிவோ ரமுதெழுத் தாமென் றறைவர் தசாங்கத்தயல்
குறின்முத லன்குங் கசத நபமவக் குற்றளவும்
உறுவன வாயி னுலகோர் புகழ்நன்மை எய்துமென்பர்
சிறுமுறு வற்செங் குமுதத் துவர்வாய்த் திருந்திழையே.

(உரை I). எ - ன்; *அமுதெழுத்தாமாறும் அவற்றின் இயல்பு ஆமாறும் உணர்த்........று.*

(இ - ள்.) *அ, இ, உ, எ என்று சொல்லப்பட்ட நாலும், க, ச, த, ந, ப, ம, வ என்பனவும் ஆகப் பதினொன்றும் அமுதெழுத்தாம். அவை பாட்டுடைத் தலைமகன் தசாங்கத்தயல் வரப் புணர்ப்பின் நன்மையவாம் எ - று.*

"மங்கலமே வியத்தொடு தோன்றினும்
அமுதெழுத் தேவரி னவையுமாங் குரிய ;
மூப்பும் மரணமும் நீக்கலு மமுதொடு
பாட்டுண்டு முறையிற் பயனுகு மென்ப."

பொய்கையார் *முதல் ஒரு சாராசிரியர் அமுதெழுத்தென முதன் மொழிக்கண் நிற்க வென்றோ துகையானும், இவ் வெழுத்துத் தாம் முதலெழுத்தாய் வருதலும் இருவழியும் வருகவென்றூனும் வருவதோர் இழுக்கில்லை எ - று.* (10)

எழுத்துக்களும் தேவதைகளும்

11. விதியவன் முந்நான் குயிர்தரச் செய்ய விரிசடைமேல்
நதியவன் நாரணன் சேயிந் திரன்ஞாலஞ் சூழவரும்
கதியவன் சோமன் தருமன் வருணன் கனகநிதிப்
பதியவ னென்றிவர் மூவா றுடம்பும் படைத்தனரே.

(உரை I) *எ - ன், படைப்பு முறைமை உணர்த்.............று.*

உயிரெழுத்துப் பன்னிரண்டும் பிரமன் படைத்தான்; க, ங அரன்; ச, ஞ அரி; ட, ண குமரன்; த, ந இந்திரன்; ப, ம பருதி; ய, ர மதி; ல, வ நமன்; ழ, ள வருணன்; ற, ன குபேரன் எனக் கொள்க.

(உரை II). எ - து, வருணமென்னும் பொருத்தம் உணர்த்....று.

பன்னிரண்டு உயிரெழுத்தும் பிரமன் படைத்தான்........ றன குபேரன் படைத்தான். இப்படி உயிர் பன்னிரண்டும் மெய் பதினெட்டும் ஆக முப்பது எழுத்துக்கும் தேவதைகள் அறிக. (11)

நாலு சாதிக்கும் எழுத்தும் தேவதையும்

12. காலையன் சந்திர னிந்திரன் கண்டன காவலர்க்கு
மாலையன் சேயரன் கண்டன மாமறை யோர்க்குநீதி
சாலைய னந்தகன் கண்டன ஆகும் வணிகருக்கு
வேலையன் கண்டன [1]வேளாள ருக்கு [2]விலக்கல்லவே.

(உரை I) எ - ன், எழுத்துரிமை யுணர்த்...........று.

ப, ம, ய, ர, த, ந இவை ஆறும் அரசருக்கு. உயிர் பன்னிரண்டும், ச, ஞ, ட, ண, க, ங என்னும் உயிர் மெய் ஆறும் ஆகப் பதினெட்டு எழுத்தும் அந்தணருக்கு. ற, ன, ல, வ இவை நான்கும் வணிகருக்கு. ழ, ள இவை இரண்டும் வேளாளருக்கு. உயிர் மெய் பதினெட்டும் நான்கு சாதிக்குமாம், அடைவே கொள்க. இவை தசாங்கத்தயல் வரையப் படாவெனவே, முன்பு நஞ்செழுத்தென்று பொது வகையாலே விலக்குண்டனவற்றை இம் முறையால் வந்தன வரையார் என, அவற்றுள் சிறுபான்மையால் வருக எ - று.

(உரை II). எ - து.......நான்கு சாதிக்கும் எழுத்துக்களும் தேவதைகளும் ஆமாறுணர்த்........று.

உயிர் பன்னிரண்டும், க, ங, ச, ஞ, ட, ண என்று ஆறெழுத்தும் ஆகப் பதினெட்டெழுத்தும் பிராமணருக்கு உரியன. இவர்க்குத் தேவதை அயனும் அரியும் அரனும் ஆறுமுகக் கடவுளும் காக்கவென்று பாடுக. த, ந, ப, ம, ய, ர,

*என்னும் ஆறெழுத்தும் க்ஷத்திரியருக்கு உரியன. இவர் களுக்குப் பிரபந்தம் பாடுமிடத்து முதற்சீர்க்கண் இந்த எழுத்து வைக்க. இவர்களுக்குத் தேவதை இந்திரன், சூரியன், சந்திரனும் காக்கவென்று பாடுக. ல, வ, ற, ன என்னும் நாலெழுத்தும் வைசியர்க்கு உரியன. இவர் மேற் பிரபந்த முதற் சீர்க்கு இந்த எழுத்து வைத்துப் பாடுக. இவர்களுக்குத் தேவதை குபேரனும் யமராசனும் காக்கவென்று பாடுக. ழ,ள என்னும் இந்த இரண்டெழுத்தும் வேளாளர்க்கு உரியன. இவர்களுக்குத் தேவதை வருணன் காக்கவென்று பாடுக.*

(கு - ரை). காலையன் - பகலைச் செய்யும் சூரியன் ; "காலை சூழ் செங்கதிர்" (தக்க. 279). கண்டன - படைத்த எழுத்துக்கள். விலக் கல்ல என்பதை, காவலர்க்கு முதலிய நான்கனொடும் கூட்டிக்கொள்க. மாலையன் - மாலயன் ; மாலும் அயனும் ; எதுகை நோக்கி ஐகார மாயிற்று. நிதிசால் ஐயன் - நிதிகள் நிரம்பிய தலைவன் ; குபேரன். வேலையன் - கடலுக்குத் தலைவனாகிய வருணன். (12)

(பி - ம்.) [1] 'வெள்ளாளருக்கு' [2] 'விலக்கில்லையே'

நாட்களுக்குரிய எழுத்துக்கள்

13. அகர முதனான்கும் கார்த்திகை மற்றவற் றின்னடைவே
உகர முதலைந்தும் [1]பூராட மாமென ஓதுவர்காண்
ஒகர முதன்மூன்று மோருத்தி ராட முயிர்மெய்யினில்
ககர முதனான்கு மோணமென் றோதுவர் கற்றவரே.

(உரை I). *எ-ன், மொழிதரு முதலெழுத்துக்கு உதாரணம் ஆமாறு உணர்த்...........று.*

*அ, ஆ, இ, ஈ இவை நான்கும் கார்த்திகை; உ, ஊ, எ, ஏ, ஐ, இவை ஐந்தும் பூராடம்; ஒ, ஓ, ஔ இவை மூன்றும் உத்தி ராட மெனக்கொள்க. க, கா, கி, கீ இவை நான்கும் திரு வோணம் எ - று.*

(உரை II). *எ - து, நாட் பொருத்தமாமாறுணர்த்து கின்றது.*

(பி - ம்.). [1]'பூராட முத்திரா டம்மொழிந்த, ஒகர முதன் மூன்று மேய்ந்த உயிரி லுயிர்மெய்யினில்' (13)

இதுவுமது

14. ஏனைக் குகர முதலிரண் டுந்திரு வாதிரையாம்
[1]ஆன வவற்றி னடைவொரு மூன்றும் புனர்ப்பூசமாய்ப்
போனபின் நின்றன மூன்றெழுத் தும்பூசம் என்பபொய்யா
வானக் கருங்குழல் வம்பார் வனமுலை வாணுதலே.

(உரை I). எ - ன், கு, கூ என இவை இரண்டும் திருவாதிரை; கெ, கே, கை இவை மூன்றும் புனர்பூசம்; கொ, கோ, கௌ இவை மூன்றும் பூசம் எ - று.

(பி-ம்.) [1] 'போனற் கெகர முதன்மூன்று மேர்புனர்ப் பூசமென்ப
தானக் கொகர முதன் மூன்றும் பூச மெனத்தகைவர்' (14)

இதுவுமது

15. *ஏய்ந்த சகர முதனா லெழுத்தும் இரேவதியாம்
ஆய்ந்த சுகர முதலைந் தெழுத்தும் அசுபதியாம்
பாய்ந்த சொகர முதன்மூன் றெழுத்தும் பரணியென்பர்
வேய்ந்த ஞகர ஞொகரஞா வான அவிட்டமின்னே.

(உரை I). ச, சா, சி, சீ இவை நான்கும் இரேவதி. சு, சூ, செ, சே, சை இவை ஐந்தும் அசுபதி. சொ, சோ, சௌ இவை மூன்றும் பரணி. ஞ, ஞா, ஞொ இவை மூன்றும் அவிட்டம் எ - று.

(பி - ம்.) [1] 'ஏய்ந்த சகர மிரேவதி நாண்முதல் மூன்றினுக்கு
வாய்ந்த வெழுத்தொரு நான்கைந்து மூன்று
[மவற்றின்வர்க்கத்
தாய்ந்தஞ மூன்று மவிட்டமீ ருயின வஞ்சனத்தைத்
தோய்ந்து குழையைத் தொடருந் தடங்கட் டுடியிடையே.'

உரை I உள்ள பிரதியிற் கண்டது இது. (15)

இதுவுமது

16. ஓதுந் தகர [1]வுயிர்மெய் யிரண்டேழு மூன்றடைவே
சோதி விசாகம் சதயமு மாமென் றுடர்நகர
ஆதியி லாறு மனுடமல் லாதன ஆறெழுத்தும்
ஏதமில் கேட்டைபூ ரட்டாதி யான இருவகையே.

(உரை I). எ - ன், த, தா இவை இரண்டும் சோதி. தி, தீ, து, தூ, தெ, தே, தை இவை ஏழும் விசாகம். தொ, தோ, தௌ இவை மூன்றும் சதயம். ந, நா, நி, நீ, நு, நூ இவை ஆறும் அனுடம். நெ, நே, நை இவை மூன்றும் கேட்டை. நொ, நோ, நௌ இவை மூன்றும் பூரட்டாதி எ - று.

(கு - ரை.) சோதி - சுவாதி.

(பி - ம்.) [1] 'வுயிரிரண்டேழுடன்' (16)

இதுவுமது

17. சொல்லும் பகரத்து ளுத்தர நாண்முதன் மூன்று [1]பற்றிச்
செல்லு மொருநான் கிரண்டாறு சென்றபின் மவ்வருக்கம்
புல்லு மகமிரு மூன்றுமூன் றுயிலி யம்[2]புயலும்
அல்லும் பொருங்குழ லல்லா தனபூரம் ஆயினவே.

(உரை II). எ - ன், ப, பா, பி, பீ இவை நான்கும் உத்தரம். பு, பூ இவை இரண்டும் அத்தம். பெ, பே, பை, பொ, போ, பௌ இவை ஆறும் சித்திரை. ம, மா, மி, மீ, மு, மூ இவை ஆறும் மகம். மெ, மே, மை இவை மூன்றும் ஆயிலியம், மொ, மோ, மௌ இவை மூன்றும் பூரம் எ - று.

(கு - ரை). உத்தர நாள் முதல் மூன்று என்றது உத்தரம், அஸ்தம் சித்திரை நாட்களை. இவற்றுக்குரிய எழுத்துப் பகரத்துள் முறையே நான்கு, இரண்டு, ஆறு (ஆகப் பன்னிரண்டும் ஆகும்). பின் மவ்வருக்கம் - பகரத்துக்குப் பின் வரும் மவ்வருக்கத்தில்.

(பி - ம்.) [1] 'சுற்றிச்' [2] 'புகலும், அல்லுண் கருங்குழ' (17)

இதுவுமது

18. யகரத்துள் யாவுத்தி ரட்டாதி யாமென் றறைவரின்னும்
பகர்வுற்ற மூலம்யூ காரயோ காரத்தின் பாற்படுமால்
வகரத் தொருநான்கு ரோகிணி யேனை மகயிரமாம்
சிகரப் பணைமுலைச் சிற்றிடைப் பேரல்குற் றேமொழியே.

(உரை II). எ - ன், யா உத்திரட்டாதி; யூ, யோ இவை இரண்டும் மூலம்; வ, வா, வி, வீ இவை நான்கும் உரோகிணி; வெ, வே, வை, வௌ இவை நான்கும் மிருகசீரிடமாம் எ - று.

(கு - ரை.) மகயிரம் - மிருகசீரிடம். மேற் சூத்திரங்களில் மொழிக்கு முதலாகும் எழுத்துக்களுக்கே நாள் கூறினர். (18)

நாட்பொருத்தம்

19. மொழிந்தவந் நாட்களை மூவொன்ப தாக்கி அவற்றின்முன்னர்
இழிந்தன வொன்றுமூன் றைந்தே ழிரண்டுநா
[லாறெட்டொன்பான்
அழிந்தன வல்லன வட்டம ராசிவை நாசிகமும்
கழிந்தன நின்றன தாமியல் பாகக் கருதுவரே.

(உரை I). எ-ன், வகுத்த நாட்களைத்தொகுத்துப் பொருத்தம் கொள்ளுமாறு உணர்த்.......று.

பாட்டுடைத் தலைமகன் இயற்பெயரெழுத்து நாளே தொடங்கி முதற்கண் எடுத்த மங்கலச் சொல் முதலெழுத்து நாள் அளவும் வர எண்ணி இவை கொள்ளப்படும் எ - று.

பாட்டுடைத் தலைமகன் இயற்பெயரெழுத்து நாள் முதல் மங்கலச் சொல்லெழுத்து நாளளவும் எண்ணினல் ஒன்று, மூன்று, ஐந்து, ஏழு ஆகா. இரண்டு, நான்கு, ஆறு, எட்டு, ஒன்பது நன்ரும். இப்படி ஒன்பது ஒன்பதாகக் கழித்துப் பார்த்துக்கொள்வதன்றியும், பாட்டுடைத் தலைமகன் இயற்பெயரெழுத்து நாள் ராசிக்கு மங்கலச் சொல்லின் நாள் ராசி எட்டாம் ராசியாய் வரின், அவை மங்கலமாக வைக்கலாகாது. அன்றியும், பாட்டுடைத் தலைமகன் இயற்பெயரெழுத்து நாளின்கால் தொடங்கி மங்கலச் சொல்லின் நாளின் காலளவும் எண்ணினல் எண்பத்தெட்டாங்கால் வரின் அவை வைநாசிகம் என்றறிக. அதுவும் மங்கலச் சொல்லுக்கு ஆகாது எ - று.

(உரை II). எ - து; இக்கவிக்கு முன் கூறிய ஆறு கவியிறைலும் சொல்லப்பட்டபடியே நாம நட்சத்திரம் ஆராய்ந்தறிந்துகொள்க.........பத்தாம் நாள் ஆகில் அனுசேனம் என்று தள்ளப்படும். இப்படிப் பொருந்தப்பட்ட மங்கலச்சொல் வைத்துக்கொள்க. இது நாட்பொருத்தம்.

*பாட்டுடைத் தலைவன் இயற்பெயரெழுத்து ராசிக்கும் மங்கலச்சொல் ராசி எட்டாம் ராசியாகில் அட்டம ராசி என்னும் குற்றமாம். பன்னிரண்டாம் ராசி தோயநாசிகம் என்னும் குற்றமாம். வைநாசிகம் என்பது பாட்டுடைத் தலைவன் இயற்பெயரெழுத்து ராசிக்கு எண்பத்தெட்டாங்காலில் வரும் நாள் எழுத்து. இவையெல்லாம் களைந்து பாட்டின் முதற்சீர் வைத்துக்கொள்க.*

(கு - ரை). பாட்டுடைத்தலைவன் பெயரின் முதலெழுத்துக்குரிய நட்சத்திரத்திலிருந்து செய்யுள் முதலெழுத்தின் நட்சத்திரம் வரையில் எண்ணிவரும் தொகையை ஒன்பதால் வகுத்து எஞ்சிய எண்களுக்கு இப்பொருத்தம் பார்க்க. இராசி: மேடம் முதலிய பன்னிரண்டு ராசிகள். அசுவனி, பரணி, கிருத்திகையின் முதல் கால் ஆக இரண்டேகால் நட்சத்திரம் (நாள்) மேஷத்துக்குரியவை. இங்ஙனம் 27 நாட்களையும் இரண்டேகால் இரண்டேகாலாகப் பன்னிரண்டு இராசிகளுக்கும் பகுத்திடுக. அட்டம ராசி - எட்டாம் ராசிக்குரிய இரண்டேகால் நாள். (19)

கதிப் பொருத்தம்

20. வல்லினங் குற்றெழுத் தீறின்றி யேவரின் வானோர்கதி
மெல்லின மீறின்றி மேவு நெடின்முதல் [1]நான்கும்வந்தால்
[2]சொல்லினர் மக்கட் கதியெனச் சொன்ன மொழிமுதற்கண்
புல்லு மெனினவை யெல்லாப் புலவரும் போற்றுவரே.

(உரை I). *எ - ன், தேவகதியும் மக்கட் கதியும் ஆமாறு உணர்த்........று.*

(இ - ள்.) *வல்லினத்து ஈறு நீங்கலான க, ச, ட, த, ப என்னும் அஞ்செழுத்தும், குற்றெழுத்து ஈறு நீங்கலான அ, இ, உ, எ என்னும் நான்கெழுத்தும் தெய்வ கதி. மெல் லினத்து ஈறு நீங்கலான ங, ஞ, ண ந, ம என்னும் அஞ் செழுத்தும், நெடின் முதலெழுத்தாகிய ஆ, ஈ, ஊ, ஏ என் னும் நான்கெழுத்தும் மக்கட்கதி. இவ்விரு திறமும் எடுத்த மொழி முதற்கண் வரின் அவை ஆம் எ - று.*

*ஈண்டுச் சூத்திரம் செய்யவேண்டியது, இவை கடவுட் பிறந்தன, மக்கட் பிறந்தன என்று அவையிற்றது சிறப்பும் சிறப்பின்மையும் உணர்த்துதற்கு.*

குற்றெழுத்துக்களில் ஒகரத்தையும், நெட்டெழுத்துக்களில் ஐ, ஓ, ஔ என்னுமவற்றையும் ஒழிந்தன வேண்டப்பட்ட வென்க.

ஐகார முதல் நான்குயிரும் ஆண்டு ஆடூஉ மகடூஉ (சூ. 7) என்று ஈண்டு விலக்கியதாற் சிறப்பின்றேனும் சிறுபான்மையும் வரப்பெறுமென்பதாம். வல்லினம் மெல்லினம் ஈறின்றி என்றது உயிர்மெய்யெனக் கொள்க.

(உரை II). எ - ன்,....... இவ்வாறு அறிந்து தேவதையைப் பாடும் பிரபந்தத்துக்குத் தேவ கதியும் மனிதரைப் பாடும் பிரபந்தத்துக்கு மக்கட்கதி எழுத்தும் வைத்துப் பாடுக.

(பி - ம்.) [1] 'ஞன்கினுக்குச்' [2] 'சொல்லுவர்' (20)

இதுவுமது

21. பன்னொன்று பத்துயிர் யம்முதன் மூன்றுபன் னேழ்பதினந்
தென்னு மவையே விலங்கின் கதியியம் பாவெழுத்துத்
தன்னை நரக கதியென்று சாற்றுவர் தாமுணர்ந்தோர்
[1]முன்னை மொழிக்கண் வரத்தகா வென்று மொழிவர்களே.

(உரை I). எ - ன், விலங்கின் கதியும் நரககதியும் ஆமா றுணர்த்........று.

(இ - ள்). பன்னொன்று பத்துமாகிய உயிரான ஒவும் ஔவும், யம் முதல் மூன்றாகிய யரலவும், பதினேழ் பதினைந்தாகிய றவ்வும் ழவ்வும் இன்னவே விலங்கின் கதியாம். இயம்பாவெழுத்துத் தன்னை நரக கதியென்று சாற்றுவர் என்பது, ஐ, ஔ, ஃ, வ, ள, ன என்னும் ஆறெழுத்தும் நரக கதியாம். இவை முதன்மொழிக்கண் வரத்தகா எ - று.

அவ்வாறும் நரககதி, வேண்டிற்றில்லை. பயனின்மை பொருளாமென்று சொன்னரெனக் கொள்க.

(உரை II). ..........மெய் பதினெட்டும் ஆய்தமும் ஆகப் பத்தொன்பதெழுத்தும் நரக கதி என்று சொல்லப்படும். இந்த விலங்கின் கதி எழுத்தும் நரககதி எழுத்தும் பிரபந்தச் சாயையில் முதற்சீர்க்கண் வைத்தலாகாது. வைப்பின் குற்றமாம்.

" மேவிய செய்யுளின் முதற்சீர்க் கண்ணே
விலங்கின் கதியும் நரக கதியும்
பாவியல் பாடப் பழியது முடியும் "

என்றார் [2]தொல்காப்பியனார்.

(கு - ரை). தன்னை ; ஒருமை பன்மை மயக்கம்.

(பி - ம்.) [1] 'முன்னர்' [2] 'சொல்காப்பியனார்' (21)

கணப் பொருத்தம்

22. நேரசை மூன்றிய மரன னிரைப்பின்பு நேரிரண்டு
சேர்வன திங்கள் நிரையசை மூன்றும் செழுநிலமாம்
நேரசைப் பின்பு நிரையிரண் டாய்வரின் நீர்க்கணமாம்
தேரிய லல்குற் றிருவே யிவைநல்ல சீர்க்கணமே.

(உரை I). எ - ன், *நற்கணநான்குமாமா றுணர்த்......று.*

*நேரசை மூன்று கூடியசீர் இந்திரகணம் ; நிரையசை முன்னே நேரிசை யிரண்டு கூடியசீர் சந்திரகணம் ; நிரை மூன்று கூடியசீர் நிலக்கணம் ; நேரசை முன்னே நிரை யசை இரண்டு கூடியசீர் நீர்க்கணம். இந்நான்கு சீர்க்கண மும் நன்மை தரும். இவற்றானே முதற்சீர் மொழிக எ - று.*

என்னை,

" இந்திர கணமே பெருக்கஞ் செய்யும்
சந்திர கணமே வாணாள் தருஉம்
சீர்த்த நீர்க்கணம் பூக்கணஞ் செழுந்திரு
ஆக்கு மென்றாங் கறையப் படுமே "

என்பது மாமூலம்.

" நேர்சை யாகவும் நிரையசை யாகவும்
சீர்பெற வெடுத்தல் சிலவிடத் துளவே "

என்பது இந்திரகாளியம்.

*இவை சிறப்பானமையின் முன்னெடுத்தோதினாரெனக் கொள்க.*

(உரை II) எ - து, *கணப்பொருத்தமாமா றுணர்த்....று.*

(கு - ரை.) தேமாங்காய் - இந்திரகணம். புளிமாங்காய் - சந்திர கணம். கருவிளங்கனி - நிலக்கணம். கூவிளங்கனி - நீர்க்கணம். (22)

தீக்கணம்

23. நிரையிரண் டாய்ப்பின்பு நேரிறி னந்த்ரம் நேரிரண்டாய்
நிரையிறின் மாருதம் நேர்நடு [1]வாகி நிரையிருபால்
விரைதரு கோதைவெந் தீக்கணம் நேரிரண் டின்னடுவே
நிரைவரு மாயிற் [2]பருதியிந் நாற்கணம் [3]நீக்கினரே.

(உரை I). எ - ன், தீக்கணமாமாறுணர்த்......று.

(இ - ள்). முறையாற் கண்டுகொள்க. இந்நான்கு சீரும் தீதாக்கும். இவற்றுள் முதற்சீர் மொழியலாகாது.

" எண்வ கைக்குறி யியலுமச் சீர்களுள்
வருணற் குரிய நாளே சதையம்
இயமானற் குரிய நாளே பரணி
சந்திரன் வந்த நாளே மகயிரம்
பூமி தேவிநாள் கேட்டை யாகும்
எஞ்சிய சீரி ரிரண்டி னுள்ளும்
வஞ்சமில் மாருத நாளே சோதி
எரிநாள் கார்த்திகை யந்தர மதனுக்
குரிய நாளே யோண மாகும்
சூரியன் நாளே புனர்பூ சம்மே "

என்பது இந்திரகாளியம்.

" நிலையிற் குலைத்தல் செல்வ நீக்குதல்
கொலையிற் பிணியிற் கூட்டுவன வவையே."

(உரை II). எ - ன், முதற் சீரில் வைக்கலாகாத கணம் உணர்த்......று.

முன் நிரையசையாய் இரண்டு வந்து பின்பு நேரசையாகில், அந்தரகணமென்று சொல்லப்படும். முன் நேரசை இரண்டாய்ப் பின்பு நிரைவரில் மாருத கணமென்று சொல்லப்படும். நேர்நடுவாகி நிரையசை இருபால் வரில் அக்கினி கணமென்று சொல்லப்படும். முன்னும் பின்னும் நேர்வந்து நடு நிரைவரில் சூரியகணமென்று சொல்லப்படும். இந்த நாலு கணமும் பிரபந்த முதற்சீர்க்கண் வைத்தலாகாது. வைப்பின் பாட்டுடைத் தலைவனுக்கு, " நிலையிற் குலைதல்.... ...கூட்டுவதாகும்."

*ஒருவர்மேற் பாடும் பிரபந்தத்துக்கு இந்தப் பத்துவகைப் பொருத்தமும் நன்ருக ஆராய்ந்து பார்த்து முதற்சீர் மங்கல மொழியில் வைத்துப் பாடுக.*

(கு - ரை.) இயமானன் - இந்திரகணம்; இதனைத் துறக்கமென்றும் இயமானனென்றும் கூறுவர்; வெண்பாப். 1. 20, உரை. கருவிளங்காய் - அந்தரகணம். தேமாங்கனி - மாருதகணம். புளிமாங்கனி - அக்கினிகணம். கூவிளங்காய் - சூரியகணம்.

(பி - ம்.) [1] 'வாக' [2] 'பரிதி' [3] 'நீக்குவரே' (23)

தசாங்கம்

24. †மலையாறு நாடூர் மலர்த்தார் வயப்பரி வார்மதத்த
கொலையார் களிறு கொடிமுர சாணை குலவுபத்தும்
தலையான நூலோர் தசாங்கம தென்ப தமதயலே
கொலையான சொற்பொரு டோன்றிடி லானந்தம் கூறுவரே.

(உரை I). *எ - ன், தசாங்கம் இவையென்றும், அவற்றின் அயற்கண் நிற்கத் தகாதன இவையென்றும் உணர்த்....று.*

*மலை.......ஆணை இவை பத்தும் தசாங்கமாவன. இவை ஒரு குரிசிற்குரிய பொருள். தன்னைப் பரிசிலன் பரவுங்கால் அவற்றின் அயல் கொலை முதலாகிய கொடுமைச் சொல்லும் பொருளும் அடுத்துக் கூறில் ஆனந்தம் எ - று.*

*இவை இலக்கணம் இனமாகப் பாடும் அவையிற்றுக்கு இயல்பல்ல; அல்லாதவையிற்றுக்கு ஆமென்று கொள்க.* (24)

'இனி யொரு பிரபந்தம் பாடுமிடத்துத் தசாங்க வருணையும் பாடவேண்டும். அது வருமாறு' (உரை II).

25. உன்னுந் தசாங்க மொருசீ ரதனு ளுரைப்பதன்றிப்
பின்னின்ற சீரொடு சேர்ந்து பிளவு படிற்பிழையாம்
இன்னும் மவைதாம் புணர்மொழி யாயின் இயல்புபெறும்
மின்னும் வெளியுந் துடியு நிகரிடை மெல்லியலே.

(உரை I). *எ - ன், தசாங்கங்கட்கு எய்தியதோர் நன்மை உணர்த்.......று.*

மன்னர் இயற்பெயருக்குத் தசாங்கம் ஒரு சீரினுள் உரைப்பரென்பது : "பிளந்து சீரிற் பெய்யினும் வரையார், புணர்ந்தே மொழிவ ராதலாலே." பாட்டுடைத் தலைமகன்றன் தசாங்கமாகிய பத்தும் ஒரு சீர்க்கண் அல்லது அறுபடுமாயின் அவை குற்றமாம். அவையே புணர்மொழிப் பெயராயின் மொழிமிறுதிச்சீர் நிற்கப் புணர்ப்பினும் குற்ற மாகாது எ - று.

(உரை II). தசாங்கமென்று சொல்லப்பட்ட மலை....ஆணை என்னும் பத்துச்சொல்லும் பிரபந்தச் சாயையில் வைத்துப் பாடுமிடத்து ஒவ்வொன்று ஒவ்வொரு சீரிலேயே வைத்துப் பாடுவது உத்தமமாம். இப்படி அமையாமல் இரண்டு சீரோடு கூடிப் பிளவுபட்டு வரிற் குற்றமாம் எ - று.

(கு - ரை.) இதுவும் முன் சூத்திரமும் உரை 1 ல் முறையே 24, 8 ஆம் சூத்திரங்களாகக் காணப்படுகின்றன. அவ்வுரையில் 'உன்னுந்தசாங்க' (சூ. 25) என்றதனோடு பொருத்தவியல் முற்றுப் பெற்றுள்ளது. இயலின் ஈற்றில் உரையாசிரியர், 'இவ்வோத்து முதன் மொழிக்கண் வருவனவை யிற்றுக்கு இலக்கணம் ஆராய்தலின் முதன்மொழி யோத்தென்னும் பெயர்த்து ; இதனுள் தசாங்க வியலும் ஆராய்ந்த தென்னையோ வெனின், முதன் மொழி வந்த வாற்றானே பெயர் பெறுதல், நூல் நெறியாய்ப் பொதுச் சொற்றலைமையானும் பேர் பெறுதலுந் தக்கதெனக் கொள்க' என்று குறித்துள்ளார். (25)

பொருத்தவியல் முற்றும்.

ஆகக் காரிகை 28.

# 2. செய்யுண் மொழியியல்

## பிள்ளைத் தமிழ் - காப்புக் கடவுளர்

'இனி, பிள்ளைத் தமிழென்னும் பிரபந்தம் பாடுமிடத்து இலக்கணம் கூறுவது' (உரை II.)

26. பூவிற் றிருவைப் புணர்தலிற் பொன்முடி பூண்கடகம்
மேவப் படுதலின் வெண்சங்க மாழி விரும்புதலிற்
காவற் கடவுளைக் கார்முகில் வண்ணனைக் காசினியோர்
பாவுக்கு முன்னே [1]பகருவர் காப்பாப் பணிமொழியே.

(உரை I). எ - ன், பூவிற்றிருவைப் புணர்தலானும், முடியும் பூணும் கடகமும் முதலாயினவும் அணிதலானும், சங்கு சக்கரம் தரித்தலானும், காவற்றொழிலன் ஆகையானும், (பூமி தேவியைப் பொருந்துதலானும்) கருமுகில் வண்ணனைக் காசினியுள்ளோர் காப்புக்கு முன்னாக மொழியவேண்டும் எ - று.

என்னை,

" காப்பு முதலெடுக்குங் கடவு டானே
பூக்கமழ் துழாய்முடி புனைந்தன னுகும் "

என்பது பருணர் பாட்டியல்.

(உரை II). மேகம்போன்ற திருமேனியையுடைய நாராயணனைப் பிள்ளைத்தமிழுக்கு முன் காப்புக் கவியில் வைத்துப் பாடுக.

அந்த நாராயணனே முடிபுனைந்த மன்னற்குச் சமமாக உவமை வைத்துப் பாடற்கும் உரியவனாகும். தேவர்களை மானிடருடன் சமமாக வைத்துப் பாடுவதற்குப் பூவைநிலை என்று பேராம். இப்படிப் பாடுவது இருபத்தைந்து வயசுக்கு மேற்பட்டு முப்பது வயசுக்கு உட்பட்ட முடிபுனைந்த மன்னற்காம். முப்பது வயசுக்கு மேற்பட்ட மன்னருக்கு ஆகாது எ - று.

(கு - ரை). பூவை நிலை : 'ஒருவனை அவனோடு (மாயவனோடு) உவமை கூறினும், பிற கடவுளரோடு உவமை கூறினும் அதுவேயாம்' (பு. வெ. 92, உரை.)

(வி - ம்.) [1] 'பகர்குவர்' (1)

இதுவுமது

27. †விரிசடைப் பிஞ்ஞகன் வேய்த்தோ ளெழுவர்முன் காக்கவென்ன
அருள்பெறக் கூறி னவரவர் செய்யும் கொலையகற்றி
உரியநற் கங்கை யுமையாள் மதியூர் விடைகடுக்கை
விரைமலர்த் தார்மற்று மங்கல மாக விளம்பினரே.

(உரை I). எ - ன், *இதுவும் காப்பு முதலே இருக்கும் கடவுளர் ஆமாறுணர்த்........று.*

(இ - ள்). *செஞ்சடைப் பிஞ்ஞகனையும் எழுவர் மாதர் களையும் காப்புக்கு முதலாக்காது, கொலையும் கூறாது, கங்கை யையும் உமாதேவியையும் மதியையும் (விடையையும்) கொன் றையையும் குலவ எடுத்து மங்கலமாகக் கூறுதல் வேண்டும் எ - று.*

(கு - ரை) எழுவர் - சத்தமாதர் ; அபிராமி, நாராயணி, இந்திராணி, கௌமாரி, வாராகி, துர்க்கை, காளி என்பார். காப்புக்கு முதலெடுக் குங் கடவுள் திருமால் என்று முன்பு குறித்தலால், இங்கே ' செஞ் சடைப்......காப்புக்கு முதலாக்காது ' என்றார். (2)

இதுவுமது

28. பதிஞெரு மூவரும் பங்கயத் தோனும் பகவதியும்
நிதிமுத லோனும் [1]பருதியுஞ் சாத்தனும் [2]நீளமரர்க்
கதிபதி தானு மறுமுகத் தைங்கரத் தற்புதனும்
மதிபுனை வேணி வடுகனுங் காவல்செய் வானவரே.

(உரை I). எ - ன், *வகுத்த காப்புக்குரிய வானவரைத் தொகுத்துணர்த்........று.*

(உரை II). எ - து; *பிள்ளைத் தமிழென்னும் பிரபந்தத் துக்கு முகவுரைக் காப்புக்கு வைக்கும் தேவர்களை உணர்த்.......று.*

*பதிஞெரு மூவர் என்றது ஏகாதச ருத்திரரையும், பன்னி ரண்டாதித்தரையும், அட்ட வசுக்களையும், மருத்துவர் இரு வரையும். பங்கயத்தோனும் பகவதியும் என்பது திருமாலுந் திக்கமலத்து உதிக்கப்பட்ட பிரமனையும், பாலைநிலத்துக்குத் தலைவியாகிய பகவதியையும். எண்ணிதிக்கு முதல்வனாகிய*

*குபேரனையும் ஆதித்த பதவிபெற்ற மூர்த்திகளையும் அரியர புத்திரனாகிய சாத்தனையும் தேவேந்திரனையும் அறுமுகக் கடவுளையும் விநாயக மூர்த்தியையும் வைரவ தேவனையும் காப்புக்குத் தேவதைகளாக வைத்துப் பாடுக.*

(கு - ரை). பகவதியைப் பாலை நிலத் தெய்வமென்பர் களவியலுரைகாரர். தொகை கருதி ஆதித்தர்களைப் பதினொரு மூவரில் அடக்கியும், சிறப்புக் கருதி, 'பருதியும்' என்று தனியாக விதந்தும் கூறினார். வைரவக் கடவுளுக்கும் சிவபெருமானைப் போல் பிறை முடித்த வேணி உண்டென்பர்.

(பி - ம்.) [1] 'பரிதியுஞ்' [2] 'நீள்வானவர்க்' (3)

பிள்ளைக் கவியின் பருவங்கள்

**29.** **முற்றந்த காப்புச்செங் கீரைதால் சப்பாணி முத்தத்தோடு**
**மற்றந்த வாரானை யம்புலி வாய்ந்த சிறுபறையே**
**சிற்றில் சிதைத்தல் சிறுதே ருருட்டுதல் சேர்ந்தபத்தும்**
**சுற்றத் தளவும் [1]கவிக்கெல்லை யாக்கொண்டு சொல்லுவரே.**

(உரை I). *எ - ன், உரைத்த பிள்ளைப் பாட்டது மொழிய, நிரைத்த நிலையென்பது உணர்த்........று.*

*காப்பு முதல் இந்தப் பத்தும் பகரப்படும் எ - று. பாட்டிற்கெல்லை சுற்றத்தளவென்பதுவும் சொற்றதாம் எ - று.*

(உரை II). *....................பாடுமிடத்து முனிவர்க்கும் முடிபுனைந்த மன்னர்க்கும் அமரர்க்கும் பாடலாம். குறுநில மன்னர்க்கும் லோபியர்க்கும் பாடலாகாது. பாடில் இரத்தச் சேதம், தன்னுயிர்ச் சேதம் வரும். இஃது அறிக.*

(கு - ரை.) முன் தந்த. இங்கே கூறிய பருவங்கள் ஆண்பாற் பிள்ளைத் தமிழுக்குரியன. இந்தப் பருவங்களின் இலக்கணங்களைப் பிள்ளைத் தமிழ் உரை நூல்களிற் காண்க. அம்புலிப் பருவம் சந்திரனை முன்னிலைப் படுத்திக் கூறுவது. அம்புலிப் பருவத்தில் சாம, தான, பேத, தண்டங்களை அமைத்துக் கூற வேண்டுமென்பது பலர் கருத்து. இதை நோக்கியே காசினியிற் பிளளைக்கவிக்கம்புலி புலியாம்' என்றார் ஒருவர் (தனிப்.)

(பி - ம்.) [1] 'கவிக்கே முதற்கொண்டு' (4)

பிள்ளைத் தமிழுக்குப் பருவ வரையறை

30. மூன்று முதலிரு பத்தொரு [1]திங்கள் முடிவளவாய்த்
தோன்று நிலைபத்துஞ் சொல்லுவர் தோகையர் தங்களுக்கும்
ஆன்ற [2]புகழ்ச்சிக்கு மிவ்வகை யாமென்பர் ஐந்தேழென
ஏன்றநல் [3]லியாண்டி னகவரை தானும் [4]இயம்புவரே.

(உரை I). எ - ன், உரைத்த தமிழுக்குப் பருவ வரையறை உணர்த்......று

(இ - ள்). மூன்றும் திங்களிற் காப்பும், ஐந்தாம் திங்களிற் செங்கீரையும், ஏழாம் திங்களில் தாலும், ஒன்பதாம் திங்களிற் சப்பாணியும், பதினோராம் திங்களில் முத்தங் கூறலும், பதின்மூன்றும் திங்களில் வாரானையும், பதினைந்தாம் திங்களில் அம்புலியும், பதினேழாம் திங்களிற் சிறுபறையும், பத்தொன்பதாம் திங்களிற் சிற்றில் சிதைத்தலும், இருபத்தோராம் திங்களில் சிறு தேருருட்டலும் இவ்வாறு எல்லாப் பருவத்தையும் பேசலாம். இதுவன்றி ஐந்தாண்டு வரையினும் ஏழாண்டு வரையினும் மொழியலாம் எ - று.

(உரை I). ....................இஃதன்றிப் பெண்பாற் புகழ்ச்சிக்கும் இந்தப் பிள்ளைத்தமிழ் பாடலாம். அதற்குப் பருவம் ஐந்து வருஷம். ஏழு வருஷத்துக்கு மேற்படில் ஆகாது.

(கு - ரை.) இங்கே கூறிய பருவங்களின் வரையறை ஒற்றைப் பட்ட மாதங்களாகவே இருத்தல் குறிப்பிடத் தக்கது. இரட்டைப்பட்ட மாதங்கள் விலக்கென்பர்.

(பி - ம்.) [1] 'திங்கள் முடியளவாய்த்'; 'திங்களின் முன்பியலத்'; [2] 'புகழ்ச்சிக்கணிவ்வகை'; [3] 'லாண்டி'; [4] 'இயம்புதுமே'. (5)

பிள்ளைத் தமிழ் சுருங்கி வரும் பருவம்

31. சொன்ன சிறுபறை யேமுதன் மூன்றும் சுருங்கிவரும்
மன்ன விருத்தம் வகுத்தவீ ரெண்கலை வண்ணச் செய்யுள்
அன்னவை [1]யோரைம் பதிலஃகா தெல்லை அறைவர்கற்றோர்
பொன்னு மணியுநற் போகமு மீன்ற புணர்முலையே.

(உரை I). எ - ன், முன்பு சொன்ன சிறுபறைப் பாடலும் சிற்றிலும் சிறு தேரும் என்னும் மூன்று நிலைமையினும்

செய்யுள் அருகியன்றி வாரா என்பதூஉம், ஆசிரிய விருத்த மும் பதினாறு (கலை) வகுத்து இயற்றிய வண்ணமும் செய்யு ளாம் என்பதூஉம், பாட்டு ஐம்பதிற்றாழ்ந்து வாரா என்பதூ உம், உணர்த்........று.

" ஈரெண் கலையினு மியன்ற வண்ணமும்
ஆசிரிய விருத்தமும் ஆதி யானவிச்
சுற்றத் தளவாய்த் தோன்றும் பாட்டுச்
சொற்றரப் பெறினும் பானிற் சுருங்காது
சிற்றில் சிறுபறை சிறுதே ருருட்டல்
மற்றம் மூன்று மிகாது நிற்கும்
ஏனைய வரையறை யைம்பது திருந்தி
வருத லாகா தென்பது புலவர்
எடுத்துரை யாகும் "

—செய்யுள் வகைமை

"கொச்சகக் கவியும் கலிவெண் பாட்டும்
எச்ச மிலவே எவ்வாய் மருங்கினும் "

எனபது பருணர் பாட்டியல்.

" வண்ணம் என்ப கலைதொறும் ஒத்த
ஆசிரிய விருத்தத்தையும் அளவியற் றாண்டகத்தையும்
முதற்பாக் கவிதை வெண்பா வாகி
எக்குலத் தவர்க்கும் உரிய என்ப "

என்பது பொய்கையார் கலாவியல்.

இக் கருத்தியல்பு அறிந்துகொள்க.

(உரை II). எ - து; மேற்சொன்ன பத்துப் பருவத்துள் ளும் சிறுபறை முதல் மூன்று பருவத்துப் பாட்டும் பிரபந்தச் சாயையில் சுருங்கி நிற்கவும் பெறும்.

வண்ண விருத்தமென்பது: ஓரடிக்குப் பதினாறு கலை வகுத்து இப்படி நாலடிக்கும் அறுபத்து நாலு கலை வகுத்து வண்ண விருத்தமாய்ப் பாடுவது. இப்படி ஐம்பது விருத்தம் கலந்து பாடுவது பிள்ளைத்தமிழ் என்னும் பிரபந்தமாம் எ - று.

(கு - ரை) மன்ன விருத்தம்-ஆசிரிய விருத்தம். வண்ணவிருத்த மாவது : " எட்டுக் கலையா யிடையிட் டெதுகையாக், கட்டுக் கலைக்கு முக்கண்ணியாத் - திட்டத்தில், தொங்கலு மெட்டாய்த் தொடை மூன்று நான்காருய்ப், பங்குபெறும் வண்ணப் பரப்பு' (இலக்கண சூடாமணி.)

(பி ம்.) [1] ' யன்ப த:.தின் னிலையென் றறைவர், ஈரைம் ' (6)

பிள்ளைக் கவிக்கு ஆவதோர் புறனடை

32. சிறுபறை யேமுதன் மூன்றுந் தெரியிலப் பேதையர்க்குப்
பெறுவன வல்ல விளையனே யாயினும் வேந்தன்பெருன்
மறுவின் முடிசூடிற் பிள்ளைக் கவிகாப்பு மாலைமுன்னே
அறிபவ ரோன்பதும் பன்னென்று மாக அறைவர்களே.

(உரை I). எ - ன், *சிறுபறை முதல் மூன்றும் உணர்த்....று. (இதிற் சொன்னவாறு உணர்ந்துகொள்ளுக.)*

(உரை II). எ - து; *பெண்பாற் பிள்ளைக்கவி பாடுமிடத்துச் சிறுபறைமுதல் மூன்றும் ஆகா. மற்றவை பாடலாம். இப்படிப் பிள்ளைத்தமிழ் பாடுமிடத்துப் பத்துப் பருவத்திலும் பருவமொன்றுக்கு ஒன்பது பன்னொன்று பாடலாம். எ - று.*

(கு - ரை) பெண்பாற் பிள்ளைத் தமிழில் சிறுபறை, சிற்றில் சிதைத்தல் சிறுதேருருட்டுதலுக்குப் பதிலாகக் கழங்கு அம்மானை ஊசலைக் கொள்வர் ; "………அன்றிப் பெண்பாற்குக் கடை மூன் ெருழித்துக் கழங்கம் மனையூசல், என்பவை கூட்டி யியம்புவர் புலவர்" (பிரபந்த தீபம், 94.). கழங்குக்குப் பதிலாக நீராடலைக் கூறுதலே பெருவழக்கு. 'வேந்தன் இளையனே யாயினும் முடிசூடில் பிள்ளைக்கவி பெருன் ' என்று கூட்டுக.

காப்பு மாலை என்றே ஒரு பிரபந்தம் உண்டு. அதனை ஒன்பது அல்லது பதினெரு செய்யுளில் அறைக என்ருர், " காப்பு மாலையே தெய்வங் காக்கவென, மூன்றைந்தேழ் செய்யுளின் மொழிபகற் ேருரே" (பிரபந்ததீபம். 35). (7)

கலம்பகம்

33. மூல மொருபோகு வெண்பாக் கலித்துறை முன்னுறுப்பாய்
ஏலும் புயத்தோடம் மானைபொன் னூசல் இயமகம்விற்
கோல மறங்குறஞ் சித்துநற் கைக்கிளை [1]கொண்டறூது
கால மதங்கி களிசம் பிரதம் கலம்பகமே.

(உரை I) எ - ன். *கலம்பகமாமா றுணர்த்......று.*

*மூலம் ஒரு போகுவந்து அதன் பின்பு வெண்பாக் கலித்துறை வந்து பின்னர் உறுப்பாகிய பொருள்கள் மேல் செய்யுள் வருவது கலம்பகம். முற்றும் இவையன்றிப் பிற உறுப்புக்களும் வரும்.*

" அன்னவன் தன்னைத் சாற்றி டினும் மறையவர்
முன்ன ரிடைநிலைப் பாட்டினும் மொழிவர்
சொன்ன கடவுட டொழுதகப் பாவில்"

—செய்யுள் விகைமை.

*[மெரஞ்செய்த தேமெனலவ்வாறுள்ள வருகவென்ற தல்லது அவருரை நூன்முறையே நன்றென்பது கருதி யென்பது.]*

(உரை II). *எ - து. கலம்பகமென்னும் பிரபந்தமாமா றுணர்த்....று.*

*மூலமொருபோகென்பது முதலெடுக்கப்பட்ட செய்யுள் ஒரு போகென்பது ; அது கலம்பகமென்னும் பிரபந்தத்துக்கு முன் வைக்கப்படும். அது இரண்டடி எதுகையாய் வைத்து நாலடியினுகுதல், ஆறடியினுகுதல், கொச்சகக் கலிப்பாவில் வேறுபடுத்தித் தெய்வ வணக்கம் பாடி அதன்பின் ஒரு வெண்பா, அதன் பின் ஒரு கலித்துறை, அதன் பின் விருத்தம், சந்த விருத்தம், புயவகுப்பு, அம்மானை, ஊசல், இயமகம், காலம், மறம், குறம், சித்து, கைக்கிளை, மருட்பா, தூது, மதங்கி, கழ்படர்கிளவி, உடன் போக்கு, வருத்தம், மெய்ப்பாடு, களி, சம்பிரதம் இவை முதலாகிய வனப்பின் திறமெல்லாம் வைத்துப் பாடுவது கலம்பகமென்னும் பிர பந்தமாம் எ - று.*

*சம்பிரத மென்பது இந்திரசால முதலாயின வித்தை.*

(கு - ரை) இயமகம் - மடக்கு. விற்கோல் மறம் - வில் வீரத்தையுடைய மறம். கலம்பக உறுப்புக்கள் பதினெட்டென்று கூறுவாருமுண்டு. இவற்றையன்றி வேறு பல உறுப்புக்களும் வந்துள்ளன. இவ்வுறுப்புக்களின் இலக்கணங்களை யெல்லாம் கலம்பக உரை நூல்களிற் கண்டு கொள்க.

பகரங்களுக்கிடையே உள்ளதன் கருத்து விளங்கவில்லை.

(பி - ம்.) [1] 'கொண்டலின்றாது' (8)

கலம்பகத்துப் பயிலும் செய்யுள்

34. சொன்ன கலம்பகந் தொக்கவச் செய்யுன் துடியைவென்ற
மின்னிடை வெண்டுறை வெண்பா [1]வகுப்பக வல்விருத்தம்
இன்னிசை [2]யாசிரி யம்மா சிரிய விருத்தமெல்லாம்
[3]மன்னு மருட்பாவஞ் சித்துறை வஞ்சி விருத்தமென்னே.

(உரை I). எ - ன், கலம்பகச் செய்யுளையுணர்த்....று.

வெண்டுறையும் வெண்பாவும் வகுப்பாகிய வண்ணமும் இன்னிசை வெண்பாவும் ஆசிரியப்பாவும் ஆசிரிய விருத்தங்களும் மருட்பாவும் வஞ்சித்துறையும் வஞ்சி விருத்தமும் என்னும் இவை கலம்பகத்துக்கு இசைந்த செய்யுள் எ - று.

"நான்கு பாவும் இனமு மயங்கி
ஆன்ற பொருளிலும் வருவது கலம்பகம்"

என்பது முன்னியர் கவித்தொகை.

(உரை II) எ - து. முன் சொன்ன உறுப்புக்களுடனே கலம்பகம் பாடுமிடத்து இடையிடையே வெண்பாவும்............ மருட்பாவும் தாழிசை இன்னிசையும் இவை முதலாகிய பல செய்யுட்டிறமும் கலந்து வைத்து அந்தாதியாகப் பாடுவது கலம்பகம் எ - று.

இந்தப் பிரபந்தம் தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் முடிபுனைந்த மன்னருக்குமாம். குறுநில மன்னருக்காகாது. பாடிற் குற்றம் உண்டாம்.

(பி - ம்.) [1] 'வகவல் கலிவிருத்தம்' [2] 'யெண்ணிய வண்ணம் வகுப்பொடு தாழிசையும்' [3] 'மின்னு, (9)

கலம்பகத்தின் செய்யுட்டொகை

35. தேவர்கது நூறு முனிவர்க் கிழிபைந்து [1]சேணிலத்தைக்
காவற் குரிய வரசர்க்குத் தொண்ணூறு காவலரால்
ஏவற் [2]றெழிலவற் கெண்ப தெழுப திருநிதியம்
மேவப் படுமவர்க் கைம்பது முப்பது மிக்கவர்க்கே.

(உரை I). எ-ன், வகுத்த கலம்பகம் வருமுறை வகுததது இது என்பதுணர்த்......று.

*இவை அந்தாதி, மண்டலித்து முடியும் எனப்படும் எ-று.*

" அமராக்கு நூறந் தணருக் கிழிவைந்
தரசர்க்குத் தொண்ணூறு மூன்றும் பட்ட
முடிபுனையா மன்னர்க் கெண்பது
வணிநர்க் கெழுபது மற்றை யோர்க்குத்
துணியி லறுபத் தஞ்சு சொல்லும்."

இது முள்ளியார் கவித்தொகை.

" அந்தணர் அரசர் வணிகர் வினைஞர்க்குத்
தொண்ணூ றெண்ப தெழுப தறுபது
விண்ணோர் தமக்கு நூறென விளம்பினர்."

என்பது கல்லாடம்.

" அமரர்க்கு நூறந் தணருக் கிழிவைந்
தரசக்குத் தொண்ணூ றன்றி முடிபுனையாப்
புதல்வாக கெண்பது புகலுங் காலே."
" தானைத் தலைவர்க்கும் வணிகர்க்கும் எழுப
தேனை யோர்க்கிழி பிருபது பாட்டே."

என்பவை மாமூலம். இக்கருத்துத் தொகை கொள்க.

*(உரை II). எ-ன், தேவதைகளைப்பாடும் பிள்ளைத் தமிழ்க் கவி நூறு பாடவும். பிராமணருக்குத் தொண்ணூற்றைந்து கவி பாடவும். முடிபுனைந்த மன்னருக்குத் தொண்ணூறு கவி பாடவும். வைசியர்க்கு எண்பது கவி பாடவும். இதிற் கீழ்ப்பட்டவர்களுக்கு ஐம்பது, முப்பது பாடவும். இப்படிப் பிரபந்தம் பாடுவது:*

(பி - ம்.) [1] 'சேணிலத்துக்' [2] 'றெழில்பெற்ற மாந்தர்க்கெழுப'

(சூ - ரை). 33, 34, 35 ஆம் சூத்திரங்களிற் கூறிய பொருளை யெல்லாம் பின்வரும் சூத்திரம் தழுவி நிற்கிறது :

" கலம்பக மென்ப தொருபோகு வெண்பா
கலித்துறை புயவகுப்பு மதங்கம் மானே
காலம் சம்பிரதம் கார்தவம் குறமறம்
பாண்களி சித்தோ டிரங்கல் கைக்கிளை
தூது வண்டு தழையூச லென்னுமிப்
பதினெட் டுறுப்பிவை யந்தாதித துறையால்
ஐவகைப் பாவு மினமும் பொருந்த
இமையோர்க்கு நூறு மந்தணர்க்குத் தொண்ணூற்
றைந்து மரசர்க் குத்தொண் ணூறும்
வைசியர்க் கைம்பதுஞ் சூத்திரர்க்கு முப்பதும்
ஆக மொழிவர் மூதுணர்ந் தோரே"

என்பது பிரபந்த தீபம்.

மண்டலித்து முடிவது: பிரபந்தத்தின் ஈற்றுச் செய்யுளின் ஈறும், முதற்செய்யுளின் முதலும் ஒன்றாக அமைவது. (10)

மும்மணிக்கோவை, மும்மணி மாலை, நான்மணிமாலை

36. முன்னு சிரியம்பின் வெண்பாக் கலித்துறை முப்பதென்று
சொன்னார்கள் மும்மணிக் கோவைக்கு மும்மணி மாலை
[சொல்லின்
அந்நான் மறைப்பாக் கலித்துறை யாசிரி யம்விருத்தம்
இந்நால் வகைச்செய்யு ளுற்பது நான்மணி மாலையென்னே.

(உரை I). எ - ன், முன் ஆசிரியம் வந்து பின் வெண்பா வந்து பின் கலித்துறை வந்து இவ்வாறே முப்பது பாட்டான் முடிவது மும்மணிக் கோவையாம்; வெண்பா வந்து பின் கலித்துறை வந்து ஆசிரிய விருத்தம் பின் வந்து முன்போலே முப்பதான் முடிவது மும்மணி மாலையாம்; வெண்பா வந்து பின் ஆசிரியம் வந்து பின் விருத்தம் வந்து பின் கலித்துறை வந்து இவ்வாறே நாற்பது பாட்டான் முடிவது நான்மணி மாலையாம் எ - று.

" ஆசிரியம் வெண்பாக் கலித்துறை முப்ப
தாக வருவது மும்மணிக் கோவை."

" வெள்ளைக்கலித்துறை யாசிரிய விருத்தம்
புல்லும் முப்பதும் மும்மணி மாலை."
" வெண்பா வாசிரியம் விருத்தம் கலித்துறை
ஒண்பா நான்கும் நான்மணி மாலை." —செய்யுள் வகைமை.

*இவை எல்லாம் அந்தாதியாக மண்டலித்து முடிவன.*

*(உரை II). .........ஆசிரியப்பாவும் வெண்பாவும் கலித்துறையும் ஆசிரிய விருத்தமும் மாறி மாறி வந்து அந்தாதியாக நாற்பது பாட்டால் முடிவது நான்மணி மாலையென்று வழங்கப்படும் எ - று.*

(கு - ரை.) நான்மறைப்பா - அந்தணர்க்குரிய வெண்பா; பாக்களுக்குரிய சாதிகளை 81 - ஆம் சூத்திரத்திற் காணலாம். சில பிரபந்தங்களில் இந்த முறை பிறழ்ந்தும் வரும். (11)

இருபா இருபது, இரட்டைமணிமாலை, இணைமணிமாலை

**37. இருபா விருபது வெண்பா வகவல் இரட்டைமணி**
**தருபா விருபது வெண்பாக் கலித்துறை தாமிவையாம்**
**வருபா விரண்டிரண் டாத்தம்முண் மாறின்றி நூறுவரிற்**
**பொருமான் விழியா யிணைமணி மாலை புகல்வர்களே.**

*(உரை I). எ - ன், இருபா இருபது, இரட்டைமணி மாலை, இணைமணி மாலை ஆமாறுணர்த் ......று.*

*(இ - ள்.) வெண்பா வந்து பின் ஆசிரியப்பாவும் வந்து இருபது பாட்டான் முடிவது இருபா இருபதாம். வெண்பாவும் அதன் பின் கலித்துறையும் வந்து இருபது பாட்டான் முடிவது இரட்டைமணி மாலையாம். வெண்பா இரண்டு வந்து பின் இரண்டு கலித்துறை வந்து நூறு பாட்டான் முடிவது இணைமணி மாலையாம்.*

*வெண்பா என்பது செய்யுட்களுக்குப் பொது.*

*(உரை II).............வெண்பாவும் அகவலும் மாறி மாறி நூறு பாடுவது இணைமணி மாலையென்று சொல்லப்படும் எ - று.*

(கு - ரை.) இருபா-முதலிருபாவாகிய வெண்பா அகவல். நேரிசை வெண்பாவும் ஆசிரிய விருத்தமும் தம்முள்மாறி இருபது பாட்டாய் முடி

வதும் இரட்டை மணிமாலையாம்; "இரட்டைமணிமாலை இயம்புங் காலை, வெண்பா கலித்துறை விரவிப் பப்பத்தும், நேரிசை வெண்பா ஆசிரிய விருத்தம் இவற்று மிருபதந் தாதித் தியம்பலே" (பிரபந்ததீபம், 8.) இதில் உள்ள பிரபந்தங்கள் எல்லாவற்றிற்கும் வெண்பா வருதல் பொது வானது என்பதை, 'செய்யுட்களுக்குப் பொது' என்றார். (12)

பல்சந்தமாலை, வெண்பாவந்தாதி, கலித்துறையந்தாதி,
தொகை வெண்பா

**38.** †பத்தாதி நூறந்தம் பல்சந்த மாலையந் தாதிவெண்பா
வைத்தார்க ணூறு கலித்துறை தன்னையும் மற்றவெண்பா
ஒத்தான வைம்ப தெழுபது தொண்ணூறும் பேர்பெற்றதாய்
இத்தா ரணியிற் புலவரெல் லாரும் இயம்புவரே.

(உரை I). *எ - ன், பல்சந்த மாலையும் வெண்பா வந்தா தியும் கலித்துறை யந்தாதியும் முத்தொகை வெண்பாக்களும் ஆமாறு உணர்த்........று.*

(இ - ள்). *பல் சந்தங்களும் பத்து முதல் நூறளவும் வருவது பல்சந்த மாலையாம்; வெண்பா நூறுவரின் வெண் பாவந்தாதி; கலித்துறை நூறு வரின் கலித்துறை யந்தாதி; வெண்பா ஐம்பதானும் எழுபதானும் தொண்ணூறானும் வந்தாற் பேர் பெற்று முடிவது அந்தத் தொகை வெண்பா வாம் எ - று.*

*சந்தமென்பது நான்கெழுத்து முதல் இருபத்தாறெழுத் தளவும் ஒரோவடியான் ஒத்து வருவது.*

*வெண்பாவென்பது ஆசிடை நேரிசை வெண்பா; கலித் துறை யென்பது கட்டளைக் கலித்துறை. தொண்ணூறு மென்ற உம்மையான் தொள்ளாயிரமும் பிறவமாய் வரும்.*

"சந்தத் தொருபது பல்சந்த மாலை
அந்த வெள்ளை ஐம்பதான் எழுபதான்
என்கஊர்ப் பேரோ டுறுமா வியல்பே
அகவறனையு மவ்வழி வரையார்"

*என்பது முள்ளியார் கவித்தொகை; ஆகலின் ஆசிரியங்களும் இவ்வாறு வருக வெனக்கொள்க. இன்னிசை வெண்பாக் களும் (ஐம்பதும்) எழுபதும் தொண்ணூறுமாய் வருவன அறிந்துகொள்க.*

(கு - ரை.) பல்சந்த மாலை பத்துமுதல் நூறு கவிகளால் ஆனது; அதில் பத்துச் சந்தங்கள் பயின்று வரும்; 'பத்துக் கொருசந்தம் படிப்பா நூருக, வைத்தல்தான் பல்சந்த மாலையாம் (பிரபந்தத் க. 5) 'பத்துச் செய்யுளில் ஒவ்வொரு சந்தமாய் ஒரு நூறுரைத்தலே' (பிரபந்ததீ. 28). பத்துமுதல் நூறுசெய்யுள் வரை பாடப்படுவது என்று சிதம்பரப் பாட்டியலும் கூறும். தொள்ளாயிரமும் என்றது அரும்பைத் தொள்ளாயிரம் போன்ற நூல்களைநோக்கிப் போலும். (13)

ஒலியந்தாதி, பன்மணிமாலை

39. ஈட்டிய வீரெண் கலைவண்ணச் செய்யுள் இயைந்தமுப்பான்
கூட்டிய [1]நீடொலி யந்தாதி கூறும் கலம்பகத்தின்
[2]ஆட்டிய வம்மனை யூச லொருபோகும் [3]அற்றுவந்தாற்
பாட்டியல் பன்மணி மாலையென் றேதுவர் பாவலரே.

(உரை I). எ - ன், *ஒலியந்தாதியும் பன்மணி மாலையும் ஆமாறுணர்த்........று.*

(இ - ள்). *பதினாறு கலை வகுத்த ஈரொலி வண்ணம் முப்பது கூடி வருவது ஒலியந்தாதியாம்; முன் சொன்ன கலம்பகத்தில் அம்மானையும் ஊசலும் ஒருபோகும் ஒழிந்து ஏனையவெல்லாம் வருவது பன்மணி மாலையாம் எ - று.*

*ஒலியந்தாதியையே ஒரு சாரார் பல்சந்த மாலையென்று அடக்குவர். வண்ணமென்பதும் வகுப்பென்பதும் ஒன்றென்று சொல்லுவர். அஃது ஆசிரிய விருத்தம் ஆதலும் [என்று] அறிக; ஒரு சாரார் அளவியற் றண்டகமென்ப.*

*இவையெல்லாம் அந்தாதி மண்டலித்து முடிதல் அதிகார வசத்திற் கொள்க.*

(உரை II). எ - *து, பதினாறு கலை ஓரடியாக வைத்து, இப்படி நாலடிக்கு அறுபத்து நாலு கலை வகுத்து, வண்ண முங் கலையும் வைப்பும் தவறாமல் அந்தாதியாக முப்பது செய்யுள் பாடுவது ஒலியந்தாதி என்று சொல்லப்படும்; (அம்மானை) ஊசல், ஒருபோகு, (இன்றி) வெண்பா வெள்ளொத்தாழிசையும், ஆசிரியப்பா ஆசிரியத்தாழிசையும் கலிப்பா கலித்தாழிசையும், வஞ்சிப்பா வஞ்சித்தாழிசையும் அந்தாதியாகப் பாடிக் கடைமுடிவிலே வெள்ளை விருத்தம்*

ஆசிரிய விருத்தம் கலிவிருத்தம் வஞ்சிவிருத்தம் இப்படி நூறு பாடப்படுவது பன்மணிமாலையென்று வழங்கப்படும் எ - று.

(கு - ரை). அளவியற்றாண்டகம் என்பாருள் (உரை I) பிரபந்தத் திரட்டுடையார் ஒருவர்; 'மூவெட் டிரண்டெழுத்தாய் மூன்றடிநான் காய்ச் சந்தப், பாவதன்மீத் தாண்டகமுப் பாறுக-மேவலொலி யந்தாதி' (க. 74.) பாட்டியல் - பிரபந்தம்; தற்சிறப். 1. கலம்பக உறுப்புக்களுள் ஊசலையும் ஒருபோகையும் நீக்கி அம்மனை உள்பட மற்றெல்லா உறுப் புக்களும் வருவது பன்மணி மாலை என்று பிரபந்தத் திரட்டுக் கூறும்; 'ஊசலொரு போகொழிய ஓதுங் கலம்பகப்பா, வாசமுறும் பன்மணி' மாலையாம். (க. 14.)

(பி - ம்) [1] 'நீட்டொலி' [2] 'வாட்டிய' [3] 'மற்றதினற்' (14)

சின்னப்பூ, தசாங்கம்

40\. நேருந் தசாங்கத்தை நேரிசை வெண்பாவின் னுரைம்பது
[1]சேரவோர் தொண்ணூ றெழுபதோ டைம்பது செப்பிடுங்கால்
ஆரியர் சின்னப்பூ வென்றே யுரைப்பர் அவையொருபான்
சாரிற் றசாங்க மெனவுரை யாதிற்பர் சான்றவரே.

(உரை I). எ - ன், சின்னப்பூவும் தசாங்கமும் ஆமாறு உணர்த்........று.

(இ - ள்). முன்சொன்ன தசாங்கங்களை நேரிசை வெண் பாவினால் மறையோர் முதலாய் வருவனவாய்ச் சிறகுமுறை நூறு, தொண்ணூறு, எழுபது, ஐம்பதுமாக மொழிவது சின்னப்பூவாகும்; மலை முதலாகிய பத்தையும் ஒரோ ஒன்று உரைப்பது தசாங்கமென்றவாறு.

"உரைத்த தசாங்க மாவன பத்தாக
நிரைத்து வருவது நேரிசை வெண்பா
அமரரைச
செங்கோல் வேந்தரைச் செப்புதல் சின்னப் பூவாம்
ஏனை யோர்க்குத் தசாங்கமல் லாதன
என்ப இயல்புணர்ந் தோரே"

என்பது முள்ளியார் கவித்தொகை; ஆகலின் அமரர்க்கும் அர சர்க்குமே சின்னப் பூ ஆவது. ஒழுந்தோர்க்குத் தசாங்கம் எடுத்தோதல் சிறுபான்மை யென்பர்,

"மன்னர் ஏவல் பெற்ற மாந்தர்க்குத்
தொண்ணூ றெழுபது சொல்லியல் வரையார்"

"ஆங்கவை இனமுறை ஒன்றுமூன் றைந்தெழு [முப்பது]
ஓங்கிய வெண்பாச் சின்னப் பூவே."

(உரை II). எ-து, மலை.......ஆணை யென்ற பத்தையும் ஒவ்வொன்றுக்கும் பப்பத்து நேரிசை வெண்பாவாக நூறு நேரிசை வெண்பாப் பாடுவது சின்னப்பூ வென்னும் பிரபந்தமாம். இது ஆரிய மரபில் முடிபுனைந்த மன்னர்க்காம். இந்தத் தசாங்கம் பத்தையும் தனியே ஒரு பாவிலே ஓர் உறுப்புவரப் பத்துப் பாப்பாடுவது தசாங்க வருணனையென்று பேராம் எ-று.

(கு-ரை). வேந்தர்களுடைய சின்னங்களின் சிறப்பெல்லாம் தோன்றக் கூறுவது சின்னப்பூ.

(பி-ம்.) [1] 'சேருமா றெவ்வொன்றிற் பத்துப்பத் தாயுறச் செப்பிடுங்கால், ஆரிய மன்னர்க் கதுசின்னப் பூவென்பர் வேறொருபாச்' (15)

ஆணைவிருத்தம் முதலியன, ஊர் வெண்பா

41. ஆனை குதிரை யெழில்வேல்வில் வாள்குடை கோலிவற்றின்
ஈனமி லுடு நகரத் திறமென்பர் [1]மேவியல்பால்
ஆன திறத்தா சிரிய விருத்த[2]மீ ரைந்துவந்தால்
ஊனமில் வெள்ளைபத் தூர்வெண்பா வாக உரைப்பர்களே.

(உரை I). எ-ன், ஆனை விருத்தமும் குதிரை விருத்தமும் வாள் விருத்தமும் குடை விருத்தமும் செங்கோல் விருத்தமும் வில் விருத்தமும் வேல் விருத்தமும்... ஆமாறுணர்த்.......று. பத்து நேரிசை வெண்பாவினால் ஊரைப் புகழ்வது ஊர் வெண்பாவாம்.

"தானை பெற்ற தலைமை யோரையும்
ஏனைமுன் னோரைச் சொற்றன ராகத்
தானினி துரைப்பினும் தாழா தாகும்."

(உரை II). எ-து ஆனை விருத்தம்..........நாட்டு விருத்தம் நகர விருத்தம் என்று சொல்லப்பட்ட பிரபந்தம் ஒன்றுக்கொன்று பப்பத்து ஆசிரிய விருத்தம் பாடுவது இந்த வகையிற் பிரபந்தமாம்..........எ-று.

(கு - ரை). ஆனை, குதிரை முதலியன பொருளாக வெண்பாவி ருலும் பாடுதல் உண்டு. அவை ஆனைப்பா, குதிரைப்பா வென்று வழங்கப்பெறும் (பிரபந்தத். க. 15.)

(பி - ம்.) [1] 'மேவிலப்பால்' [2] 'மீரைந்தால் வரின்' (16)

அலங்கார பஞ்சகம், கைக்கிளை

42\. வெண்பாக் கலித்துறை வேரு சிரியம் விருத்தம்வண்ணம
பண்பால் [1]வருவ வலங்கார பஞ்சகம் ஆம்[2]பகர்ந்த
நண்பா லொருதலைக் காம நவின்ற விருந்தம்வந்தாற்
பெண்பால் [3]வரினவை கைக்கிளை யாமென்று பேசுவரே.

(உரை I). எ - ன், *அலங்கார பஞ்சகமும் கைக்கிளையும் ஆமாறுணர்த்........று.*

(இ - ள்). வெண்பாவும் கலித்துறையும் ஆசிரியப்பாவும் ஆசிரிய விருத்தமும் வண்ணமும் என்னும் ஐந்தும் வருதல் *அலங்கார பஞ்சகமாமெனக் கொள்க.*

"கைக்கிளை தானே கருதும் விருத்தம்
ஐந்து மூன்று மாகவும் பெறுமே." —செய்யுள் வகைமை.

*கைக்கிளை தானே மூன்று பாட்டாய்* வருதலாம்; *அலங் கார பஞ்சகத்தைப் பஞ்சாலங்காரமென்று உரைப்பாருமுளர் எ - று.*

(உரை II). எ - ன், வெண்பாவும் கலித்துறையும் ஆசிரியப் பாவும் ஆசிரிய விருத்தமும் வண்ணமும் இவ்வகையே *மாறி மாறி* [நூறு] *அந்தாதியாகப் பாடுவது அலங்கார பஞ்சக மென்று சொல்லப்படும் எ - று.*

*இவைவிற்றைத் தனித்தனியே முப்பது முப்பதாக ஒரு தலைக் காமமாகப் பாடுவது கைக்கிளை என்று வழக்கப்படும் எ - று.*

(கு - ரை). ஐந்து விதச் செய்யுள் பயின்று வருதலின் பஞ்சக மாயிற்று. இவை மாறி மாறி அந்தாதித் துறையில் வரும். கைக் கிளைப் பிரபந்தத்தின் செய்யுட்டொகை நூலுக்கு நூல் வேறுபடுகிறது.

(பி - ம்.) [1] 'வரும்பா' [2] 'பயந்த' [3] 'வருமவை' (17)

பாதாதி கேசம், கேசாதி பாதம், அங்கமாலை

43. கடிதலில் லாக்கலி வெண்பாப் பகரும் அவயவங்கள்
முடிவது கேசமக் கேச முதலடி சாம்வந்தாற்
படிதிகழ் பாதாதி கேசமுங் கேசாதி பாதமுமாம்
[1]மடிதலில் வெண்பா விருத்தம் பலவங்க மாலையென்னே.

(உரை I). எ - ன், கேசாதி பாதமும் பாதாதி கேசமும் [அவயவங்கள் வெண்பா மரபும்]? உணர்த்......று.

(இ - ள்). கலிவெண்பாவினுற் பாதமே தொடங்கிக் கேசாந்தமாய்வரிற் பாதாதி கேசமாம்; கேசமே தொடங்கிப் பாதாந்தமாய்வரிற் கேசாதி பாதமாம்; வெண்பாவானும் விருத்தங்களானும் வருவது அங்கமாலையாம் எ - று.

(உரை II). எ-து..........பாதாதிகேசப் பிரபந்தமென்றும் கேசாதிபாதப் பிரபந்தமென்றும் சொல்லப்படும். வெண்பாவினுலே நூறும் ஐம்பதுமாக உறுப்புக்களைச் சிறப்பித்துப் பாடுவது அங்கமாலையென்று வழங்கப்படும் எ - று.

(கு - ரை) தெய்வங்களுக்குப் பாதாதி கேசமும் ஏனையவர்களுக்குக் கேசாதி பாதமும் கூறுதல் மரபென்பர்.

(பி - ம்). [1] 'முடிதலில் வெண்பாவீ ரைம்ப தவையங்க.' (18)

பாதாதிகேசம் முதலியவற்றுக்கு உறுப்புக்கள்

44. அகங்கா லுகிர்விரன் மீகால் [1]பரடு கணைமுழந்தாள்
[2]மிகுங்கா னிதம்பமு முந்தியுதர மரை முலையும்
நகஞ்சார் விரலங்கை முன்கைதோள் கண்டம் முகம்நகைவாய்
நகுங்கா திதழ்மூக்குக் கண்புரு வம்நெற்றி தாழ்குழலே.

(உரை I) எ - ன், ஓதிய பாதாதி கேசத்துக்கும் கேசாதி பாதத்துக்கும் உறுப்புக்கள் இவையென்பது உணர்த்....று.

உள்ளங்கால், உகிர், விரல், புறங்கால், பரடு, கணைக்கால், முழந்தாள், குறங்கு, அல்குல், கொப்பூழ், வயிறு, அரை, உயர்முலை, உகிர், விரல், உள்ளங்கை, முன்கை, தோள், கண்டம், முகம், முறுவல், வாய், காது, இதழ், மூக்கு, கண், புருவம், நெற்றி, குழல் என்னும் முப்பத்திரண்டு (?) உறுப்பும் பாடற்கு இசைந்தனவே எ - று.

" அகத்திய னுதலிய பல்பொருள் வகையான்
அகவல் வஞ்சி யாமிரு பாவினும்
அவைவரத் தொடுப்ப தவயவ மாலே
அதுகலி விரவினும் வரையா ராண்டே."

என்பது பொய்கையார் பாட்டியல்.

(உரை II). எ - து........அகங்கால் முதலாகக் குழல் ஈறுகச் சொல்லப்பட்ட இவ்வுறுப்பனைத்தும் குறையாமற் சிறப்பித்து முன்சொன்ன பாதாதிகேசப் பிரபந்தம் பாடப் படுவது எ - று.

(பி - ம்.) [1] 'பரட்கணைக்கால்' [2] 'மிகுங்காலுண் டாயிடை கொப்பூழ் வயிறுயர் வெம்முலையாய்' (19)

உலா, தூது, குழமகன்

45. தெருவினிற் பேதை முதலெழு வோர்கள் [1]திறத்துவகை
ஒருவனை யேத்துங் கலிவெண்பா தூதுலா ஒண்டொடியாய்
[2]மருமலர்க் கையிற் குழமகன் மேல்வைத்த மன்னவர்க்குத்
தருகலி வெண்பாக் குழமக னென்று [3]சாற்றுகவே.

(உரை I). எ - ன், உலாப்புறமும் குழமகனும் ஆமா றுணர்த்....று.

(இ - ள்). தெருவின்கண் பேதை பெதும்பை மங்கை மடந்தை அரிவை தெரிவை பேரிளம்பெண்ணென ஏழும் வழுவாது வேட்டோர் தமக்காக்கலும் காவலர் தமக்கும் உரிமை களவென உணர்தல் வேண்டுமென்ப. "பேணுதகு சிறப்பிற் பெண்மக வாயின், மூன்று மாண்டின் மொழிகுவ குழமகன்."

(உரை II). எ - து. எழுவகைப் பருவத்துப் பெண்களும் தெருவினில் திருவுலாப்புறத்து வருகிறவனைக் கண்டு மயங்கி மயலெய்தியதாகக் கலிவெண்பாவினுலே கூறுவது உலா வென வழங்கப்படும். தூது பாடுவதும் குழமகன் பாடுவதும் இக்கலிவெண்பா வெனப்படும் எ - று.

(பி - ம்.) [1] 'டிறத்துக்கமை' [2] 'வருமகற்' [3] 'சாற்றுவமே' (20)

பெண்களின் ஏழு பருவங்கள்

46. பேதை முதலெழு வோர்க்குப் பிராயங்கள் பேசிடுங்கால்
[1]ஆதியி லைந்தேழ் பதினொன்று பன்மூன்று பத்தொன்பதே
மீதிரு பத்தைந்து முப்பத்தொன் றாகிய நாற்பதென
ஓதுவர் தொன்னூற் பருணித ரெல்லாம் உணர்ந்துகொண்டே.

(உரை I). எ - ன், பேதைமுதல் எழுவர்க்கும் உரிய பருவ வரையறை உணர்த்......று.

(இ - ள்). பேதை ஐந்துமுதல் ஏழாம்; பெதும்பைக்கு எட்டும் ஒன்பதும் பத்தும்; மங்கைக்குப் பதினொன்றும் பன்னிரண்டும்; மடந்தைக்குப் பதின்மூன்று முதற் பதினெட்டளவும்; அரிவைக்குப் பத்தொன்பது முதல் இருபத்து நான்களவும்; தெரிவைக்கு இருபத்தைந்தாதி முப்பதளவும்; பேரிளம்பெண்ணுக்கு முப்பத்தொன்றாதி நாற்பதளவும் முடியும் பருவங்கள் எ - று.

"ஓதலும் பாடலு மூசலும் பிறப்பும்
பதினெண் தேசத்துப் பலபல பேச்சின் நவிறலும்
அனைவர்க்கு முரித்தே ஆயுங் காலை"
"மங்கை முதலா மற்றவரும்
ஆடை யுடுத்தலும் ஆகம் புனையலும்
அம்மனை கழங்கே யூசல் பந்தொடு
சூது பொருதலுங் காளையர்ப் பிரிதலும்
ப......யத்திலும் மக்களுள வாக
அனையவை பிறவுமவர்க் குரிய வென்ப."

(உரை II). எ - து. எழுவகைப் பருவம் அறியுமாறு: பேதைக்குப் பிராயம் ஏழு, பெதும்பைக்குப் பிராயம் பதினொன்று, மங்கைக்குப் பிராயம் பதின்மூன்று, மடந்தைக்குப் பிராயம் பத்தொன்பது, அரிவைக்குப் பிராயம் இருபத்தைந்து, தெரிவைக்குப் பிராயம் முப்பத்தொன்று, பேரிளம் பெண்ணுக்குப் பிராயம் நாற்பது. இந்த எழுவகைப் பருவத்துக் குணமுமறிந்து பாடுக. அந்த அந்தப் பருவத்துக் குணம் தவறிற் குற்றமாம். இந்த எழுவகைப் பருவ மங்கையரும் திருவுலாப்புறத்து வருகிற தலைமகனைக் கண்டு மயங்குவதாகப் பாடுவது உலாவென வழங்கப்படும் எ - று.

உலாவென்னும் பிரபந்தம் பாடுவது; முடிபுனைந்த மன்னவருமாய் இருபத்தொரு பிராயத்துக்கு உட்பட்டவர்களுக்கும் தேவர்களுக்கும் உலாப்பாடலாம். அல்லாதவர்களுக்கு ஆகாது.

(கு - ரை.) உலாவை உலாப்புறமென்றும் வழங்குவர். இங்கே கூறப்பட்ட பிராயங்கள் வேறு நூல்களில் சிறிது மாறுபட்டும் காணப் படுகின்றன.

(பி - ம்.) [1] 'ஆதலைந் தேழ்பதி னென்றுபன் மூன்றுபத் தொன் பெனவே' (21)

## மடல்

47. பொருளறம் வீடு பழித்தின்ப [1]மேபொரு ளாக்கிநல்லார்
அருள்பெறு வேட்கை மடன்மிக வூர்தலிற் [8]பாட்டுடையோர்க்
குரிதரு பேரிற் பெயருக் கிசைந்த எதுகையினல்
வருகலி வெண்பாத் தனைமட லாக வகுத்தனரே.

(உரை I). எ - ன், மடலாமாறுணர்த்......று.

(இ - ள்). அறம் பொருள் வீடென்னும் மூன்றையும் பழித்துக் காமமே பொருளாக அரிவையர் அருள் பெறும் வேட்கையினல் மடலூர்வலென்னும் பொருள் பாட்டுடைத் தலைமகன் இயற்பெயராகிய அந்த எதுகை வருத்து ஆக்கிய கலிவெண்பாவை மடலென்றுரைப்பர் வண்டமிழ்ப் புலவர் எ - று.

(உரை II). எ - து. அறம், பொருள், வீடு என்ற மூன்று காரியங்களையும் பழித்து, இன்பமே பொருளாக்கி, இந்த இன்பத்துக் கிடமான சிறப்பினையும் வைத்துப் பாட்டுடைத் தலைமகன் பேருக்கிசைந்த எதுகை [யினுலே ஏதுவாக] வைத்துக் கலிவெண்பாவினுலே, தலைமனிரந்து குறைபெறாது மடலேறுவதாய், ஈரடி யெதுகை வரப்பாடுவது மடலென்று சொல்லப்படும் எ - று.

(கு - ரை). இந் நூலைப் போலவே பிரபந்தத்திரட்டும் வச்சணந்தி மாலையும் மடல் என்றே கூறும்; சில நூல்கள் வளமடல், உலாமடல்

என்று கூறும். பெண்கள் மடலேறுவதாகக் கூறும் மடல் நூல்களும் உள்ளன.

(மி - ம்.) [1] 'மெய்ப்பொரு' [2] 'மருள்பெறு' [3] 'பாட்டுடை யோரிரு பொருளாகவவர் பேருக் கேய்ந்த' (22)

நாம மாலை, புகழ்ச்சி மாலை, வஞ்சி மாலை

48. [1]பாதம் பலமயங் கும்வஞ்சி யாடவ ரைப்பரவி
[2]ஓது மதுநாம மாலை யுரைத்தவச் செய்யுளினல்
மாதரை யேத்திற் புகழ்ச்சிநன் மாலைமற் றெப்பொருளும்
நீதியி னுற்சொல்லி [3]னப்பெய ரால்வஞ்சி நேர்ந்தனவே.

(உரை I). எ - ன், எல்லாவடியும் மயங்கிய வஞ்சிப்பாவால் ஆடவரைப் புகழ்ந்து பாடுதல் நாம மாலையாம்; பெண்களைப் புகழ்ந்து பாடிற் புகழ்ச்சி மாலையாம் என்றவாறு; மற்றெல்லாப் பொருளானும் வஞ்சிப்பாவிற் (பாடின்) வஞ்சி மாலையாம் எ - று.

அவை வரலாற்றுவஞ்சி அமர்க்களவஞ்சி என்பன போல்வன.

> " அராகம் வெள்ளை யகவல் முதலின்
> ஆசிரியம் வஞ்சி மெல்லியர்ப் புகழினும்
> வரைத லிலவென வுரைசெய்வர் புலவர் "

என்பது முள்ளியார் கவித்தொகை.

(உரை II). எ - து......வஞ்சிப்பா அறுபதினாலே மடந்தைப் பருவத்துப் பொதுகளிரைப் புகழ்ந்து பாடுவது புகழ்ச்சி மாலையென்று வழங்கப்படும்; வஞ்சிப்பாவினாலே நீதிப் பொருள் அனைத்தும் சொல்லுவது வஞ்சிமாலை எனப் படும் எ - று.

இந்த வஞ்சிப்பாவினாலே நாமமாலை பதினாறு வயசின் இளைஞராய்ச் சவுரியவான்களாய்ச் சமர்முகத்திலே சாமர்த்திய முதன்மை யுடையவர்களுக்குப் பாடலாம். மற்றவர் களுக்குப் பாடலாகாது.

(கு - ரை). ஒருவனுடைய வனப்பு, ஆற்றல், கல்வி, மரபு, குணம், குடி முதலியவற்றை வஞ்சியால் வழுத்துவது வரலாற்று வஞ்சியாம்,

அமர்க்கள வஞ்சி என்பது செருக்கள வஞ்சி எனவும் வழங்கும் செருவில் மாண்டாருடலையும், கரியுடல், பரியுடலையும் காகம், கழுகு, நாய், நரி, பேய் முதலியவை தின்று களத்தாடும் சிறப்பைச் செப்பல் இதுவாம்.

(பி - ம்.) [1] 'பாதம் மயங்கும்வஞ் சிப்பாட்டி லாட வரைப்பரவி • [2] 'ஓதில' [3] 'னப்போது நால் வஞ்சி' (23)

ஆனைத் தொழில்

49. பிறந்த நிலங்குல மோக்க மளவு பிராயமெழில்
சிறந்தமாக் கோபக் [1]கிரமத்தில் விட்ட கதிர்சினத்தால்
இறந்துயிர் கோடல் செயக்கண் டிறைகந் தினிற்பிணித்தல்
உறைந்திடும் வஞ்சி யுரமுடை யானைத் தனித்தொழிலே.

(உரை I). எ - ன், *ஆனைத் தொழிலாமா றுணர்த்........று.*

(இ - ள்). *ஆனை பிறந்த தேசமும், அதன்குல நன்மையும், தனது ஒக்கமும், அளவும், பிராயமும், கோபக்கிரமத்தால் அதனை நிலைநின்று நீக்கியவாறும், அது சினமிகுதியாற் கொலை புரிந்தவாறும் கூறிப் பின்பு அரசன் கந்தினையணையெனச் சேர்த்தவாறும் உரைக்கும் வஞ்சி யானைத் தொழிலாம் எ - று.*

(உரை II). எ - *து........ஆசிரிய விருத்தமாக மூந்நூறு பாடப்படுவது ஆனைவிருத்தமென்றவாறு.*

(கு - ரை). ஒக்கம்—உயர்ச்சி. கந்து - கட்டுத் தறி. இறந்து - வரம்பு கடந்து. இறை - அரசன். மதங்கொண்டு திரியும் யானைகளை அடக்குதல் மன்னர்க்குரிய சிறந்த லட்சணங்களுள் ஒன்றென்பது மணிமேகலை, பெருங்கதை, சீவகசிந்தாமணி முதலிய நூல்களால் தெரிய வரும்.

(பி - ம்.) [1] 'கிரமத்தி லெட்டாங்கத் துச்சினத்தால் (24)

நயனப்பத்து, பயோதரப்பத்து, பொன்னூசல்

50. †அரசர் விருத்தங் கலித்துறை யீரைந்து கண்முலைமேற்
பரசி னயனம் பயோதரஞ் சேர்ந்த விருத்தமென்ப
வரன்முறை சுற்றத் தனவாம்பொன் னூசல் வடிவுதுற்றே
உரைசெய் கலித்தா ழிசையேபொன் னூசலென் றோதுவரே.

(உரை I). எ - ன், நயன விருத்தமும் பயோதர விருத்த மும்........

ஆசிரிய விருத்தம் பத்தாற்றான், கலித்துறை பத்தாற்றான் நயனத்தைப் புகழ்ந்தது நயனப் பத்தாம்; பயோதரத்தைப் புகழ்ந்தது பயோதரப் பத்தாம். ஊசலுறுப்பு வந்தன செய்து சுற்றத்தளவாம் கலித்தாழிசை பொன்னூச லென்றவாறு.

(கு - ரை). அரசர் விருத்தம் - ஆசிரிய விருத்தம்; ஆசிரியம் அரசர்க்குரிய பா ஆதல் அறியத்தக்கது. பயோதரம் - பாலைத்தரித்துள்ளது; நகில்; காரணக் குறி. சுற்றத் தளவாம் என்றது சுற்றம் பொலியச் சுகமொடு வாழ்கவென்று கூறும் மரபுபற்றி என்க. இவ் வாசிரியர் ஊசல் கலித்தாழிசையால் வரும் என்றாரேனும் பிறபாட்டியல்களின் ஆசிரியர்கள் ஆசிரிய விருத்தத்தாலும் வரும் என்று கூறுவர். 'ஆடிரூசல்,' 'ஆடாமோ ஊசல்' என்ற தொடர்களில் ஒன்று ஈற்றில் அமைதலுண்டு. (25)

அரசன் விருத்தம்

51. *அரசன் விருத்தங் கலித்துறை யீரைந் தகன்மலைமேல்
விரவிய நாடு நகர்சிறப் பாய விருத்தமுப்பான்
உரைசெய் கலித்தா ழிசையும்வாண் மங்கலம் ஓதுவது
புரவல ராயவர்க் காமென் றுரைப்பர் புலவர்களே.

(உரை II). எ - து பத்துக் கலித்துறையும், முப்பது விருத்தமும், கலித்தாழிசையுமாக மலை [கடல்] நாடு வருணனையும், நகர் வருணனையும் [நிலவருணனையும்] பாடி, வாள்மங்கலமும் தோள் மங்கலமும் பாடி முடிப்பது அரசன் விருத்தமென்னும் பிரபந்தமாம் எ - று. இது முடிபுனைந்த மன்னர்க்குப் பாடுவது.

(கு - ரை). அரசன் விருத்தத்தைப்பற்றிய குறிப்பு வெண்பாப் பாட்டியல் முதலிய பழைய பாட்டியல்களில் இல்லை. பிரபந்ததீப ஆசிரியர், நவநீத நடனார் கூறியபடியே இப்பிரபந்த இலக்கணத்தைக் குறிக்கிறார்; 'அரசன் விருத்தமே ஐயிரு கலித்துறை, விருத்த முப்பான் வெண்கலித் தாழிசை, இவற்று லிறைவ னெழிலூர் மலை கடல், வாண்மங் கலந்திண் டோள்மங் கலமுதல், வருணனை யெல்லாம் வகுத்துப் பாடலே' என்பது அது. (26)

அட்டமங்கலம், நவமணிமாலை, தசப்பிராதுற்பவம்

52. இறைவனை யேத்திய வெட்டா சிரிய விருத்தம்வண்ணம்
மறைமுத லோரட்ட மங்கல மென்பமற் றென்பதனை
நறைவளர் கோதை நவமணி மாலைபத் தான்வரினே
[1] குறைவில் லதுதசங் கூறிற் றசப்பிரா துற்பவமே.

(உரை I). எ - ன்; *அட்டமுங்கலமும், நவமணிமாலையும் தசப்பிராதுற்பவமும் ஆமாறுணர்த்.........து.*

(இ - ள்). *ஆசிரிய விருத்தம் எட்டு வருவது அட்டமங்கலம்; இச் செய்யுள் ஒன்பது வருவது நவமணிமாலை; இச் செய்யுள் பத்தாற் கருமுகில் வண்ணன் அவதாரம் பத்தினையும் வருணித்து வருவது தசப்பிராதுற்பவமாம் எ-று.*

" சந்த மாலையிற் றண்டக மாலையும்
தொண்டி னியன்றது நவமணி மாலை;
எட்டு வருவ தட்டமங் கலமாம்;
ஏழொடு வருவது தாரகை மாலை;
மங்கல மாவது மாலவ தாரம்
கொண்டாங் கொருபதாற் கூறலு மாமே."

" இளைய மகளிர தியம்பின வென்பது
*திருவி றாசிரியத் தூக்கிய லாகலின்*
தாரகை மாலையுந் தக்கவழிப் பிறந்து
புணரத்......தாண்டக மென்பது
இருபத்தா றெழுத்தின் மேற்பட்ட
எழுத்தான் வரும(டி) நான்குடையவற்றைச்
சந்தமுந் தாண்டகமுங்குருவும் இலகு(வு)ம்
ஒத்த எழுத்தான் வருமே."

(உரை II). *எ - து, முடிபுனைந்த மன்னர்க்கு எட்டாசிரிய விருத்தம்.......பத்தாசிரிய விருத்தம் பாடுவது தசாங்கத்தியல் (பி - ம்) என்று சொல்லப்படும் எ - று. இப்படிப் பாடுமிடத்துக் கொலை முதலாகிய கொடுமைச் சொல் வரலாகாது.*

(கு - ரை). தசப்பிராதுற்பவம் என்பது அரிபிறப்பு, உற்பவமாலை என்ற பெயர்களாலும் வழங்கப்பெறும். திருமாலின் பிறப்பை விருத்தம் பத்தாலே வாழ்த்தித் தலைவனைக் காப்பாற்றுக என்றல் இந்நூலின் இலக்கணமாகும். தொண்டு - ஒன்பது. (27)

(பி - ம்.) [1] குறைவில் தசாங்கத் தியலது வாமென்று கூறுவரே'

மெய்க்கீர்த்தி, ஆற்றுப்படை

53. சிறந்தமெய்க் கீர்த்தி யரசர் செயல்[1]சொற் றனவாய்ச் செயபுள்
[2]அறைந்ததோர் சொற்சீ ரடியாம் [3]புலவர்கள் வாழ்த்துநலம்
[4]நிறைந்த பொருநரைப் பாணரைக் [5]கூத்தரை நீணிதியம்
பெறும்படி யாற்றுப் படுப்பன வாசிரி யம்பெறுமே;

(உரை I). எ-து ஆசிரியவடியும் வஞ்சியடியுமாகிய சொற்சீரடியானே சிறந்த மெய்க் கீர்த்திச் செயலான(வை) மொழிந்தன வென்றார்; அக்கீர்த்தி ஆசிரிய அடியும் வஞ்சி அடியுமாகிய சொற் சீரடியானே முடியும்; கூத்தரையும் பொருநரையும் பாணரையும் புலவர் ஆற்றுப் படுப்பது ஆசிரியம் பெறும் எ - று:

(உரை II). எ-து, ஒரு தலைமகனிடத்திலே நின்று பரிசில் பெற்ற பாணன், நடுவில் வருகிற பாணரைக் கூத்தரைக் கண்டு, அவர்களுக்கும் பரிசில் கொடுத்த தலைமகன் ஊரும் நாடும் அவன் பேரும் அவனுடைய சிறப்பும் உரைத்து, "அவனருகு நீரும் செல்லுவீராகில் வேண்டியது தரும்" என்னும்படி ஆறு அகவற் கவியாகப் பாடுவது ஆற்றுப் படையென்னும் பிரபந்தமாம் எ - று.

(கு . ரை). அரசர்களுடைய உண்மைப் புகழைக் கூறுவது மெய்க் கீர்த்தி எனப்படும். சாசனங்களின் தொடக்கத்தில் மெய்க்கீர்த்தி பயின்று வரும். ஒவ்வோர் அரசனுடைய மெய்க்கீர்த்தியின் தொடக்கம் ஒவ்வொரு விதமான தொடரை முதலிலே பெற்றிருக்கும். சொற்சீரடி, அம்போதரங்கம், அசையடி, பிரிந்திசைக்குறள், எண் என்பன ஒருபொருட் சொற்கள். ஆறு அகவற்கவியாகப் பாடுவது என்றது திருமுருகாற்றுப்படையை நோக்கிப்போலும். ஆற்றுப்படையிற் கூறப்படும் பொருள்கள் இவையென்பது மலைபடு. 67-93-ஆம் அடிகளாலும் அவற்றின் உரையாலும் விளங்கும்.

(பி - ம்.) [1] 'சொற்றவாறு செய்யுள்' [2] 'உறைந்திடு' [3] 'புலவரை வாழ்த்துமிடம்' [4] 'திறந்தருதானை' [5] 'கூத்தரையும்' (28)

### கோவை, நாழிகைக் கவி

54. பொருளதி காரத் [1]திறத்தைப் புகன்று கலித்துறைகள்
வருவது நானூறு கோவையென் [2]ருகுமவ் வானவர்க்கும்
அரசர் தமக்கு மறிய உரைத்த [3]கடிகைகளை
உரைசெய்யுண் முப்பத் திரண்டுவெண் பாவென ஓதுவரே.

(உரை I). எ - ன், *கோவையும் நாழிகைக் கவியும் உணர்த்....று.*

(இ - ள்). *அகப்பொருளையுடைய நானூறு கலித்துறை [யாக்குவன விதத்தால் வளப்படுத்த] கோவையாகும்; அவை* அரசர் கோவை, பாண்கோவை *போல்வன. அரசர்க்கும் வானோர்க்கும் உரைக்கும் கடிகைகளை முப்பத்திரண்டு வெண் பாவினால் உரைப்பது நாழிகைச் செய்யுளாம் எ - று.*

(உரை II). *எ - து, பொருளதிகாரத்துட் பிரமம், பிராஜா பத்தியம், ஆரிடம், தெய்வம், காந்திருவம், அசுரம், இராக் கதம், பைசாசம் என்று சொல்லப்பட்ட எட்டுவகை மணத் தினுள் காந்திருவ மணத்தில் நானூறு கலித்துறை பாடுவது கோவையென்று வழங்கப்படும்; வெண்பா முப்பத்திரண்டு பாடுவது கைக்கிளை யென்று வழங்கப்படும் எ - று.*

(கு-ரை.)அரசர் கோவை,களவியற்காரிகையுரையில் அரையர்கோவை என்னும் ஒரு நூற் பெயர் காணப்படுகின்றது. நாழிகைச்செய்யுள், நாழி கைக்கவி, நாழிகைவெண்பா, கடிகை வெண்பா என்பன ஒரு பிரபந்தத் தையே குறிப்பனவாகும். (29)

(பி - ம்.) [1] 'தறத்தை' [2] 'ருகுவ' [3] 'படிகைக்கிளை'

### மருட்பாப் பிரபந்தம்

55. புறநிலை வாயுறை வாழ்த்துப் [1]புவியில் ஒருவன்செவி
யறிவே யுறுத்த லகப்புறக் கைக்கிளை ஆனவிந்த
நெறியிற் பொருள்களை யன்றி மருட்பா நிகழ்த்தலினால்
அறியவிந் நாற்செய்யு ளல்லாத பாவினும் ஆமென்பரே.

(உரை I). எ - ன், *மருட்பாவுக்குரிய பொருள் ஆமா றுணர்த்....று.*

(இ - ள்). புறநிலை வாழ்த்து, செவியறிவுறூஉ, கைக்கிளை, வாயுறை என்னும் நான்கு பொருளின் மேலும் மருட்பா வரும் என்பதூஉம், இப்பொருண்மேற் பிற செய்யுளும் வருமென்பதூஉம் ஆம் எ - று.

(உரை II). மருட்பாப் பிரபந்தம் பாடுமிடத்துப் புறநிலை வாழ்த்து மருட்பாவும் கைக்கிளை மருட்பாவும் வாயுறை வாழ்த்து மருட்பாவும் செவியறிவுறூஉ மருட்பாவும் என்று நான்கு வகை மருட்பாவினாலும் பாடப்படுவது மருட்பாப் பிரபந்தமென்று வழங்கப்படும் எ - று.

இது பாடுமிடத்துத் தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் முடிபுனைந்த மன்னர்களுக்கும் பாடலாம். குறுநில மன்னருக்கும் குடும்ப சகிதமாயிருக்கிறவருக்கும் பாடலாகாது.

(பி - ம்.) [1] 'புலமில்' (30)

பரணி

56. புறநடை சேர்குர வைப்பொருண் மேலிங் கிருவர்மன்னர்
திறனுடை யானைப் படைசெற்று வென்ற ஒருவன்செய்கை
நெறிபடு நேரடி யேமுத னீண்டன ஈரடியாய்ப்
பெறலருந் தாழிசை யாற்பர ணிப்பெயர் பேசுவரே.

(உரை I). எ - ன், பரணி ஆமாறுணர்த்.........று.

(இ - ள்). இருவர் வேந்தர் யானை பொருத வெற்றி ஒருவன் செய்கிற புறநடைசேர் குரவைமேல் நேரடி முதலான சீர்களின் இவ்விரண்டடியாய்த் தாழிசையான் வருவது பரணியாம் எ - று.

(உரை II). இரண்டு முடிபுனைந்த மன்னர் தங்களிலே மாறுபாடாகி யுத்தம் பண்ணின யுத்தபூமியிலே வெற்றி மேற்கொண்டு ஆயிரம் யானையைக் கொன்று சகல பல சங்காரம் பண்ணச் சயங்கொண்டு முடிபுனைந்த மன்னவனுக்கு ஈரடித் தாழிசையாக எண்ணூறு தாழிசை பாடுவது பரணியென்னும் பிரபந்தம் என்று வழங்கப்படும் எ - று. (31)

இதுவுமது

57. மற்றது வானவர் வாழ்த்துக் கடைவாழ்த்துப் பாலைநிலப்
பெற்றி [1]பிறைமுடி சூடிறை யோன்பெருந் தேவிமகிழ்ந்
துற்றுறை கோயி லவளை யுரைத்தல் அலகைக்குழாம்
சுற்றிய வண்ண மவைதம் பசியைப்பின் சொல்லுதலே.

(உரை I). எ - ன், அந்தப் பரணியாவது வானவர் வாழ்த்தும், கடை வாழ்த்தும், பாலைநிலத்துப் பண்பும், பிறைமுடியவன்றன் பெருந்தேவி யிருந்த கோயின்மரபும், அவளது தன்மையும், அவளைப் பேய்க்குழாம் சூழ்ந்ததும், அவைகள் தம் பசியுணர்த்துதலும் எ - று.

(உரை II). (மூலமும் உரையும்)

" மற்றது நால்வகைப் பெண்கள் வரிசை கடைதிறப்புப்
பெற்றிய பாலை வனத்தின் குறிப்புப் பிறைமுடிசூழ்
உற்றவள் கோயி லவளைப் பணிந்த வலகைக்குழாம்
சுற்றிய வண்ண மவைதம் பசிப்பினைச் சொல்லுதலே."

எ - து, முன்சொன்ன பரணியென்னும் பிரபந்தம் பாடுமாறு: வானர மகளிரும், வரையர மகளிரும், திரையர மகளிரும், செழுநில மகளிருமாகிய நால்வகைப் பெண்கள் வரிசையும் ஊடலும் கடைதிறப்பும் தீர்த்தக் கரைகளும் தெய்வலோகத்தியற்கையும் பாடி, பாலைநிலமும் பாலைநிலத்தின் குறிகளும் பாடி, அதற்குத் தலைவியாகிய பத்திரகாளி கோயில் அலங்காரமும் பேய்க்கணங்கள் கூட்டமும் அவைகளின் வளமையும் பத்திரகாளி முதலாயின பூத கணங்களும் பேய்க்கூட்டமும் உணவு விரும்பலும் மேற்கோளும் பாடுவது எ - று.

(கு - ரை.) வான் அரமகளிர்.

(பி - ம்.) [1] 'பெருங்கா னகமிறை' (32)

இதுவுமது

58. ஆங்குக் களத்துன் னிமித்தம் வகையறி வித்திடவே
பாங்கிற் [1]பணிமொழி பைம்பொன் முடிமன்னர் தம்பகையார்
தீங்கிற் செருச்செய் தொருவன் றிறல்வாகை சென்னிவைத்தல்
[2]சங்குற் றிடவே ரெருபே யுவகை இசைத்திடலே.

(உரை I). எ - ன், அங்கிலேக்கண் கனத் துன்னிமித்தம், பகைக்களம் கண்டபடி வந்து (ஒரு பேய்) கூற, நாயகியும் அது கூறக்கேட்டு இருவர் அரசர் தம்மில் தோன்றிய பகையினுல் செருச்செய்து ஆனை தேர் குதிரை கருவி காலாள் அனைத்தும் பட அவர்களில் ஒருவன் வெற்றி வாகை சூடு தலைச் செப்பும் எனக் கனவிடுத்திருக்கும் அளவின்கண் வேறொரு பேய் உவகை கூறி வருதலும் உண்டு எ - று.

(உரை II). எ - து, பாலை நிலத்துக்கு அதிபதியாகிய சாமுண்டி பத்திர காளியைச் சூழ்ந்திருக்கப்பட்ட பரிகலமாகிய பேய்க்கூட்டத்தில் ஒரு பேய், 'உறக்கத்திற் கனவு கண்டேன்' என்று அந்தக் கனவைத் தன்னுடைய பக்கத்தில் இருக்கிற பேய்க்கூட்டத்துக்குச் சொல்லுவதாக வினை முந்திய கனவென்று சொன்னவாறு.

"இருவர் மன்னர் தங்களில் மாறுபாடாகிச் சமரபூமியில் ஆனை குதிரை தேர் காலாட்படைக் கூட்டத்துடனே எதிர்ந்து, வில் வாள் தோமரம் முடாகம் பிண்டி பாலம் முசலம் தழற்றட்டை விட்டேறு சக்கரம் நாராசம் தண்டம் சூலம் மழு கற்கடம் என்று சொல்லப்பட்ட தொண்ணூற்றெட்டு ஆயுதமும் எடுத்து ஒருவருக்கொருவர் மோதி உயுத்தம் பண்ணி, முடிமன்னரும் யானையும் குதிரையும் பதாதியும் பட்டு அந்த நிண மூளையும் தசையும் இரத்தமும் கலந்த பொருகளத்திலே, பாறும் கழுகும் காகமும் நாயும் நரியும் பேயும் பூதமும் இவையெல்லாம் கூடி நிணச் சதைகளைத் தின்று களிக்கவும் வீரமகள் விரும்பிச் சமர பூமியிலே வந்து தோன்றவும் இப்படிக் கனவு கண்டேன்" என்று கண்ட பேய் சொல்லக்கேட்ட பேய்க்கணங்கள் களிப்ப (வேறொரு பேய்) தோன்றிற்று.'

(கு - ரை.) வினை முந்திய கனவு: ''வினைமுந் துருத வுரையில்லையில்லை, கனமுந் துருத வினை'' (பழ. 2.) (33)

(பி - ம்.) [1] 'பனிமொழி பொன்முடி மன்னவர்' [2] 'ஈங்கிற் சிலவே'

இதுவுமது

59. [1]உண்டா முவகை தனையவ ரான்மகிழ்ந் தோலக்கத்திற்
கொண்டாடல் கூறிய பேயினைக் கூவிக் [2]கொலைக்களந்தான்
கண்டார்ப் புறல்களம் வாழ்த்துதல் கைம்மலை வெண்மருப்புத்
தண்டா லுலந்தவர் தம்பற் றரளம் தடுக்குதலே.

(உரை I). எ - ன், உவகை வார்த்தை நாயகியுங் கேட்டு விரும்பினள்; ஓலக்கத்துக் கொண்டாடும் விருப்பம் தரும் சுவை, பாவம் விளக்கும் இருமார்க்கங்கள் உரைத்தலும், கூறிய பேயினை ஆர்வத்தினாற் பின்னும் கூவிச் சென்று களங்கண்டு களித்தலும், போர்க்களத்தை வாழ்த்தலும், பட்ட யானைகளது வெண்மருப்புலக்கையால் மத்தகத்திற் பிறந்த முத்தும் செருவில் உலந்தார் பற்களும் சேர்த்துக் குத்தலும் ஆம் எ - று.

(உரை II). பாலை நிலத்துக்கு அதிபதியாகிய பத்திரகாளி கனவு கண்ட பேயை மகிழ்ந்து தன் பக்கத்திலிருக்கிற யோகினியையும் மோகினியையும் 'கொலைக்களங்கள் உண்டான இடங்களைத் தேடி அடையாளம் கண்டு வருவீர்கள்' என்று ஏவப் பன்னீராயிரம் பேய்க் கூட்டத்துடனே யோகினி ஒரு திசையும் மோகினி ஒரு திசையும் தேடிப் போயினாராகக் கருதுவது எ - று.

(பி - ம்.) [1] 'உண்டா வேகை தனிலதைத் தான்மகிழ்ந்' [2] 'கொலைக் களங்கள், கண்டாடல் போர்க்களம்' (34)

இதுவுமது

60. முடியடுப் பிற்றேல் வயிற்றுக் குழிசியில் மொய்குருதி
நெடுவுலை யேற்றி நிணம்பெய்து கோப நெருப்பெரித்துத்
தொடியுடைத் தொட்டுடுப் பிற்றுழாய்ப் [1]பேயூட்ட
[அம்மையுண்டங்
கடுதிறன் மன்னனை மன்னூழி வாழ அருளுதலே.

(உரை I). எ - ன், பட்ட மன்னர்கள் முடிகளே அடுப்பாக ஆனையின் வயிறே குழிசியாகக் குருதியே உலை நீராக நிணமே உண்ணமுதமாக (ப்பெய்து) கோபமே நெருப்பாகத் தொடித்

தோள்களே துடுப்பாகத் துழாவி (யாக்கி)ப் பேயூட்ட, 'நாயகி யும் உண்டு செருவென்ற மன்னனை மன்னூழி வாழ்வதென்று நின்று கூறு (தலு) மாம் எ - று.

(உரை II). எ - து, சமர பூமியிற்பட்ட மன்னர் முடிகள் அடுப்புக் கல்லாகவும் [இரத்தினங்கள் அக்கினியாகவும் வைத்து ஆனைக்கால்களே உரலாகவும் ஆனைக்கொம்புகளே உலக்கையாகவும் பட்ட மன்னர் பற்களே அரிசியாகவும் குத்தி] ஆனையின் வயிறுகளே மிடாவாகவும் குருதியே உலை நீராகவும் விட்டுப் பூதமும் பேய்களும் கோபமே நெருப்பாகத் தெரிந்தெரித்துப் பட்ட மன்னர் தோள்களே *துடுப்பாகக் கொண்டு கிளறி நிணங்களையும் போட்டுக் கூழாக்கி அந்தக் கூழைப் பேய்கள் வாரிக் கையாலே பத்திரகாளிக்கு ஊட்டப் பத்திரையும் பசி தீர்ந்து அந்த யுத்தம் பண்ணின மன்னவனை நீடூழி காலம் வாழ்க வென்று வாழ்த்தினதாகப் பாடுவது பரணியென்னும் பிரபந்தமாம் எ - று.

(பி – ம்.) [1]யாக்கிப் பேயூட்ட வம்மை, வடிவுற வுண்டாங் கடு திறன் மன்னனை வாழ்த்துதலே' (35)

இதுவுமது

61. இன்னுமப் பேய்க [1]ளியற்றிய கூழ்பசி தீரவுண்டு
துன்னிநின் றுடுதல் சூழுங் கவந்தங்கள் [2]தாமாடுதல்
மன்னும் புறப்பொரு ளுலோர் உரைவழு வாவகையே
முன்னு மொழிந்த படியே புணர்த்திக்கொள் மொய்குழலே.

(உரை I). எ - ன், இதுவுமது.

ஆக்கின கூழைப் பேய்கள் பசிதீர வுண்டு கூத்தாடு தலும் கவந்தமாடுதலுமன்றி மற்றும் புறப் பொருள் நூல் களிற் புகன்ற நெறியினையும் அறிந்து இயற்றுக எ - று.

" முடிபுனைந்த மன்னர்க் கல்லது
குறுநில மன்னர்க்கு வரையா ராண்டே."

(உரை II). எ - து பேய்கள் சமரபூமியிலே ஆக்கின கூழை யுண்டு களித்துக் கவந்தமும் பேயும் பூதமும் தங்களிலே ஒன்றுக்கொன்று கைகோத்துக் கோவையாக நின்று

குரவைக் கூத்தாடுதலைக் கூறுவது பறந்தலைச் சிறப்புப்பாட்டு எ - று.

(பி - ம்.) [1]'ளியல்கூழ் பசிதீர வுண்டினிதாய்த்' [2]'ஆடுதலிற், பின்னுஞ் சிறப்புட னங்கடி வைத்தல், பிறவுரைத்தல் பன்னுங் களிப்பிவை சொல்லுதலாகும் பறந்தலையே.' (36)

பெருங் காப்பியம்

62. முன்னம் வணக்க மறமுத லுன்கின் திறமுரைத்தல்
தன்னிக ரில்லாத் தலைவனைக் கூறல் தசாங்கங்களை
வன்னித்தல் வாய்ந்த பருவ மிருசுடர்த் தோற்றங்கடாம்
இன்னன கூறல் பெருங்காப் பியத்துக் கிலக்கணமே.

(உரை I). (இ - ள்). முன்னுற் கடவுள் வணக்கமும் அறம் பொருள் இன்பம் வீடாகிய நான்கின் திறமும் உரைத்தலும், பொரு விறந்தோன் ஒரு தலைமகனைப் புகலுதலும் அவனது மலையாறு நாடு ஊர் தார் பரி களிறு கொடி முரசு ஆணை என் பனவற்றை வன்னித்துக் கூறலும், சந்திராதித்தரை வன் னித்துக் கூறுதலும் முதலாயின பெருங்காப்பியத்துக் கியல்பு எ - று.

(உரை II). இனி, பெருங்காப்பிய வகை வருமாறு:

எ - து பெருங்காப்பியம் பாடுமிடத்து முன்னம் வாழ்த் தும் வணக்கமும் மலை வருணனையும் கடல் வருணனையும் நாட்டு வருணனையும் நகர வருணனையும் இரு சுடர்த் தோற்ற வருணனையும் அறம் பொருள் இன்பம் வீடென்னும் நான்கு பொருட் பயனும் உடைத்தாய் அந்த நகருக்குத் தன்னிகரில் லாத் தலைவனும் உடைத்தாகப் பாடுவது எ-று. (37)

இதுவுமது

63. பொன்முடி சூடல் பொழில்விளை யாடல் புனலாடுதல்
நன்மணஞ் செய்தல் நறவூண் களிப்புக் கலவிதுனி
மன்னும் புதல்வர்ப் பெறுதனன் மந்திரந் தூதுசெல்லல்
[1]இன்னிகல் வென்றி வகைசந்தி கூறலிக் காப்பியமே.

(உரை I). (இ - ள்). முடி சூடுதல், பொழில் விளையாடுதல், புனலாடுதல், நன்மணம் புணர்தல், மதுவுண்டு களித்தல்,

பொருந்திய கலவி, துனி, புதல்வரைப் பெறுதல் [வாது செய்தல்], அரச நீதியார்கிய மந்திரம், தூது, செலவு, செரு, வென்றி, சந்தியென்பவற்றைச் சாற்றுதலும் காவிய நடை எ - று.

(உரை II). எ - து, ஒரு நகருக்கு ஒரு தலைமகன் சோம சூரியர் மரபில் க்ஷத்திரியனாகவும் நீதிதவறாதவனாகவும் இருப்பானுக்கு முடி சூட்டுதலும், தலை மகனும் தலைமகளுங்கூடி மணம் புணர்தலும், சோலைப்புறத்தே விளையாடலும், நீர் விளையாடலும், கலவியிற் களித்தலும், புலவியின் ஊடலும், களிமயங்குறுதலும், வனப்புறு காட்சியும், மந்திரமிருத்தலும், தூது விடுத்தலும், பொருள்வயிற் பிரிதலும், வினைவயிற் பிரிதலும், ஓதற் பிரிதலும், காவற் பிரிதலும், உற்றுழிப் பிரிதலும், செவ்வணி விடுத்தலும், கருவணி விடுத்தலும், வெள்ளணி விடுத்தலும், சிறுவரைப் பெறுதலும் மனை வாழ்க்கை நீங்கித் துறவில் தவம் புரிதலும், இகல், வென்றியும் பாடிச் சருக்கமிலம்பக முதலானவை இடையிடையே வர இவ்வகையே பாடுவது—அறம் முதல் நான்கும் தழுவி வரம் பழியாது வரப்பாடுவது பெருங்காப்பியம் எ - று

(கு - ரை). மந்திரம் - மந்திராலோசனை. சந்தி - நாடக உறுப்புக்களில் ஒன்று ; இங்கே அது காவிய உறுப்பை உணர்த்த நின்றது ; சந்தி, உபலட்சணத்தால் வித்து, முளை, தழைத்தல், விளைவு, துய்த்தல் என அவற்றின் இனங்களையும் உணர்த்தி நின்றது. இவற்றின் இலக்கண விரிவை. சிலப்பதிகாரம், அடியார்க்கு நல்லார் உரையிற் காண்க. பெருங்காப்பிய இலக்கணத்தைத் தண்டியலங்காரத்திற் காண்க. பெருங்காப்பிய வருணனைகள் 18 என்றும் அவை அஷ்டாதசவன்னனைகள் எனப்படுமென்றும் தமிழ்விடுதூது. மாறனலங்காரம் முதலிய நூல்கள் தெரிவிக்கின்றன.

(பி - ம்.) [1] 'கன்னிவென் றிச்சந்தி யின்வகை கூறுதல் காவியமே' (38)

இதுவுமது

64. விருப்பந் தருஞ்சுவை பாவ [1]விகற்ப மிருபாக்களால்
உரைத்த வினத்தா லுரையோ டுடன்பட மெல்லவந்து
சருக்க மிலம்பக மாம்பரிச் சேதமென் னும்பெயரே
தெரித்து வருவது செப்பிய காவியந் தேமொழியே.

(உரை I). (இ - ள்). ஆன்றோர் விரும்பும் சுவையும் பாவ விகற்பமும் என்னும் அலங்கார முடைத்தாய்ப் பாக்களாற் றான் இனங்களாற்றான் உரையோடு பாடை விரவித் தான் வருவது சருக்க மிலம்பகம் பரிச்சேத மென்னும் கூறு பாட்டையுடைத்தாய் ஒரு பெயரும் தெரியவரும் பெருங்காப் பியம் எ - று.

(கு - ரை). சருக்கம் முதலியன - நூலின் பிரிவுகள்; காண்டம் படலம் முதலியனவும் கொள்ளுக.

(பி - ம்.) [1] 'விளக்க' (39)

காப்பிய இலக்கணத்துக்குப் புறநடை

65. நெறியறிந் தவ்வா றியற்றிய வாறு [1]நிலைநிற்றலும்
[2]பெறும்பெய ரென்பது பேசு மறமுதல் நான்கினுந்தாம்
குறைய வரினுமுன் கூறிய காவியங் கோகனகச்
செறிமல ரல்லிப் பொகுட்டினில் வாழுந் திருந்திழையே.

(உரை I). எ - ன், இவ்விலக்கணங்களிற் குறையினும் காவியங்கள் எ - று.

(உரை II). எ - து, நெறிமுறை தவறாமற் பாடுமிடத்து நல்ல நாளும் முகூர்த்தமு மிட்டுப் பாட்டுடைத் தலைமகனுக்கு ஒத்த இலக்கணத்திலே பிரபந்தம் பாடத் தொடங்கப் பெறும்; இப்படிக் காவியம் பாடும் போது பெருங்காப்பிய நெறியிற் சில குறைந்துவரினும் அறமுதல் நான்கும் குறைவுபட்டு வரினும் அது சிறுகாப்பிய மென்று பேசப்படும் எ - று.

(பி-ம்) [1] 'நிறைநீக்கலும்' [2] 'பெறுபெயர்' (40)

தொகை நிலைச் செய்யுள்

66. பாட்டுப் பொருளிடங் காலந் தொழில்பாட் [1]டளவினெண்ணின்
நாட்டித் [2]தொகுத்தவுஞ் செய்தவன் செய்வித் தவன்றம்பேர்
மூட்டித் தொகுத்தவு மாகி முதனூன் மொழிந்தநெறி
கேட்டுத் தெரிந்துகொள் கிஞ்சுகச் செவ்வாய்க் கிளிமொழியே.

(உரை I). எ - ன், தொகை நிலைச் செய்யுட்களை உணர்த் ........று.

(இ - ள்.) பாட்டின் பொருளால் இடத்தால் காலத்தால் தொழிலால் வருவனவும், பாட்டினது அளவால் எண்ணால் வருவனவும், செய்தவன் பெயரை நாட்டித் தொகுவனவும், செய்வித்தவன் பெயரை நாட்டித் தொகுவனவும் ஆம், முன் புள்ளாரால் சொல்லப்பட்ட இலக்கண நெறியானே புணர்த்தல் எ - று.

..........பாட்டாற் றொக்கது..........குறுந்தொகை; எண்ணாற் றொக்கன பன்னிரு படலமும் பதிற்றுப்பத்தும்; செய்தான் பேர் பெற்றது திருவள்ளுவப்பயன்; செய்வித்தானாற் பேர் பெற்றன பிங்கல சரிதை, வாமன சரிதை; இவற்றுள் முற்பட்டவை ஒருவராலும் பலராலும் உரைக்கப்படும்; ஒருவரான் உரைக்கப்பட்டது நான்மணிக்கடிகை; பலரால் உரைக்கப்பட்டது அகநானூறு; என்பனவெல்வாம் இப்பெற்றியாய் உரைக்க.

"செய்யு ளென்பவை தெரிவுற விரிப்பின்
முத்தகங் குளகந் தொகைநிலை தொடர்நிலை
எத்திறத் தனவு மீரிரண் டாகும்."

"அவற்றுள்,
முத்தகச் செய்யுள் தனிநின்று முடியும்."
"குளகம் பலபாட் டொருவினை கொள்ளும்."

தொகை நிலைச் செய்யுள் மேற் சொன்னவாறே கொள்க.

"பொருளினும் சொல்லினு மிருவகை தொடர்நிலை"
"பெருங்காப்பியமே காப்பிய மென்றுங்
கிரண்டா வியலும் பொருட்டொடர் நிலையே"

என்பது தண்டியலங்காரம்.

[உரை II). எ - து, பாட்டிடம் காலத்திடம பொருளிடம் தொழிலிடம் என்னும் வகைகளை அறிந்து மனிதரானவர்க்கும் தேவரானவர்க்கும் அவரவர் தொழிலும் பேதமும் அறிந்து அந்த அந்தச் சாதிகளுக்கு அடுத்த தொழிலைப் பாடலாம்; அடாத தொழிலைப் பாடினால் குற்றப்பாடு வருமென்றறிந்து பாடவும் அடாத பாட்டுப் பாடலாகாது எ - று.

(கு-ரை). பொருளாற் றொக்கன அகநானூறு, புறநானூறு. இடத்தாற் றொக்கன களவழிநாற்பது, புறநாட்டுச் செய்கை முதலியன.

காலத்தாற் றொக்கன கார்நாற்பது, பருவமாலை முதலியன. தொழிலாற் றொக்கன ஊசல், ஊடன்மாலை, கூடன்மாலை போல்வன. பாட்டாற் றொக்கன கலித்தொகை, பரிபாடல் போல்வன. அளவாற் றொக்கன குறுந்தொகை, நெடுந்தொகை நாலடியார் போல்வன.

இவற்றுள், அளவென்றது பாட்டின் அடியளவு; எண்ணென்றது நூலுள் அடங்கியுள்ள பாட்டுக்களின் கணக்கு.

ஒரோவொருநூல் மேற்கூறிய பொருள் இடம் காலம் முதலிய வற்றுள் இரண்டினுற் றொக்கு வருதலும் கொள்க. உ-ம். அகநானூறு: இது பொருளானும் எண்ணானும் தொக்கது; செருக்களவஞ்சி; இஃது இடத்தானும் பாட்டானும் தொக்கது.

இயையேயன்றி மிகுதியானும் தன்மையானும் முதனூலானும், இடு குறியானும் உறுப்பினுனும் பிறவாற்றானும் பெயர் பெறுவனவும் உள.

(பி - ம்). [1] 'டளவுமெண்ணி' [2] 'தொகுப்பவுந் தேவர்க்கும் மானிட ரானவர்க்கும், கூட்டித் தொகுப்பவுஞ் செய்தொழி லாயவை கூட்ட லாகக்' . (41)

சித்திரச் செய்யுளுக்கு ஆவதோர் நெறி

67. சக்கர மேமுதற் சித்திரச் செய்யுள் தசாங்கங்களை
அக்கரக் கூறு படுப்பினு மானந்தம் அல்லவற்றின்
இக்குண மில்லாமை யானவை சொன்ன இவையுமன்றி
மிக்குள யாவு மிமையோர்க் சிலக்கு விலக்கிலவே.

(உரை I). எ - ன், *சித்திரச் செய்யுள் திறத்துப்படும் இக் குணமும் புகற்றமும் முறைமையும் உணர்த்....று.*

(இ - ள்.) *சக்கரமும், சுழிகுளமும், ஏகபாதமும் எழு கூற்றிருக்கையும், காதை கரப்பும், கரந்துறை பாட்டும், தூசங் கொளலும், வாவல் நாற்றியும், கூட சதுக்கமும், கோமூத்திரி யும், ஒற்றுப் பெயர்த்தலும், ஒருபொருட் பாட்டும், சித்திரக் காதையும், விசித்திரப்பாவும், விகற்பநடையும், வினவுத்தர மும், சருப்பதோபத்திரமும், சார்ந்தவெழுத்து வருத்தனமும், நாகபந்தமும், முரசபந்தமும், விதான வருக்கமும், முந்திரியார் வஞ்சின(மும்) முதலாம் சித்திரச் செய்யுள் செய்யுங்கால் தலை வனது, தசாங்கங்களின் எழுத்துக்களைப் பிரித்து நிறுத்திப்*

புணர்ப்பானுகில் ஆனந்தமாம். அந்நெறியல்லன மானிட வரைப் புணர்த்தலாகா. அல்ல நெறியும் இமையோர்க்காகின் ஆம் எ - று.

" மானிடர் தம்மைக் கலிப்பாப் பாடலும்
தாழ்குழ லாரைத் தனிவெண்பாப் பாடலும்
......முன்பொரு ளுணர்ந்திசி னோரே"

என்பது மாமூலம்.

(உரை II). இவ்வகைப்பட்ட செய்யுளெல்லாம் பாடுமிடத்துத் தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் முடிபுனைந்த மன்னர்க்கும் பாடலாம். அல்லாதவர்களுக்குப் பாடலாகாது. பாடில் பாடுவித்துக்கொண்ட தலைமகனுக்கு அர்த்த நாசமும் புத்திர நாசமும் பிராண நாசமும் வரும். பாடிய புலவனுக்குச் சொல்லானந்தத்தினுலே அடாத வியாதி யடுத்து அவன் குட்ட நோய் கொண்டு காலும் கையுங் குறைந்து மரிப்பான். மறுமைக்கு நரகத்து அழுந்துவன். அதனுல் சாதிக்குத் தக்க செய்யுளறிந்து பாடவும், 'அடாது பாடிற் படாது படும்' என்றாராகலின். (42)

இசைச்செய்யுட் டிறம், இவ்வியலுக்குப் புறநடை

68. பாவா னவையிசை தம்மிற் பயிறலப் பாவினத்தில்
தாவாத வெண்செந் துறைசந்தந் தாண்டகம் [1]தாமனைத்தும்
மேவாத வல்ல வினைப்பாத் தமிழ்[2] வெற்பின் வேதமுனி
நாவார் [3]தமிழ்நடைக் கேபுணர்த் திக்கொள்க நன்னுதலே.

(உரை I). எ-ன், இசையுடன் வரும் செய்யுட்டிறமும் இவ்வோத்திற்குப் புறநடையும் ஆமாறு உணர்த்...று.

(இ - ள்). பா நான்கும் இசையொடு பயின்று, பாவினங்களுள்ளும் வெண்செந்துறைமேல் சந்தமும் தாண்டகங்களும் பயின்று வருவனவாம். வண்ணத் துறையாக நின்ற செய்யுள் மேல் வரும் பொருட்டிறம் உள்ளனவும் பிறவும் திருமுது பொதியிற் றெய்வ முனிவர் அருளிய பாவியல்களும் பாட்டியல்களும் வந்தனவெல்லாம் முறையே அறிந்து கொள்க எ - று.

" சந்தம் தாண்டகம் வெள்ளைச் செந்துறை
இன்னவை யின்றி யமைந்த விசைத்திறம்
எல்லாம் பாவினத் தியன்ற வன்றே"

என்பது மாமூலம்.

" இசையினுட் பாக்க ளியலா வாயின்
இசைத லிற்றென வுரைக்கவும் படுமே'

என்பது செய்யுள் வகைமை.

*அஃதேல் கவிப்பாவெல்லாம் தேவபாணியென் இசையோடு புணர்ப்பரன்றோவெனின், அவை இன்று வேண்டாத் ஆசிரியப்பாட்டாக்கி உரைக்கும் எ - று.*

(பி-ம்) [1] 'தாமமைந்த' [2] 'வெற்புடன் வேதமுள்ள' [3] 'தமிழ்நடை தன்னை யுணர்ந்துகொள்' (43)

செய்யுண் மொழியியல் முற்றும்

ஆகக் காரிகை 71.

## 3. பொதுமொழி யியல்

பொதுப்பாயிரம் தற்சிறப்புப்பாயிரம்.

69. ஈவா ரியல்பிவை யீகை முறைமை இவையுணர்தல்
ஆவார் திறமிவை கேளாய லாதியிந் நாற்பகுதி
[1]தாவா துரைத்தல் பொதுப்பா [2]யிரந்தனி வானவரை
ஓவா திறைஞ்சி யதிகார முன்ன ருரைப்பர்களே.

(உரை I). எ - ன், பொதுப்பாயிரமும் சிறப்புப்பாயிரமும் உணர்த்.......று.

(இ - ள்.) ஆசிரியரது இயல்பும், அவர் உரைக்கும் முறைமையும், மாணாக்கரது இயல்பும், அவர் கேட்கும் முறைமையும், என்னும் நான்கினையும் உரைப்பது பொதுப்பாயிரமாம்; தெய்வ வணக்கமும் செயப்படு பொருளும் ஆமாறு செப்புதல் சிறப்புப் பாயிரமாம் எ - று.

" ஈவோன் றன்மை ஈத லியற்கை
கொள்வோன் றன்மை கோடன் மரபென
ஈரிரண்டென்ப பொதுவின் றொகையே"

என்றாராகலின்.

" வணக்கம் அதிகாரம் என்றிரண்டும் செய்யச்
சிறப்பென்னும் பாயிரமாம்."

ஈவோன் றன்மை முதலாகச் சொல்லப்பட்ட நான்கிற்கும் முறைமை கண்டு கொள்க.

(உரை II). எ - து, நூலுரைக்கும் ஆசிரியன் இயல்பும் .....................................நூல் கற்கு முறைமையும் உரைப்பது பொதுப்பாயிரமாம். முன்னர் வணக்கம் உரைக்கப்படும் எ - று.

(கு - ரை). உணர்தல் ஆவார்—மாணாக்கர். கேள் ஆயல் - ஆசிரியர் வாயிலாகக் கேள்வியை ஆராய்தல்; கேட்கும் முறைமை என்றபடி; கேள்: முதனிலைத் தொழிற் பெயர். இவற்றுடன் நூலையுங்கூட்டி நன்னூலார் பொதுப்பாயிரம் ஐந்தென்பர். (1)

(பி - ம்). [1] 'ஓவாது' [2] 'யிரந்தனில் வானவரை' [3]'ஓவா திறைஞ்ச லாதிகார முன்ன ருரைப்பர்களே'

சிறப்புப்பாயிர இலக்கணம்

70. †செய்தான் செயப்பட் டதுசெய் பொருளது செய்திறத்தோ
டெய்தும் பயனின்ன தன்வழி யெல்லை எனவொரெட்டும்
ஐயமில் கால மவைகா ரணமாகப் பத்தொடொன்றும்
மெய்தெரி யிற்சிறப் புப்பா யிரமென்ன வேண்டுவரே.

(உரை I). எ - ன், நூற்கருவிப் பொருளும், அது தொகுத்தல் விரித்தல் தொகைவிரி யென்னும் செய்திறமும், கேட்போரும், பயனும், இன்னதன் வழித்து என்றலும், இன்ன எல்லையுள் நடக்கும் என்றலும், மேலொருசார் இன்ன காலத்து இன்னுன் அவைக்கண் இன்ன காரணமாக என்னும் மூன்றுடனுகப் பதினென்றும் என்பவையிற்றை உரைத்தல் சிறப்புப் பாயிரமாம் எ - று.

" வருவது மொழிதல் கடவுளை யேத்துதல்
...சிறப்புப் பாயிர மென்ப."

இப்படிச் சொல்லும் ஒரு சாரார் கருத்தும் அறிக.

(கு-ரை). இச்சூத்திரமும் அடுத்த சூத்திரமும் ஒரு பொருளன. காலம், அவை, காரணம்; அவை—நூல் அரங்கேற்றப் பட்ட சபை.(2)

இதுவுமது

71. நூற்பெயர் நூல்செய்த வாசிரி யன்பெயர் நூல்விளங்கித்
தோற்றிடச் செய்தற்குக் காரணம் [1]யாப்புத்தொன் னூலின்வழி
பாற்படு மெல்லை யறிதற் பயனிவை யுஞ்சிறப்பின்
மேற்படு பாயிர மென்ரு சிரியர்கள் வேண்டுவரே.

(உரை I). எ - ன், வடநூல்வழிச் சிறப்புப்பாயிரம் உணர்த்.........று.

(இ - ள்.) நூற்பெயரும், ஆக்கியோன் பெயரும், நூல் செய்தற்குக் காரணமும், வடநூல் வழி எழுத்தும், வரைவாகிய பயனும் இவை ஐந்து காரியமும் சிறப்புப்பாயிரம் என்பர் ஒரு சாராசிரியர் எ - று.

(உரை II). எ - து, யாதானுமொரு நூலுரைக்கவேண்டுமிடத்தில் நூற்பெயரும், காரணமும் ஆக்கியோன் பெயரும் யாப்பும் வழியும் அளவும் பயனும் உரைப்பது சிறப்புப்பாயிரம் என்று சொல்லுவர் புலவர் எ - று

(கு - ரை). யாப்பு—தொகை வகை முதலியவற்றுள் இன்ன தென்பது. உரை II உள்ள ஏட்டில் இக்காரிகை பாயிரத்தில் கூறப்பட்டுள்ளது.

(பி - ம்). [1] 'இந்நூல் வடநூல் வழி' (3)

நூலின் இயல்பு

72. முதல்வழி [2]சார்பென மூவகைத் தந்திரம் சூத்திரமும்
உதவு [2]விருத்தி யுயர்தரு மம்முதல் நான்கேழ்வரை
மதவிகற் பம்பத்துக் குற்றத்துத் தீர்ந்துபத் துக்குணத்தின்
நுதலும் பதின்மூன்றுள் முப்பத் திரண்டுள [3]நூனெறியே.

(உ - ரை I). *எ - ன், நூல் ஆமாறு உணர்த்........று.*

*(இ - ள்.) தந்திரம் சூத்திரம் விருத்தி என்னும் மூன்றும், அறம் பொருள் இன்பம் வீடெனா நான்கும், எழுவகை ஆசிரிய மதவிகற்பமும் உடைத்தாய்ப் பத்துவகைக் குணத்தான் பதின்மூன்று வகையான் உரைபெறினும் முப்பத்திரண்டு தந்திர வுத்தியொடு புணர்ந்தது நூலாம்.*

*அந்நூல் முதனூல், வழிநூல், சார்புநூல், [எதிர் நூல்] என்னும் கூறுபாட்டான் ஆம் எ - று.*

" அவற்றுள்
வினையி னீங்கி விளங்கிய வறிவின்
முனைவன் கண்டது முதனூ லாகும்."

" முன்னோர் நூலின் முடிபொருங் கொத்துப்
பின்னோன் வேண்டும் விகற்பங் கூறின்
அழியா மரபினது வழி நூலாகும்."

" இருவர் நூற்கும் ஒருசிறை தொடங்கித்
திரிபுவே றுடையது புடைநூ லாகும்."

" தன்கோள் நிறீஇப் பிறர்கோள் மறுப்பது
எதிர் நூல் என்பர் ஒருசா ரோரே."

*[இவற்றுள் நூலாதல்]*

" இற்றகுமின்ன பகுதியி னிவற்று
ளென்ன வன்னுற்ப் பானது தந்திர மாகும்."

சூத்திரம் ஆறுவகைப்படும் (பெயர்ச்சூத்திரம், விதிச் சூத்திரம்) விலக்கியற்சூத்திரம், (நியமச்சூத்திரம்) அதிகாரச்சூத்திரம், (ஞாபகச்சூத்திரம்) இவையும் தந்திரவுத்தியுள்ளே யடங்கும் எ - று.

ஒருசார் ஓர்புடைப் பொருளெல்லாம் தோற்றச் சூத்திரம் நடத்தலிற் சூத்திரம் ஆறுவகைப்படும் என்பதாம்.

அவைதாம்:

..............................
"வெண்பா வகவல் அல்லன பிறவும்
வெள்ளைக் குறட்சிறப் பல்லன வரையார்."
"ஓரடி முதலாப் பொருண்முடி வரையாம்
பிறர் நூற் காட்டினும் வரையா ராண்டே."
"வஞ்சியும் கலியும் வரையல் வேண்டும்."
"உரை யெனப் படுவ துணருங் காலைக்
கருத்தே கண்ணழிவு தாரணம் பொழிபொருள்
அகலம் நுட்பமென் றுங்ஙன முடிய
உணர்த்தும் சொல்வகுத் துரைத்தபின்
எழுத்தெழுத் தாகப் பொருள் தெரிந்து
சூத்திரம் படலம் பிண்டமென் றவற்றுள்
யாப்புற வகுத்த நூற்பொருள் வழாமை
நோக்கொடு மாறுகோள் ஏற்புழி யறிந்து
முதல்நடு விறுதி உரைமாறு படாமை
நிரல்நிறை சுண்ணம் அடிமறி யாற்றெழுக்
களைமறி பாப்புவிற் பூட்டுத் தாப்பிசை
கொண்டுகூட் டாகிய வகையால்
ஏற்பக் கூறல் உரையெனப் படுமே."
"வடமொழி கூட்டினும் வரையா ராண்டே."
" ...... ...... ...... ......
வேற்றோர் மதமேற்கொண்டு களைதல்
தாஅ துட்டித் தனுஅது நிறுத்தல்
இருவர் மாறுகொண் டொருதலை துணிதல்
பிறர் நூற் குற்றங் காட்டல் (ஏனைப்)
பிறிதுடன் படாமே தன்மதம் வகுத்தல்."

" ...... ...... ...... ......
வெற்றெனத் தொடுத்தல் மற்றொன்று விரித்தல்
சென்று சோர்ந்திறுதல் நின்றுபய னின்மை
...... ...... ...... ......"

*எனவிவை, பத்துவகைக் குணமாவன.*

" சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்
நவின்றோர்க் கினிமை நன்மொழி யுரைத்தல்
ஓசை யுடைமை ஆழ முடைத்தாதல்
உலக மலையாமை முறையின் வைத்தல்
விழுமியது பயத்தல் விளங்கிய வுதாரணம் "

*என இவை. பதின்மூன்றுவகை உரையாவன :*

" சூத்திரம் தோற்றல் சொல் வகுத்தல்
சொற்பொரு ளுரைத்தல் வினவுதல் விடுத்தல்
விசேடங் காட்டல் உதாரணங் காட்டல்
ஆசிரிய வசனங் காட்டல் அதிகார வரவுகாட்டல்
தொகுத்து முடித்தல் விரித்துக் காட்டல்
துணிவு கூறல் பயனொடு முடித்தல் "

*என இவை. முப்பத்திரண்டு தந்திர வுத்தியாவன :*

" நுதலிப்புகுதல் ஓத்துமுறை வைத்தல்
தொகுத்துக் காட்டல் வகுத்துக் காட்டல்
முடிவிடங் கூறல் முடித்துக் காட்டல்
தானெடுத்துக் காட்டல் ஒப்பின் முடித்தல்
பிறன்கோட் கூறல்......
இரட்டுற மொழிதல் ஏதுவின் முடித்தல்
எடுத்த மொழியின் எய்த வைத்தல்
இன்ன தல்ல திதுவென மொழிதல்
எஞ்சிய சொல்லின் எய்தக் கூறல்
மாட்டெறிந் தொழிதல் ...... ......
பிறர்நூன் முடித்தது தானுடன் படுதல்
தன்குறி வழக்கம் மிகவிரித் துரைத்தல்
இறந்தது விலக்கம் எதிரது போற்றல்
முன்மேற் கோடல் பின்னது நிறுத்தல்
எடுத்துக் காட்டல் முடிந்தது முடித்தல்
சொல்லின் முடிவின் அப்பொருள் முடித்தல்
தொடர்ச்சொல் புணர்த்தல் யாப்புறுத் தமைத்தல்

.........உரைத்து மென்றல்
விகற்பித்து முடித்தல் தொடுத்துடன் முடித்தல்
ஒருதலை துணிதல் உய்த்துணர வைத்தல்
உரையிற் கோடல் ......"

எனவிவை.

(உரை II). *எ - து, முதல்நூல் வழிநூல் சார்புநூல் என்று சொல்லப்பட்ட மூவகை நூலினும் எழுவகை ஆசிரிய மதத்தினும் பத்துவகைக் குற்றம் தீர்ந்த குணத் தினும் .......... உரைவிகற்பத்தினும் .... முப்பத்திரண்டு வகைத் தந்திர வுத்தியினும் வகுத்து ஏதுவும் மேற்கோளும் எடுத்துக் காட்டும் மூதுரையுங் கூட்டிப் பெரியோரால் உரைக் கப்பட்டது* பெருநூற்கிளவி *என்ற பெயரதாம் எ - று.*

(கு - ரை). இங்கே வந்துள்ள மேற்கோட் சூத்திரங்களுட் சில நன்னூலுள் சிறிது வேறுபாட்டுடன் காணப்படுகின்றன.

உரை I-ல் 'தந்திரம் சூத்திரம் விருத்தி என்னும் மூன்றும்' என்று பொருள் கொண்டது எதிர்நூலைக் கூட்டிக்கொண்டமையான் என்க. 'மூவகைத் தந்திரமும் சூத்திரமும் விருத்தியும் என்று பொருள் கொள்ளின் எதிர்நூல் என்றதொன்று இங்கே இடம் பெருமற் போதலைக் காண்க.

தந்திரம்—நூல். சூத்திரம்—மூலபாடம். எதிர்நூல் ஒன்றுண் டென்பது யாப்பருங்கலவிருத்தி முதலியவற்ருல் தெரிகிறது. கண்ணழிபு —பதச்சேதம். பொழிபொருள்—பொழிப்புரை. அகலம்—விருத்தி யுரை. 'நிரல்நிறை, சுண்ணம்...கொண்டுகூட்டு' இவை பொருள் கோள்; இவற்றின் இலக்கணங்களை யாப்பருங்கலக்காரிகை, யாப் பருங்கல விருத்தி முதலிய நூல்களிற் காண்க.

(பி - ம்). [1] 'சார்பெதிர்' [2] 'விருத்தியோ டேது மேற்கோ ளுரை கான்' [3] 'நூல்வகையே' (4)

அந்தணர் இயல்பு

73. கோல்குடை கோவணம் நான்மறை முத்தக குசைதருப்பை
மால்கழல் வாழ்த்த [1]லிரண்டு பிறப்பு மனைசமிதை
தோலைந்து வேள்வி கரக மரவிந்தம் தொல்கோத்திரம்
நூலிரு மூன்றங்க மந்தணர்க் கோதுவர் நூலவரே.

(உரை I). எ - ன், மறையோர்க்குரிய இவை வாழ்த்தினுள் உரைப்ப என்பது உணர்த்........று.

(இ - ள்,) தண்டும் குடையும் கோவணமும் நான்மறையும் முத்தியும் குசையும் தருப்பையும் திருமாலைப் போற்றுதலும் இரண்டு பிறப்பும் மணியும் சமிதையும் மான்தோலும் கமண்டலமும் ஐவகை வேள்வியும் அரவிந்தத்தாரும் கோத்திரமும் பூணூலும் ஆறு அங்கமும் என இவை பதினெண் வகையும் பார்ப்பார் இயல் பென்று அவரை வழுத்தும் செய்யுள் இயல்க எ - று.

" அரசர்க் காயினு மந்தண ரொழுக்கமோ
டியலு மாயி னவ்வகைக் குரிய "

என்பது பருணர் பாட்டியல்.

(உரை II). எ-து, பிராமணர்க்குத் தண்டு கமண்டலமும் குடையும் தர்ப்பையும் மூவகை அக்கினியும் ஐவகை வேள்வியும் ஆறங்கமும் நவதீர்த்தமாடுதலும் பசுவுக்கு வாயுறை கொடுத்தலும் அதிதிபுசிப்புக் கொடுத்தலும் காலசந்தியும் மத்தியான சந்தியும் அத்தமன சந்தியும் இக்காரணமாகக் கடன் கழித்து இந்த அடைவின் நெறி நடத்துவது கருமமாம். எ று.

(கு-ரை). முத்தீ—மூன்று தீ; அவை ஆகவனீயம், காருக பத்தியம், தக்கிணாக்கினி குசை வேறு-தருப்பை வேறு. இரண்டு பிறப்பு —உபநயனச் சடங்கை மறுபிறப்பென்பது நூல்வழக்கு; முத்தீச் செல்வத்திருபிறப் பாளர்' (முருகு, 181-2.)

ஐந்துவேள்வி; ' தெய்வமே பிரமம் பூதம் தென்புலத் தோர் மனித்தர், ஐவகை யோரை யோம்பல் ஐவகை வேள்வியாமே ' (நிகண். பல்பெயர்த். 44.)

அரவிந்த மாலை அந்தணர்க்கு உரியது; (பெரும்பாண். 289-90, உரை. (5)

(பி - ம்). 1 ' லொருமுப் பொழுது வனம்படிதல், ஏனும் பசுவுக்குப் புல்லீத லைந்துயர் யாகஞ்செய்தல் '

இதுவுமது

74\. ஈதலும் வேட்டலு மோதலும் வேதம் இயற்றுவிப்பார்
ஆதலு மங்கி யயனே [2]டுவமை யவரெனவே
ஓதலும் பூசுர ரென்றலு நான்மறை யோர்க்குரிய
போதினும் வெற்பினு நாவினு மேவும் புனையிழையே.

*(உரை I). எ-ன், உரைத்த வேதியர்க்கு உரிய தொழிலும் பிறவும் உணர்த்......று.*

*(இ - ள்.) பொருள் கொடுத்தலும், வேட்டலும். வேதம் ஓதுதலும், ஏற்றலும், வேட்பித்தலும், ஓதுவித்தலும், அக்கினி முகம் வளர்க்கையால் பிரமனுக்கு ஒக்குமெனப் பெறலும் பூமியிற் றேவர்கள் என்பித்துக்கோடலும் நான்மறையோர்க்கு நாட்டப்பட்டன எ - று.*

*ஒத்தவை சிறப்புடைய; மற்றவை சிறப்பில.*

(கு - ரை.) இயற்றுவிப்பார் ; ஈதல் முதலிய மூன்றையும் தனித் தனி இயற்றுவிப்பவர் ; எனவே ஏற்றல், வேட்பித்தல், ஓதுவித்தல் என்ற தொழில்களையுடையவர் என்றபடி. அங்கியோடு உவமை கூறத் தக்கவர் : 'தாம் வளர்த்த கனலே யன்னார்', ' தழல்புரை வேதவாணர்' (வி. பா. 1, 5 : 60, உ. 1 : 103).

பி - ம்.) [1] 'மோதலு மாங்க தியற்றுவிப்பார்' [2] 'டுவமையு மல்லவரெண் மாதவர்' (6)

மன்னவர் இயல்பு

75\. † பூவை நிலைபக லோன்கழல் போற்றல் புனைதல்முடி
தேவ ருவமைசிங் காசனஞ் செங்கோல் குடைகவரி
காவல் நிகழ்த்த லெரிவேட்ட லோதல் கடலமுதம்
மேவ லடுகளம் வேட்டல்பண் பாயின வேந்தர்கட்கே.

*(உரை I). எ - ன், மன்னவர்க்குரியன இவை யென்பது உணர்த்........று.*

*(இ - ள்). பூவை நிலையும், ஆதித்தனைப் போற்றலும், முடிசூடுதலும், தேவரோடு உவமித்தலும் தெளிதரச் சேவை பண்ணச் சிங்காதனத்து இருத்தலும், செங்கோன் முறைமையும், வெண்குடை நிழற்றக் கவரிவீச விரும்பினராதலும்,*

காவற்றொழிலும், அக்கினி வேட்டலும், கலைகள் ஓதலும், அமுதுணவுண்டலும், களம்வேட்டலும் [ஆம் இப்பதினன்கும்] அரசர்க்குரிய வென்றலும் அவரைப் புகழுஞ் செய்யுளின் வருக (என்றலுமாம்) எ - று.

"இளைய ராயினும் மணிமிடி கவித்தலின்
அரசு தொழி லல்லது பிறிதுதொழில் பெருன்"

என்பது பொய்கையார் கலாவியல்.

(கு - ரை). பூவை நிலை : பு. வெ. 192. பகலோன்கழல் போற்றல் : "நின்றவெம் பருதி தோற்றந் தொழுதுதம் நியம முற்றி" (வி. பா. உ. 24) (7)

இதுவுமது

76. விளங்கிய நூல்கற்றல் வேத[1]நெறிநின் றறுசமயம்
உளங்கொண்டு போற்ற லமைச்ச ருரைகொளல் ஓர்ந்துகுடி
தளர்ந்தன தாங்கல் முறைமை கெடாது தனம்பெருக்கல்
அளந்து பெரும்படை [2]சேர்த்த லரசர்க் கடுத்தனவே.

(உரை I). எ - ன், இதுவும் அரசர்க்குரிய தொழில் உணர்த்....று.

(இ - ள்.) வேதாகமநூல் கற்ற வேதியர் நெறியிலே நின்று, ஆறு சமயத்தையும் பரிகரித்தல், அமைச்சர் உரைத்த வற்றை இகழாது கொள்ளல், தளர்ந்த குடிகளைத் தாங்கல், முறைமை வழுவாமற் பொருளீட்டல், காலம் பார்த்து ஆனை தேர் குதிரை காலாள் கருவிகளைச் சேர்த்துக் கொள்ளுதல் அரசரது இயல்பு எ - று.

விளங்கிய நூல் கற்றல் என்பது அறுபத்து நாலு கலைகளும் அறிய உணர்தல் என்றவாறு. இனி, அவரைப் பரவும் செய்யுள் இயம்பும் வகை அறிந்து புணர்க்க.

(உரை II). எ - து, அரசர் ஒழுக்கமாவது அறமென்னும் அறிவு பிரகாசிக்கப்பட்ட தன்ம சாத்திரங்களும், பொருளென்று சொல்லப்பட்ட காவிய லட்சணமும் சோதிட சாத்திரம் முதலான பல சாத்திரமும், இன்பமென்று சொல்லப் பட்ட ஐம்பத்தாறு தேசத்துட்பட்ட புருஷலட்சணமும் பெண்ணின் லட்சணமும் அவரவர் புணர்ச்சியும் ஊடலும் பிரிவும

ஓதியறிதல், வீடென்று சொல்லப்பட்ட சரியை கிரியை யோகம் ஞானம் என்று சொல்லப்பட்டவற்றையறிந்து முறைமை தவறாமல் நடப்பது அரசர்க்கு அடுத்தது எ - று.

இந்தக் கவியிற் சொன்ன மற்றத் தொழிலும் உணர்ந்து கொள்ளுக.

(பி - ம்.) [1] 'வேத நெறியின் விளைசமயம்' [2] 'தாங்க லரசர்க்' (8)

வணிகர் இயல்பு

77. இருபிறப் [1]போத லெரிவேட்ட லீதல் இருநிதியம்
வருதிறத் தானல்ல வாணிபஞ் செய்தல் நிரைவளர்த்தல்
பெருநிதிக் கோன்கழல் [2] பேணு லவனென்று பேசநிற்றல்
உரிமைதப் [3] பாவணி கர்க்கியல் பாமென்பர் ஒண்ணுதலே.

(உரை I). எ - ன், வணிகர்க்குரியன இவை என்பது ணர்த்....று.

(இ - ள்). இரண்டு பிறப்பும், ஓதல், யாகம், வேட்டல், ஈதல், பொருள்வரவாகிய வாணிபஞ்செய்தல், ஆனிரை வளர்த்தல், வயிச்சிரவணனைப் போற்றல், அவன் போலென்று சொல்லுவித்துக் கொள்ளல் வணிகர்க்குரியன எ - று.

(கு - ரை). வயிச்சிரவணன் - குபேரன். (9)

(பி - ம்.) [1] 'பாளர்' [2] 'பேணல் வருவன' [3] 'பாத வணிகர்க் கியலது'

இதுவுமது

78. உறுவது கோடல் வருபயன் தூக்கல் உழவின்றொழில்
இறுவதஞ்[1] சாமை யிடரிற் றெளிதரல் ஈட்டுதற்கு
நெறிபல போதல் முனிவில ளுதல் [2]நிரைவளையாய்
குறியென லாகுங் குலவணி கர்க்குக் குவலயத்தே.

(உரை I). எ - ன், இதுவும் வணிகர்க்குரிய பொருளிவை யென்பது உணர்த்..... று.

(இ - ள்). உறுவது கோடல், வருபயன் தூக்கல், உழவின் தொழில், இறுவதஞ்சாமை, இடரிற் றெளிதரல், பொருள்

தொகுத்தற்குப் பலவழியும் நடத்தல், முனிவு தவிர்தல் என்னும் எழுவகையும் வணிகர்க் குரியன. இவை இவரைப் புகழும் செய்யுளின் கண் வருக எ - று.

(உரை II). எ - து, வணிகர் அறுவகைத் தொழில்.

(கு - ரை). இறுவது - நஷ்டப்படுவது. இடரில் தெளிதரல் - துன்பம் வந்தபோது தேற்றம் கொள்ளல். (10)

(பி -ம்.) [1] 'சாம விடத்திரு மாலடி யேத்திமறை' [2] 'நிரை வளர்த்தல்'

வேளாளர் இயல்பு

79. திருந்திய நல்லறந் தீராத செல்வம் ஒழுக்கமேன்மை
வருந்திய சுற்றத்தை யாற்றுதல் மன்னர்க் கிறையிறுத்தல்
பொருந்திய வொற்றுமை கோடல் புகழும் வினைதொடங்கல்
விருந்து புறந்தரல் வேளாண் குடிக்கு விளம்புவரே.

(உரை I). எ - ன், சூத்திரர்க்குரியன இவையென்றும் அவரைப் புகழுமிடத்து இவை வரப் பெறுமென்றும் உணர்த்........று.

(இ - ள்). நல்லறம் புரிதல், செல்வ முடைமை, ஒழுக்க முடைமை, தளர்ந்த சுற்றத்தை யாற்றுதல், மன்னர்க்கு இறை யிறுத்தல், ஒற்றுமை கோடல், புகழப்படும் கருமத்தைத் தொடங்கல், விருந்தோம்பலென்னும் இவை வேளாண்மைப் புகழ்ச்சிக்கு உரிய எ - று. (11)

இதுவுமது

80. வாணிபஞ் செய்த லுபகார மாசாரம் வாய்ந்த செயல்
பேணி யுழுத லிருபிறப் பாளர் [1]நெறிவழுவா
ஆணை வழிநிற்ற லானிரை போற்றல் அகன்றவல்குற்
பூண்முலை யாயிவை வேளாண் குடிக்குப் புகன்றனரே.

(உரை I). எ - ன், இதுவும் சூத்திரர்க் குரியன சில உணர்....று.

(இ - ள்). வாணிபம் செய்தல், உபகாரம் ஆசாரம் வாய்ந்த செயல், உழவைப் பேணல், இருபிறப்பாளர் நெறிவழுவாமல்

அவர் ஏவுதலைச் செய்தல் ஆனிரையைப் போற்றல் இவை வேளாண்டொழில் எ - று.

(உரை II). எ - து, வேளாளர் அறுவகைத் தொழில்.... பசுக்களை வளர்த்தல், தானம் பண்ணுதல், வாணிபஞ்செய் தல், உழவு பயிர் செய்தல், மன்னருக்கு இறை யிறுத்தல், வேதநெறிவழுவாத ஒழுக்கத்துடனே தன்னுடைய சாதி மார்க்கம் தவறாதே இப்படி இருப்பது வேளாளர்க்கு இயல் பாம் எ - று.

(பி - ம்.) [1] 'உரை வழுவா' (12)

செய்யுள் மொழியின் முறைமை

18. தானைத் தலைவரை யேவல்பெற் றோரைத் தனிவெண்குடைக்
கோனை யடுத்த பகைவரைக் கூறலுங் கோற்றொழிலால்
ஏனைக் குறுநில மன்னவர் தங்களை மன்னரென்ன
மானப் புகழ்தலுஞ் செய்யுண் மொழியின் மரபென்பரே.

(உரை I). எ - ன், ஒருசார் அரசர்க்கோதிய இலக்கணம் உணர்த்........று.

(இ - ள்). தானைத் தலைவரை, ஏவல் பெற்றோரை, தமது நாயகமாகியவரை அடுத்தவரது பகைவரைக் கோன்றொழிலாற் கூறலும், ஒழிந்த குறுநில மன்னரை முடியுடை மன்னவர் போல உரைத்தலும் செய்யுண் மொழியின் முறைமை எ-று.

" அரச னருள்பெறி னெல்லார்க்கு முரித்தே
காணிகை தவிர்தலும் விரித்துரை வேண்டலும்
ஓங்கிய சிந்தையொடு தெய்வம் பணிதலும்
அறுபது முதலா வைம்பதிற் றிரட்டி
அனைவர்க்கு முரித்தே யாயுங் காலே "

என்பது பொய்கையார் கலாவியல்.

(உரை II). எ - து, தானைத்தலைவர் முதலாகிய பேர்களைக் குற்றளவுப் பாட்டினால் பாடலாம். குறுநில மன்னரை முடி புனைந்த மன்னர்க்குச் சமமாகப் பாடலாம் எ - று.

(கு - ரை.) தானைத்தலைவரை - சேனாதிபதிகளை. ஏவல் பெற்றோரை - அரசன் ஏவும் காரியங்களைச் செய்யும் உத்தியோகஸ்தரை ; 35 ; 40, உரை.

(பி - ம்.) [1] 'குற்றளவும்' (13)

பாக்களின் சாதி

82. வேதியன் வேந்தன் வணிகன்வே ளாளன் எனமுறையே
ஓதுவர் வெண்பா வகவல் கலிவஞ்சி ஓதவற்றின்
பேதமு மவ்வகை யானே வருமென்ப பெய்தகட்டால்
தாதல ருங்குழற் ருமரைச் செய்ய சரிவனையே.

(உரை-I). எ - ன், பாக்களது சாதி உணர்த்....று.

(இ - ள்). வெண்பா வேதியன்; அகவற்பா அரசன்; கலி வணிகன்; வஞ்சி சூத்திரன் இவற்றினங்களும் இவ்வாறும் எ - று.

மாமூலர் இராசியும் நாளும் கிழமையும் மற்றும் எல்லாவற்றுக்கும் சாதியும் அறைந்தார்; அவற்றாற் பயனின்மையின் இவர் வேண்டிற்றிலரெனக் கொள்க. (14)

செய்யுள் செய்வதோர் திறம்

83. †சாற்றுந் தலைவ னியற்பெய ரூர்க்குத் தகவெதுகை
தோற்றினு மப்பெயர் சொல்லுமப் பாகங்கள் துன்னுமச்சீர்
ஏற்ற வெழுத்து வரினு மியைந்த தியற்பெயர்க்கே
ஆற்றும் பொருத்த மனைத்தும் பொருந்துத லாஞ்சிறப்பே.

(உரை I). எ - ன். செய்யுள் செய்வதோர் திறம் உணர்த்....று.

(இ - ள்). பாட்டுடைத் தலைமகன் இயற்பேர்க்கு ஆதல், அவன் ஊர்ப்பேர்க்கு ஆதல் எதுகைத்தொடையோடு புணர்ப்பினும், இவை யிரண்டு பெயர் வைக்கும்படி இவையிற்றின்கண் உளவாகிய இனவெழுத்து அடிமுதற்கண் தோன்றி நிற்பினும் முன் சொல்லப்பட்ட பொருத்தம் அனைத்தும் இயற்பெயர்க்குப் பொருந்துதல் சிறப்பு எ - று.

"திருவினு சிரியர் தூக்கிய லுரைத்தன
யாவையு மியற்பெயர்க் கல்லது
பொருத்தம் வேண்டார் புலமை யோரே"

என்பது கல்லாடம்.

இவற்றால் தசாங்கத்திற்கென்று எய்துவித்தன எல்லாம் இயற்பெயர்க்குப் பொருந்த வைப்பின் ஒழிந்தவையிற்றுக்கு வழுக்கினும் இழுக்கில்லை எ - று.

(கு - ரை.) பொருத்தவியலில் இச் சூத்திரம் சிறிது வேறு பாட்டுடன் காணப்படுகிறது; சூ. 8. (15)

உறுப்பழிந்த செய்யுள்

84. †தெற்ற வழக்கொடு தேர்ந்துணர் வார்க்கின்பஞ் செய்தலின்
பற்றின் வடநூ லெழுத்துக் கனேபழை யோருரையின் [றிப்
மற்றிவை இல்லையென் றேத லுடன்படல் மரபியலாப்
பெற்றி யுடைச்சொற் பழித்த வுறுப்பென்று பேசுவரே.

*(உரை I). எ - ன்,......ந்த செய்யுளாமாறுணர்த்......று.*

*(இ - ள்). வழக்குடன் மறுதலைத்த மொழி புணர்ப்பினும், விசாரித்து நோக்கி வினவின்றி யிருப்பினும், வடநூலெழுத்துக்கள் வரப்புணர்ப்பினும், முன்னுள்ளார்களான் மொழியப்பட்டவற்றுள் இவ்வாறு வந்தனவில்லை யென்று மாறுபடுமாயினும் மரபியலா வழி வரும் சொற்புணர்ப்பினும் எறும்பழிந்த செய்யுளாம் எ - று.*

*முன்புள்ளார் மொழியப்பட்ட குற்றமாமவன;*

"மறுவறு முதல்வன் வகுத்த
அறுவகை மரபின் ஆனந்தமும்
எழுவகைப் பட்ட சொல்வழு வொரீஇ
எழுத்தினும் யாப்பினும் இழுக்கா தாகப்
பாடு கென்றனர் பழமொழிப் புலவர்"

*என்பது* பருணர் பாட்டியல்.

"உறுபுக ழாகிய உயர்ந்தோர் கூறிய
அறுவகை யானந்த மாவன
இயனெறி திரிந்த எழுத்தா னந்தமும்
சொன்முறை வழீஇய சொல்லா னந்தமும்
..........................................
தொடைநெறி திரிந்த தொடை யானந்தமும்
நடையறி புலவர் நாடிக் கொளலே."

"அவற்றுள்,
இயற்பெயர் சார்த்தி யெழுத்தள பெழினே
இயற்பட லில்லா வெழுத்தா னந்தம்."
"இயற்பெயர் மருங்கின் மங்கல மழியத்
தொழிற்சொற் புணர்ப்பது சொல்லா னந்தம்,"

" இறைச்சிப் பொருளை யூறுபடக் கிளப்பினும்
புகழ்ச்சிக் கிளவியிற் பொருந்தா கூறினும்
உவமைக் காட்சியி னூனந் தோன்றினும்
இவையல பிறவும் இன்னவை வரினே
அவைமொழி யப்பொரு ளானந் தம்மே."

" முதற்றொடை மருங்கின் மொழிநிறுத் திருபெயர்
இடைப்படுத் தவ்வழி யிருசீர் படினே
வாய்ப்ப நோக்கி வல்லோர் கூறிய
யப்பா னந்தமென் றறையல் வேண்டும்."

" தாழா மரபின் யாமொடு புணர்ந்த
பாவகை யொருவனைப் பாடுங் காலைத்
தொடைவகை மரபின் வந்தபெயர் தோற்றி
ஏங்கினு மிடுங்கினும் எழுத்துப்பிரிந் திசைப்பினும்
தூங்கினுங் குழறினுந் தூக்கா னந்தம்."

" அளபெடை மருங்கிற் பாடப் படுவோன்
பெயரொடு தொடுப்பிற் பெற்றியின் வாராத்
தொடையா னந்தமெனத் துணியல் வேண்டும்"

என்பது அகத்தியனு ரானந்த வோத்து.

" திணைபால் மரபு வினைச்செப்புக் காலம்
இடஞ்சேடே ழாகு மிழுக்கு"

*என்பதனுள் எழுவகைப்பட்ட வழுவும் அறிந்துகொள்க.* (16)

உவமிக்கும் உவமைகள்

85. [1]மானி னிளங் கன்று மஞ்ஞையின் பிள்ளை மதிக்குழவி
[2]தேனி.னமுதந்தெள் ளாநற வஞ்செழுங் கற்பகப்பூங்
கானிற நீர்வல்லி கல்லாத கிள்ளை கரும்பின் முளை
ஊனிற வேற்கண் மடவார்க் கியைந்த உறுப்புக்களே.

(இ-ரை I). *எ-று, அரிவையர்கட்குப் பருவத்திற்கு உவமை யுணர்த்......று.*

*(இ - ள்). மானின் கன்று, மயிலின் பிள்ளை......தேனின் அமுதம், தெள்ளாநறவம், கற்பகக்கன்று, நீர்வல்லி, கல்லாத கிள்ளை, கரும்பின் முளை என இனையன மகளிர்க்கு ஓதும் முறைமை எ-று.*

(இவை) இளைய மகளிர்க்கே கொள்க. என்னெனில், மேல் வரும் சூத்திரத்தில் அரிவை முதலாயினர்க்கென்பர்; ஆதலின் ஈண்டு உரைத்தன பேதை முதலாயினர்க்கு என்ப.

(கு - ரை). பேதை முதலிய இளம் பருவமாதல் பற்றித் தெள்ளா நறவம் என்றார்; தெள்ளா—தெளிவடையாத. உலா நூல்களில் பேதைப் பருவ மகளிரை வருணிக்குமிடத்தில் மான்கன்று முதலிய உவமை களைப் புலவர் எடுத்தாளுதல் மரபு.

(பி - ம்.) [1] 'மானிற மான்கன்று' [2] 'தேனிற வின்பமுந் தெள்ளா நறவுஞ் செழுங்கற்பகக்' (17)

86. முருக னுவமைமுந் நான்கு [1]முதலெண் ணிரண்டுவரை
அரசர்க் குரித்தவர் தம்மோ டுவமையல் லார்க்குரித்துத்
திருவோ டுவமை [2]யரிவை முதலிய சேயிழையார்
பருவத் துரித்தென்ன வோதுவர் தொன்னூற் பருணிதரே.

(உ - ரை I). எ - ன், இதுவும் உவமிக்கும் உவமை உணர்த் ........று.

(இ-ள்). அரசரைப் பன்னிரண்டு முதற் பதினாறு (பிராயம்) வரை முருகனோடு உவமித்தலாம். அல்லார்க்கு அரசன்தான் உவமையாம். அரிவை முதலாயினோரைத் திருவோடு உவமித்தல் ஆம் எ - று.

(பி - ம்.) [1]'முதலெட் டிரண்டரசர்க்குரிய குமர னவனோ டுவமைக் குரித்தென்னலாம்' [2] 'பெதும்பை முதற்பெண்கள் சேயிழையாய்' (18)

கவி வகை

87. வாய்ந்த கவிகம கன்வாதி வாக்கி வகைவனப்பும்
ஆய்ந்தவல் லாசு மதுரமுஞ் சித்ரவித் [1] தாரமுமே
ஏய்ந்த வகைநான்குங் கள்ளக் கவிமுதல் ஈரிரண்டும்
தேய்ந்த பிறைநுதற் சேயிழை யாயின்று தேர்ந்துகொள்ளே.

(உ - ரை I). எ - ன், கவி முதலாகிய புலவர்கள் தன்மை யறிவுறத் தொகைப்படுத்து அறிவித்தல் நுதலிற்று.

(இ - ள்). கவி கமகன் வாதி வாக்கி என்னும் அவரது தன்மையும், அவருடன் கவிகள் கூறுபாடாகிய ஆசு மதுரம் சித்திரம் வித்தாரமும், கள்ளக்கவி சார்த்துக்கவி வெள்ளைக்

*கவி பிள்ளைக்கவி என்னும் அவர் தன்மை நால்வகையும் நவிலப்படும் எ - று.*

" ஆசு மதுரஞ் சித்திரம்வித் தாரமென
நால்வகைப் படூஉம் நன்னெறிக் கவியே."

" ஆசு/கவியே அறிவெனத் தொடுத்த
எழுத்தினும் பொருளினும் உள்ளுறை யாக
இழுக்கா வண்ணம் யாப்புடைத் தாகும்."

" இன்பக் (கவியே) யெல்லைக் குரிய
இன்பம் பயக்கும் யாப்பிற் பொருளின."

" சித்திர கவியே மாலை மாற்றெடு
சக்கர முதலிய வரூஉ மென்ப."

" அகலக் கவியே மங்கல மாலை
கலிவெண் பாட்டொடு களிறே குதிரை
மற்றவை பொருளாற் பிறவுங் காட்டுக
மருங்கின்
நல்லோ ராய்ந்த ஒளியும் பொருளும்
ஒன்பது சுவையும் நால்வகை விருத்தியும்
கூட நோக்கிக் குறித்தொரு வன்மேற்
பாடுஞ் செய்யுட் பாடு வோனே."

" சொல்லப் பட்ட எல்லாக் கவியும்
இரண்டு மூன்று நான்கு மூனம்
இல்லா மருங்கிடை ஒருவன் பெறுமே."

*இவற்றால் ஆசு முதலாயின நான்கும் உடன் கண்டு கொள்க.*

" கள்ளக் கவியே சார்த்துக் கவியே
வெள்ளைக் கவியே பிள்ளைக் கவியென
நாற்பாற் படுத்தனர் யாப்பியிற் புலவர்."

" அவற்றுள்,
கள்ளக் கவியே கவிஞன் றனைமகற்குக்
கள்ளத் தொடுபெயர் களைந்தே யாக்கி
ஒருவர்க் கியம்பும் மாணி லோனே."

" சார்த்துக் கவியே முன்னோன் பாடிய
யாப்பின் படிசிறிது தொடுப்போ னென்ப."

" வெள்ளக் கவியே புனமொழிந் தொழுக்கும்
பிள்ளைக் கவியே பின்னிலை நிற்கும்."

—பருணர் பாட்டியல்.

*இவற்ருல் கள்ளக் கவிமுதல் நால்வர்க்கும் இலக்கணங் கண்டுகொள்க.*

" ...... ...... ...... ......
...... ...... ...... ......"

" வல்ல நூற்பத்துப் பகை யானும்
மதியாது தனது பெருமை யானும்
கல்லாத நூல்களுங் கற்ருேர் விரும்பக்
கவிக்கும் நெறியோன் கமக ஞகும்."

" மேற்கோ ளேது விடைநெறி காட்டி
நாட்டிய வளவை நன்னூல் வழாமைத்
தன்கோள் நிறீஇப் பிறர்கோள் மறுக்கும்
மூதுணர் வுடையோன் வாதி யாகும்."

" அறமுதல் நான்குந் திறனிருந்து......
கேட்போர் சித்தமும் விரும்பக் கிளக்கும்
தோற்ற முடையோன் வாக்கி யாகும்."

—மாமூலம்.

*இவற்ருல் கவி கமகன் வாதி வாக்கி இலக்கணங் கண்டு கொள்க.*

*இச்சூத்திரங்கள் ஓதி, ஒழிந்து நின்றவை கண்டுகொள்க.*

(உரை II). *எ - து,* ......

" ஞாபகம் செம்பொருள் நடையினெப் பொருளுங்
காசின் றுரைப்போன் கமக ஞகும்."

" ஏதுவும் மேற்கோளும் எடுத்துக் காட்டித்
தனது கோள் நிறுத்திப் பிறர்கோள் மறுப்பவன்
வாதி யென்று சொல்லப் படுமே."

*மடலூர்ச்சியும் கிரீடையும் விருத்தக் கதையும் பிரபந்த விகற்பமும் பாசண்ட நடையும் இயலிசை நாடகத்தொடு தொகுத்துப் பாடவல்லவன் வாக்கி யென்று சொல்லப்படும். மாலைமாற்றுச் சுழிகுளம் முதலான இருபது மிறைக்கவியும் தேர்ந்து பாடவல்லவன் சித்திரகவி யென்று கூறப்படும். இத்தன்மைத்தாகிய புலவர் கையில் கவிதை கொள்ளவும்.*

(கு - ரை.) ஆசுகவி முதலிய நால்வரை, 'கடுங்கவி, இன்கவி, அருங்கவி, பெருங்கவி ' என்று வேண்டுவாரும் உளர்.

'ஆசுகவியாவான் தொடுத்த பொருளும், தொடுத்த சூழலும், அடுத்த தொடையும் வழுவாமற் கடுத்துப் பாடுவோன்.' 'மதுரகவி யாவான் சொற் செல்வமும் பொருட்பெருமையும் உடைத்தாய்த் தொடையும் தொடை விகற்பமும் துதைந்து உருவக முதலாகிய அலங் காரங்களை உட்கொண்டு ஓசைப்பொலிவுடைத்தாய் உய்த்துணரும் புலவர்கட்கு ஒலிகடலமுதம் போன்று இன்பம் பயக்கப் பாடுவோன்.' 'சித்திர கவியாவான் மாலை மாற்று முதலாகிய அருங்கவி பாடும் நன்மையையுடையான்.' 'வித்தார கவியாவன் மும்மணிக்கோவையும், பன்மணி மாலையும், மறமும், கலிவெண்பாவும், மடலூர்ச்சியு முத லாகிய நெடும்பாட்டும், கோவையும், பாசண்டமும், கூத்தும், விருத் தமும், கதை முதலாகிய செய்யுளும் இயலிசை நாடகங்களோடுங் கலை நூல்களோடும் பொருந்தப் பாடும் பெருங்கவி எனக்கொள்க' (யா. வி. சூ. 98, உரை.)

'வாக்கி யென்பான் அறம் பொருள் இன்பம் வீடுகள்மேல் கேட்க வேட்கை பிணிக்கச் சொல்லும் ஆற்றலுடைய ஆசிரியன் எனக் கொள்க.

ஒருவன் பாட்டை அவன் பெயர் களைந்து பிறிதொரு பெயர் வைத்துக் கொடுப்பவன் கள்ளக்கவி. ஒருவன் பாடிய யாப்பினுல் அதன் போக்கை மாதிரியாகக் கொண்டு தானும். பாடுவோன் சார்த்துக்கவி. அற்பமான சொற்களால் கவி தொடுப்போன் வெள்ளைக்கவி. பிறகவி களின் சொல்நடை பொருள்நடை அலங்காரம் முதலியவற்றைப் பார்த்து அவற்றை மாதிரியாகக் கொண்டு கவிபாடுவோன் பிள்ளைக் கவி.

(உரை II). *இல் கமகன் முதலியவர்களின் இலக்கணம் திவாகரத்தை ஒட்டி எழுதப்பெற்றுள்ளது.* (19)

(பி - ம்.) [1] 'தாரத்துடன்'

நல்லவை

88. †அறந்திறம் பாநல் லறிவோ ரறுபத்து நாற்கலையும்
திறந்தெரிந் தோர்சினஞ் செற்றம்பொய் காமம் சிதைக்குஞ்சித்
மறந்தொரு காலு மொருபாற் படாதவர் [1]மற்றுங்குற்றம் [தம்
துறந்தவர் தாங்களும் நல்லவை யாமென்று சொல்லுவரே.

(உரை I). *எ - ன், நல்லவை ஆமாறு உணர்த்......று.*

(இ - ள்). தருமநெறி கோடாத அறிவோர், அறுபத்து நாலுகலைகளும் இயற்றுங் கூறுபாடும் அறிவோர், சினமும் வயிரமும் பொய்யும் காமமும் நீத்தோர், சித்தம் ஒருதலைப் படாது எல்லாக் குற்றமுந் தீர்ந்து நின்றோர் குழுமி இருப்பது நல்லவையாம் எ - று. (20)

நிறையவை

89. †பாங்கா யொருதிறம் பற்று தவர்பல் கலைப்பொருளும்
ஆங்கே யுணர்ந்தோ ரடக்க முடையர் அவரவர்கள்
தாங்கா தலித்து மொழிவன கேட்போர் தருமநெறி
நீங்காத நாவ ரிருந்திடு கூட்டம் நிறையவையே.

(உரை I). நிறையவை யாமாறு உணர்த்......று.

ஒருவர் பாங்காகி ஒருதிறம் பற்றுதோர், எல்லாப் பொருளும் தாங்கள் உணர்ந்தோராயினும் அவரவர் உரைக்குமாறு முற்றக்கேட்போர், அறநெறி நீங்காத அந்தணர் முதலாய் அரசர் வணிகர் வினைஞர் கூட்டம் நிறையவையாம் எ - று.

எனவே அரசன் மூலமாக இருப்பதாம். (21)

தீயவை

90. †சொற்ற படிசொற்றும் பெய்பவர் சொல்லுநற் சொல்லினையும்
குற்றமி தென்று குலாவி யுரைப்பவர் கூறும்பரி
சுற்ற துணர்ந்தோ ரொருபாற் படுபவர் பொய்யுரைப்போர்
செற்றஞ் சினத்தொடு சேர்ந்தோ ரிருப்பது தீயவையே.

(உரை I). எ - ன், தீயவை யாமாறு உணர்த்........று.

(இ - ள்). உரைத்த கருத்துணர்த்தி அச்சொற்களி லாகும் பொருள் காண்பார் வாய்த்தடுமாற்றச் சொல்லினையும் குற்றமாக எடுத்து நாட்டுவோர், உரைத்த பொருள் முடிவு பாராதே உத்தேசத்தைக் கொண்டு ஒரு பக்கம் சாரத் தமது மேற்கோள் முடிய நில்லாது வேண்டின வந்ததுரைப் போர், மறமும் சினமும் மிக்கிருப்போர் இருப்பது தீயவை யாம் எ - று. (22)

குறையவை

91. †பாடவம் பேசிப் பலகால் நகைசெயது பாங்குரைத்து
நாடகங் காட்டியோர் நாயக மின்றி நவிலுநன்னூல்
ஏடகம் நோக்கா திகலே பெருக்கி அறத்தைவிட்டுக்
கூடகஞ் செய்துபொய் கூறு விருக்கும் குறையவையே.

(உரை I). *எ - ன், குறையவை யாமாறு உணர்த்........று.*

(இ - ள்). *பொருள்படுத்துவாரை வாதித்துப் பலகால் நகை செய்து ஒரு திறம் பழித்துப் பாங்காக வுரைத்து அங் கங்களாலே நாடகமுத்திரை காட்டித் தம்மில் ஓர் நாயக மின்றிப் பலரும் நாயகமாய், இருவரும் உரைக்கும் நூல் பண்டு தாங்கள் அறிவது மன்றிப்பகை செய்வதே மிகுந்து தருமநெறி விட்டிருந்தோர் தம்முள்ளே சங்கேதம் செய்து பொய்யுரைப்பது குறையவையாம் எ - று.*

(கு - ரை.) பாடவம் - சமர்த்து; தான் யாவற்றிலும் வல்லவன் என்று நினைக்கும் தன்மை; "ஆடவர் திலகனுக் கன்பி னுரெனப், பாடவம் விளம்பினம்" (கம்ப. சம்பாதி. 7.) கூடகம் - வஞ்சனை. (23)

ஓலையிலக்கணம்

92. குற்றமில் லாவோலை தன்னிற் குலவுவெண் பாமன்னனைச்
சொற்றதோர் பாவா லரசரைப் பேசிப் பொருட்டிறத்தின்
உற்றவை யென்றென்று தன்னை லுரைப்பவன் றன்னைச்
[சொல்லி
மற்றவன் றன்னையும் பின்னே யுரைத்தல் மரபென்பவே.

(உரை I). *எ - ன், தூக்கும் ஓலையும் ஏற்கும் இலக்கணம் ஆமாறு உணர்த்........று.*

(இ - ள்). *மூரியும் பிளப்புமில்லாத ஓலையின் கண்ணே வெண்பாவாற்றான் ஆசிரியப்பாவாற்றான் அரசாளும் அரசன் றன்னைப் பேசிப் பொருள்பேசும் பகுதியாகிய வாத விதண்டை சற்பங்களின்தோன்றலென்றுரைக்கும் மற்றவன் றன்னை முன்பு சொல்லி ஏனோரவரையும் பின்புரைத்து முடிப் பது ஓலைய திலக்கணமாம் எ - று.*

"ஓலைய திலக்கணம் உரைக்குங் காலை
நாலா றுவிரலாம் நான்மறை யோர்க்கே
பாருடை யோர்க்குப் பதிற்றிரண் டாகும்
வணிகர்க் கீரெண் விரலா கும்மே
சாணென மொழிப சூத்திரர்க் களவே."

"வெண்பா வகவ லாயிரு மரபினும்
செய்யுட் பரவிய வவ்விரு திறத்தினும்
முற்புறத் திரண்டாம் பிற்புறத் தொழிந்து
வரைவென வுரைப்பர் தெரிநூற் புலவர்."

"சந்தனம் திமிசு சாதி சண்பகம்
உந்திய பதின்முழம் உயர்ந்தவர்க் காசனம்
கூவிளம் பலாசு வணிகர்க்கு வகுத்த
நாலிரு முழமே யுயர்ச்சி யாகும்."

"பலவே கதிர மறுமுழ முயரம்
நிலமுழு தோர்க்கு நீதி யாகும்
நாடுது நாட்டி நாமவை யாமே."

"கல்லே பொதுவாந் திசையவர் திசையே
முனிவர்க் கோலை முப்பது விரலே
முறைமையின் முன்கடை யுயர்ந்ததை யுயர்ச்சி."

"அரசர் முன்கடை யல்லாப் பொதுவின்
முனிவரோ டல்லது மூவர்மற் றியலார்
பிறர்வலிக் கேய்ந்தன வாதனத் தியல்பே.

"ஈசன் பதியாம் எரியாம் பாலே
பரியார்க் குந்திரு வருளி யுண்பவே."

"ஒழிந்தவை நான்கும் உரிய வென்ப."

"மேட மிடப மந்தணர்க் குரித்தே
நண்டரி யரிவை யரசர்க் காகும்
துலையோ டெரிதேள் வணிகர்க் காகும்
சுறவே கும்பம் சூத்திரர்க் காகும்."

"முறையின் மரபின மறையோர்க் காகும்
கதிரவ னங்கி யரசர்க் குரித்தே
யமனொடு நிருதி வணிகர்க் காகும்
முறைமையின் வருணன்வளி சூத்திரர்க் காகும்."

—பொய்கையார் கலாவியல்.

*ஆக இவ்வாறு உரையாததென்னையோவெனின் இழுக்கில்லை (மாபுராணம்).*

" திசையு மரமு முதலிய பிறவும்
இயலா வாயினும் இயலப் பெறுமே."

என்பது கல்லாடனூர் கலாவியல்.

*பிறவும் இவ்வாறு சொன்னாரும் உளராகலின் அவரவர் கருத்தை நோக்கி வேண்டிற்றிலரெனக் கொள்க. ஆசிரியர் நெறி வேண்டாதது வழக்கொடு பொருந்தாமையின் என்க.*

(உரை II). இந்திர காளியனுர் *உரைத்தபடி.*

' *ஓலைய திலக்கண முரைக்குங் காலை
நாலாறு விரற்ருனம் நான்மறை யோர்க்குப்
பார்த்திபர் தமக்குப் பதிற்றிரட்டி விரலே
வணிகர்க் கெண்ணிரு விரலே
சூத்திரர்க் கீராறு விரலே
இப்பரி சேபாட் டெழுதவும் படுமே."

" அந்தணர்க்கு நாலா றரசர்க் கிருபதாம்
இந்த விரல்வணிகர்க் கெண்ணிரண்டாம்—முந்துவிரல்
வேளாளர்க் கீராரும் வெள்ளோலை வேயனைய
தோளாய் அறிநீ தொகுத்து."

—கல்லாடனூர் வெண்பா.

(கு - ரை.) மன்னனைச் சொற்றதோர் பா - ஆசிரியப்பா. முரி - முரிந்தது. வாதம் - நெறிபற்றிய தருக்கம். விதண்டை - தான்கூறும் விஷயத்திற் குற்றமிருக்கப் பிறர் கூறும் விஷயத்திற் குற்றம் சாதிப்பது. சற்பம் - பிதற்றுதல். திமிசு - ஒருவகைமரம். சாதி - சாதிக்காய்மரம். பலவு - பலாமரம். கதிரம் - கருங்காலி. ' மூவர் மற்றியலார் ' மூவர் - அரசர், வணிகர், வேளாளர். நண்டு - கடகம். அரி - சிங்கம். அரிவை - கன்னி. தேள் - விருச்சிகராசி. சுறவு - மீனம். (24)

---

*இந்நூல் 12 ஆம் சூத்திரத்துக்கு II உரையுள்ளவிடத்தில் ஓலையிலக்கணச் சூத்திரங்கள் இங்கேயுள்ளபடி ஏட்டுப்பிரதியில் எழுதப்பெற்றிருந்தன.

வாதினில் வல்லவர் ஆவார்

93\. †கதம்பட லின்றிக் கருதிய மேற்கோளும் எய்துவிக்கும்
மதம்படக் கூறி யெடுத்துக்காட் டேற்றி அளவைநெறி
விதண்டைவா தஞ்சற்ப மென்னு மிவற்றின்மே லோருரைத்த
மதங்க நெறிசொல்ல வல்லவர் வாதினில் வல்லவரே.

(உரை I). எ - து, பொருட் பேசுமாறுணர்த்துத......று.

கோபமின்றித் தன்னுற் கருதப்பட்ட மேற்கோளுக்குத் தக்கன எடுத்துக்காட்டிச் சமன்செய்து உடன்பட்ட பிரமாண நெறிகளான விதண்டை, வாதம், சற்பம் என்னும் மூன்றினும் வேண்டியதென்று இந்நெறிபுணர்ப்பர் சான்றோர் உரையோடு சொல்லி முடியா வாத நெறியினவர் எ - று.

" இவற்றுள்,........டமெனவீ........வும் வாராதென்க ; ஆங்கொருமையுஞ் சார்ந்து மருங்குரைத்தல் வேண்டுவார் விதண்டை வேண்டாரெனக் கொள்க " என்பது கல்லாடம்.
(25)

வாதத் தொலைவு

94\. †பொருளல கூறல் புனருத்தி தோன்றுதல் புன்சொற்களால்
மருள வழங்கல் வழுப்படச் சொல்லுதல் மற்றென்றினைத்
தெருள வுரைத்தல் பயனல சொல்லுதல் செய்யிற்றென்னூல்
தெரிபவ ரெல்லா மவன்றொலைந் தானெனிறு செப்புவரே.

(உரை I). எ - ன், பொருள் பெறற் றொலைவு ஆமாறு உணர்த்......று.

(இ - ள்). பொருளல சொல்லுதலும், உரைத்ததே யுரைத்தலும், [புனருத்தி தோன்றுதலும்] புல்லிய சொற்களாற் கோபம் பெரு (கச்செப்பலும்) அழுங்கக் கூறுதலும், ....மெத்தது நிற்க அவற்றிலே சிலவுரைப்பினும், பயன் படாமற் சொல்லினும், [சொற்றுமாந்து] தொலைவாமென்ப கற்றுணர்ந்தோரே.

(கு - ரை.) புனருத்தி - கூறியது கூறல். (26)

சபையில் விலக்கத்தக்கவை

95. †கோணத் திருப்பினும் கோபம் பெருக்கினும் குற்றமென்று
நாணத் தகுமவை நாவிற் பயிலினும் நாடிநன்னூல்
ஆணைப் படியன்றி யல்லவை சொல்லினும் ஆங்கிருந்தோன்
காணப்போய் கூறினுந் தோல்வியென் றோதுவர் கற்றவரே.

(உரை I). எ-ன், *அவைக்கண் புக்குப் பெருந்திசைக் கண் அன்றிக் கோணத்து இருப்பினும், கோபத்துச் சொல் லினும், குற்றமென்று கடியப்பட்ட வழுச்சொல்லுரைப் பினும், முன்புள்ள நூலின் ஆணை(ப்படியன்றி) வழுவுரைப் பினும், புகன்ற பொருளைப் பின்னை யொருகால் இல்லை யென்று சொல்லினும் தொலைந்தானென்று சொல்லுவர் ஒருசாராசிரியர் எ-று.* (47)

வெற்றி தோல்விகளின் பெருமை சிறுமை

96. †நல்லவைக் கண்ணும் நிறையவைக் கண்ணும் நயந்
[தொருவன்
சொல்லிய வாதினிற் றோற்றலுந் தான்றொலை வல்லவென்ப
வெல்லுவ னென்னின் மிகச்சிறப் பெய்தி விளங்குமென்ப
அல்லவை தன்னின்முன் வெல்லினு மாகும் அவர்க்கிழுக்கே.

(உரை I). எ-ன், *உரைத்த நல்லவையினும் நிறை யவையினும் ஓதிய மரபிற்றொலையினும் அது தோல்வி எனப் படாது; ஆங்கு வெல்லுமே யென்னிற் சீர்த்தியோடு சிறப் பெய்தி விளங்கும்; அல்லாது தீயவை என்பவற்றுள் வெல்லு மாயினும் (அவ்வெற்றி) சிறப்பொடு விளங்காது எ-று.*

"தூக்கியல்வகை யோலையை
செவித்திறங் கொள்ளாது தெரியுங் காலைத்
தானே நம்பி மகனே மாணி
ஆசானென் றவரி லொருவ ரிழுக்கிலைக்
குற்றம் வகுத்துடன் படாமற் சொல்லின்
வென்றியும் பெறுமே"

"அவைபுகு நெறியே ஆயுங் காலை
வாயினி லுரைத்துக் கூடிப்புகுங் காலை
இருவரும் புகாஅ ரொருவர் முன்புகிற்

புக்கவன் றெலையு முய்த்தெனு முண்மையின்
இருவருங் கூடி யொருங்குடன் பட்ட
தெரிவுட னுணர்ந்தார் செப்பின ரென்ப"

என்பது அவிநயனுர் கலாவியல்.

"சாதி நோக்கியும் தன்மை நோக்கியும்
வாத மழித்துரை யுரைப்போன் வாது
வென்ற நிலையினும் சென்றிடி லரைசின்
......சிறப்புச் சிதைவே"

என்ற செய்யுள் வகைமையும் அறிக. (28)

செய்யுட் செய்வார்

97. †இயலிசை நாடக மெய்யே யுணர்ந்தோர்கள் எப்பொருளும்
மயலற வாய்ந்தோர் வருணங்கள் நான்கினும் வந்துதித்தோர்
உயர்நெறி நின்றோ ரவையையுற் றோரொரு தெய்வத்தையே
முயல்தரு சித்தந்தர் செய்யுண்முன் பாட மொழிந்தவரே.

(உரை I)). எ-ன், *செய்யுட் செய்வாரை யுணர்த்....று.*

(இ-ள்). *இயலிசை நாடகம் உணர்ந்தோர், எல்லாப் பொருளும் மயக்கந்தீர உணர்ந்தோர், மறையோர் முதலிய வருணநான்கின் ஒன்றின் வந்து அவதரித்தோர், உயர்ந்த நெறி நின்றோர், அவை யாரானும் மதிக்கப்பட்டோர், ஒரு தேவதையை விடாத சித்தத்தோர் இவர் பாடத் தகுபவர் எ-று.* (29)

இதுவுமது

98. இருபதிற் றுண்டினி லேறி யெழுபதி லேறலின்றி
வருபரு வத்தவர் வன்பிணி யில்லவர் மற்றுறுப்பில்
ஒருகுறை வற்றவர் நாற்கவி வல்லவர் ஓங்கறத்தின்
பரிகடை யானர்கள் செய்யுளின் பாடல் பகர்பவரே.

(உரை I). எ-ன், *உரைத்த கவிகட்குரிய குணங்கள் இவை யென்பது உணர்த்.......று.*

(இ-ள்). *இருபதிற்றுண்டினில் ஏறி எழுபதில் ஏற லின்றி, உறுப்பிலொன்றும் குறைவின்றி, ஆசு மதுரம் சித்திரம் வித்தாரமென்னும் நான்கு கவியும் உரைப்போர்,*

அறநெறியின் பரிசுடையோராய் இருப்போர் யாவர், அவர் செய்யுட் செய்யும் திறத்தவர் எ - று. (30)

செய்யுட் செய்யலாகாதார்

99. மூன்று தமிழின் முறையுண ராதவர் நாற்குலத்திற்
சான்றவ ரல்லவர் தாழ்ந்த வுறுப்பினர் [1]தாம்பிணியிற்
றேன்றுந் துயரத்தர் தெய்வந் தொழாதவர் தூய்மையில்லோர்
ஆன்றவர் பாடிடி லானந்த மாமென் றறைவர்களே.

(உரை I). எ - ன், செய்யுட் செய்யலாகாதாரை யுணர்த் ........று.

(இ - ள்). தமிழ் மூன்றின் தன்மை யுணராதவர், நான்கு வருணத்தினும் தாழ்ந்தோர்........வன்பிணியுற்றோர், தெய்வம் பேணுதவர், நெறியில்லோர் யாவர் அவர் செய்யுட் செய்யின் அஃது ஆனந்தமாம் எ - று.

" மங்கலப் பாட்டுப் பரிசியா மொழியின்
பங்கப் படுமெனப் பழித்தனர் புலவர் "
" அரசர்க்குக் கொற்றக் குடைவெண்பாச் சீரிய
மெய்க்கீர்த்தி முறைமை மங்கலச் செய்யுட்
செயப்பெரு தாரென் றிவர்களைப் புணர்ப்பினும்
தன்னை மொழியினும் பின்னை மொழியினும்
இன்ன நெறியோ ரியம்பல் வேண்டும் "

என்பது செய்யுள் வகைமை. பாவின் யாவரையும் முற்படப் பாடு மவைபிற்றுக்கு இப்பெற்றியோர் உரைத்தல் சிறப்பில வென்க.

(உரை II). எ - து, இயலிசை நாடகமென்ற மூன்று தமிழும் வல்லவனுய், பிராமணன் க்ஷத்திரியன் வைசியன் சூத்திரனென்ற நான்கு சாதிக்கு உட்பட்டவனுமாய், உறுப்பு ஊனமில்லாதவனுமாய், வியாதியில்லாதவனுமாய், துயரு மில்லாதவனுமாய், நல்லொழுக்க முடையவனுமாய், தெய்வபக்தியுடையவனுமாய் இருக்கின்றவன் கையிற் பிரபந்தங் கொள்ளலாம்; இவையல்லாத கீழ்ச்சாதியாய், உறுப்புக் குறைந்தவனுமாய், நன்ருகக் கல்லாதவனுமாய், ஒழுக்க மில்லாதவனுமாய், தெய்வபக்தி யில்லாதவனுமாய் இருக்

*இன்றவன் கையிற் கவிதை கொள்ளலாகாது; இஃதறிந்து தனக்கு மேற்சாதியானும், கற்றவனுமாய், அழகுடையவனுமாய்த் தெய்வபக்தி யுடையவன் கையிற் கவிதை கொள்க. இப்படிக் கவிதை கொண்டால் செல்வமிகுத்துச் சிறப்புத் தனதாகிப் பலபகலும் தான் படியில் வாழ்ந்திடும்.*

(பி - ம்), [1] 'வெம்பிணியர்' (31)

இன்னவரும் செய்யுட் செயத் தக்கார் என்பது

100. †இறப்பு நிகழ்வெதி ரானமுக் காலத்தில் எப்பொருளும்
திறத்துணர்ந் தோர்சாவு வாழ்வு முரைக்குஞ்செந் நாப்புலவர்
அறத்துறை நீங்கா வருளினர் நான்கு வருணத்தினும்
பிறப்பிழிந் தோரென்னி னும்மவர் பாடிற் பெருநலனே.

(உரை I). எ - ன், *கழிவு எதிர்வு நிகழ்ச்சியென்னும் மூன்று காலத்துப் பொருளும் தோன்ற உணர்ந்தோர், சாவு வாழ்வுரைக்கும் செந்நாப்புலவர், அறத்தினை நீங்காதவர், அருளினை யுடையோர், நான்கு வருணத்திற் பிறப்பிற்றாழ்ந்தோர் எனினும் அவர் பாடின் நன்மையாம் எ - று.* (32)

கேட்பிக்கும் நெறி

101. †புகழ்த்தநன் னாளிற் புகன்ற முகூர்த்தத்திற் புட்பொருந்தின்
திகழ்ந்தநன் மங்கலஞ் சொன்முதல் யாவுந் தெரிந்துகொண்டு
பகர்ந்தவர் செய்யுளைப் பல்கலை வல்லோர் தமக்குணர்த்தி
இகழ்ந்தன நீக்கி முறையே வகுத்தல் இயல்பென்பரே.

(உ - ரை I.) எ - ன், *கேட்பிக்கும் நெறியுணர்த்.......று.*

(இ - ள்). *நல்ல நாளின் நல்ல முகூர்த்தத்திற் கேட்பப் பொருத்த மங்கலச்சொல் முதல் நல்லன தெரிந்துகொண்டு சொல்லிச் செய்யும் அறிவுடையோர்க்கு உணர்த்தி இழுக்காயுள்ளன நீக்கி வழுக்காவகை இசைத்தல்வேண்டும் எ - று.*

"பாடப் படுவோர்க்கும் பாடு மவன்றனக்கும்
நாடப் படுங்குற்றம் நாடாதே—பாடுமேல்
காகப்புட் சேரக் கனிபனையின் வீழ்வதுபோல்
ஆகத்தற் சேரு மலர்"

என்றார் தொல்லாசிரியர். (யா. வி. மேற்.) (33)

இதுவுமது

102. †நல்ல விடமெழு கிவ்விளக் கேற்றி நறுமலர்தூய்
நெல்லும் பரப்பித்தன் மேல்விதா னித்து நிறைகுடமும்
பல்வகை யான பிரப்புங் கொணர்ந்து பயனறிய
வல்லவர் கூடிக் கலைமகள் பாதம் வணங்குவரே.

*(உரை I). எ - ன், கவி கேட்பிக்குமிடத்து முறைமை யாமாறு உணர்த்........று.*

*(இ - ள்). கேட்போன்றன் மனையின்கண் மெழுகி விளக்கேற்றி நெற்பரப்பி விதானித்து நிறைகுடம் வைத்து மலர் தூவி நல்லவர் ஒருங்கு கூடியிருந்து சொன்மகள் பாதத்தைத் துதிக்கப்படும் எ - று.* (34)

இதுவுமது

103. †ஆங்குத் தலைவன் பலபடி யானும் அலங்கரித்துப்
பாங்கிற் பொருந்தவப் பாட்டியற் பாட்டினை நன்குணர்ந்து
பூங்கற் பகம்போல் நவமணி யாடைகள் பொன்பொழிந்து
வாங்கிக் கவிமுறை வந்தனை செய்கை மரபென்புவே.

*(உரை I). எ - ன், பாட்டுடைத் தலைமகன் இயல்பு உணர்த்........று.*

*(இ - ள்). அவ்விடத்துப் பாட்டுடைத் தலைவன்தனைப் பலபடியானும் அலங்கரித்துச் சுற்றம் சூழ இருந்து பாட்டின் பரிசினை யுணர்ந்து மற்றவர்க்குக் கற்பகம்போல் மணியும் பொன்னும் ஆடையும் மகிழ்ச்சிபெற வழங்கிக் கவிமுறையை வாங்கி வந்தனை செய்து விடுத்தலும் மரபென்று சொல்லுவர் புலவர் எ - று.* (35)

பரிசில் நல்காதார்க்கு உறுவது

105. †பரவிய பாவலர் பாக்கொண் டவர்க்குப் பரிசிற்றிறம்
வரிசையி னல்கா தொழியினு னந்தமா மற்றவர்கட்
குரைசெய்த வெல்லாம் வசையா யுயர்ந்தோர் விரும்பலின்றித்
தரையினி னிற்கும் பெரும்பழி யாமென்று சாற்றுவரே.

(உரை I). எ - ன், பரிசில் நல்காதவர்க்கு வரும் பெயர் இன்னதென்பதுணர்த்து........று.

(இ - ள்). பாவலர் உரைத்த பாக்கொண்டு அவர்க்கு வரிசையிற் பரிசிற்றிறம் மனமகிழ நல்காது ஒழியின் அவர் முன்பு புகழ்ந்துரைத்தனவெல்லாம் இகழ்ந்துரைத்த வசையாய் உலகின் உயர்ந்தோராயினும் மகிழப்படாது, பூதலத்தின்கண் நிற்பதோர் பெரும்பழியாமென்று பேசுவர் புலவர் எ - று.

" முன்ஞெரு வர்க்கு மொழிந்த செய்யுட்
பின்ஞெரு வர்க்குச் சாற்றில்
முன்ஞேன் பின்னே திருவு நீங்கி
பழிகிளர்ந் தோன்பாற் சேறன் மரபே "

என்பது மாமூலம்.

" யாவ ராயினும் இவ்வகை யேதன்
மூவகைக் காலத்து மொழிந்தனர் புலவர் "

என்பது செய்யுள் வகைமை.

" பாடிய புலவன் பரிசிற் றிறம்நீங்கிற்
கேடுதலைத் தருமே கேட்டோன் மருங்கினும் "

என்பது பருணர் பாட்டியல்.

" பாடிய செய்யுட் பலநாட் கிடப்பினும்
கேடென மொழிப கேட்போர் தமக்கே "

—திருப்பிரவாசிரியர் தூக்கியல். (36)

புறநடை

105. †இறப்ப வுயர விறப்ப விழிய இசைக்குஞ்செய்யுட்
டிறத்தன யாவையுந் தீதென் றுரைப்பர்செப் பாதொழிந்த
புறத்துள வாயினுந் தொன்னூ னெறிமேற் புகலப்படும்
நிறத்திற் குவளையுங் காவியும் போலு நெடுங்கண்ணியே.

(உரை. I) எ - ன், இவை யனைத்திற்கும் புறநடையா மாறு உணர்த்.. ....று.

(இ - ள்.) பாட்டுடைத் தலைமகனுக்குரிய வகையன்றி இறப்ப உயர்வு வரினும் இறப்ப இழித்து உரைப்பினும்

ஆனந்தமாம்; அன்றி, இந்நூல் இயம்பாதன உளவாயினும் தொன்னூல்களில் துணிந்த நெறியே தோற்றுவித்துக் கொள்வர் எ - று.

" இறப்ப வுயரினு மிறப்ப விழியினும்
அறத்தகை வழீஇய வானந் தம்மே "

என்பது அணியியல்.

" சிறந்த மரபிற் றேர்ந்தவ னறியப்
பன்னூல் வகுத்த பெற்றியி னோக்கி
ஏத முறும லியனெறிப் பகுத்தல்
தீதில் காட்சித் தெளிந்திசினோர் கடனே "

என்பது பருணர் பாட்டியல்.

" எழுத்தின் வழுவே யெழுத்ததி காரத்தின்
இழுக்கி வரூஉ மியல்பிற் றென்ப "

" சொல்லின் வழுவே சொல்லதின் யாப்பிற்
சொல்லிய குற்றந் தோன்ற லாகும் "

" எழுத்தின் வழுவே தமிழ்நடை திரிவே
................................ "

" யாப்பின் வழுவே யாப்பின திலக்கணம்
கோப்ப வாராக் கொள்கைத் தாகும் "

எனவுரைத்தமை அறிந்து புணர்க்கப்படும்.

ஈண்டும் இக்நூலிற் சூத்திரத்தன்றி வேறுபட்டனவெல்லாம் உரையிற் கோடலான தந்திரவுத்தியின் வருவித்தாரென்க.

இச்சூத்திரத்தின் மகடூஉ முன்னிலை முதலாகிய மிகைச் சொற்களெல்லாம் செய்யுளைநோக்கி வந்தனவென்க. (37)

பொதுமொழி யியல் முற்றும்.

ஆகக்காரிகை 108.

நவநீத நடனர் அருளிச்செய்த கலித்துறைப்பாட்டியல் முற்றும்.

# சூத்திர அகராதி

[எண்—கலித்துறை எண்]


அகங்காலுகிர், 44
அகரமுதலுன், 13
அரசர் விருத்தங், 50
அரசன் விருத்தங், 51
அறந்திறம்பாஙல், 88
அறிவோரமு, 10
ஆங்குக்கஞ, 58
ஆங்குத்தலைவன், 103
ஆனை குதிரை, 41
இயலிசை நாடகம், 97
இருபதிற்ருண், 98
இருபாவிருபது, 37
இருபிறப்போத, 77
இறப்பவுயர, 105
இறப்புகிகழ், 160
இறைவனை, 52
இன்னுமப், 61
ஈட்டியவீரெண், 39
ஈட்டிய வெண்ணெண், பாயிரம், 3
ஈதலும் வேட்டலும், 74
ஈவாரியல்பிவை, 69
உண்டாமுவகை, 59
உறுவதுகோடல், 78
உன்னுந்தசாங்க, 25
ஏயந்தசகர, 15
ஏனைக்குகர, 14
ஓதுந்தகர, 16
கங்கையு, 3
கடிதலில், 43
கதம்படலின்றி, 43
கார்கொண்ட, பாயிரம், 1
காலையன், 12
குற்றமில்லா, 92
குற்றெழுத்தாடூஉ, 7
குறிலைந்துங், 6
கூறுமளவு, 7
கோணத்திருப்பினும், 95
கோல்குடை, 73
சக்கரமேமுதற், 67
சகத்தினில், பாயிரம், 2
சாற்றுந்தலைவ, 8,83
சிறந்தமெய்க், 53
சிறுபறையே, 32
செய்தான், 70
சொல்லும் பகரத்து, 17
சொற்றபடி, 90
சொன்னகலம்பக, 34
சொன்ன சிறு, 31
தானைத் தலைவரை, 81
திருந்திய நல்லறங், 79
திருமணி, 2
தெருவினிற், 45
தெற்றவழக்கொடு, 84
தேவர்க்குநூறு, 35
நல்லவிட, 102
நல்லவைக்கண்ணும், 96
நிரையிரண், 23
நூற்பெயர், 71
நெறியறிங், 65
நேரசை, 22
நேருந்தசாங், 40
பத்தாதி, 38
பதினெரு, 28
பரவியபாவலர், 104
பன்னென்று, 21
பாங்கா யொருதிறம், 89
பாட்டுப் பொருளிடங், 66
பாடவம் பேசி, 91
பாதம்பல, 48
பாவானவையிசை, 68
பிறந்தநிலம், 49
புகழ்ந்தநன், 101
புறநடைசேர், 56
புறநிலை வாயுறை, 55
பூவிற்றிருவைப், 26
பூவைநிலை, 75
பேதை முதலெழு, 46
பொருடெரி, 4
பொருளதிகாரத், 54
பொருளலகூறல், 94

பொருளறம், 47
பொன்முடி, 63
மங்கலஞ், 1
மலையாறு, 24
மற்றது வானவர், 57
மானினிளங், 85
முடியடுப்பிற், 60
முதல்வழி, 72
முருகனுவமை, 86
முற்றந்த, 29
முன்னம் வணங்க, 62
முன்னாசிரியம், 36
மூலமொரு போகு, 33
மூன்றுதமிழின், 99
மூன்று முத, 30
மூன்றைந்தே, 5
மொழிந்தவந், 19
யகரத்துள், 18
வல்லினங், 20
வாணிபஞ் செய்த, 80
வாய்ந்தகவி, 87
விதியவன், 11
விரிசடைப், 27
விருப்பந்தருஞ், 64
விளங்கிய, 76
வெண்பாக் கலித், 42
வேதியன் வேந்தன், 82

---

## இந்நூல் விளக்கும் பிரபந்தங்களின் அகராதி

[எண் —கலித்துறை யெண்]

அங்கமாலை, 43
அட்டமங்கலம், 52
அந்தாதி, 38
அரசன் விருத்தம், 51
அலங்கார பஞ்சகம், 42
ஆற்றுப்படை, 53
ஆனைத்தொழில், 49
ஆனை விருத்தம், 41
இணைமணிமாலை, 37
இரட்டைமணிமாலை, 37
இருபா இருபது, 37
உலா, 45-6
ஊர்வெண்பா, 41
ஒலியந்தாதி, 39
கலம்பகம், 33-5
காப்பு மாலை, 32
குடைவிருத்தம், 41
குதிரை விருத்தம், 41
குழமகன், 45
கேசாதிபாதம், 43
கைக்கிளை, 42
கோல் விருத்தம், 41
கோவை, 54
சிறப்புப்பாயிரம், 70-71
சிறுகாப்பியம், 65
சின்னப்பூ, 40
தசப்பிராதுற்பவம், 52
தசாங்கத்தியல், 52
தசாங்கம், 40
தற்சிறப்புப்பாயிரம், 69-70
தாழிசைக்கவி, 54
தூது, 45
தொகைநிலைச் செய்யுள், 66
தொகை வெண்பா, 38
நகர விருத்தம், 41
நயனப்பத்து, 50
நவமணிமாலை, 52
நாட்டு விருத்தம், 41
நாமமாலை, 48
நாழிகைக் கவி, 54
நான்மணிமாலை, 36
பயோதரப்பத்து, 50
பரணி, 56-61
பல்சந்தமாலை, 38

பறந்தலைச்சிறப்பு, 61
பன்மணிமாலை, 39
பாதாதிகேசம், 46
பிள்ளைத்தமிழ், 26-32
புகழ்ச்சிமாலை, 48
பூவைநிலை, 26
பெருங்காப்பியம், 62-5
பொதுப்பாயிரம், 69
பொன்னூசல், 50
மடல், 47
மருட்பாப் பிரபந்தம், 55
மும்மணிக்கோவை, 36
மும்மணிமாலை, 36
மெய்க்கீர்த்தி, 53
வஞ்சிமாலை, 46
வண்ணவிருத்தம், 31
வாள்விருத்தம், 41
வில்விருத்தம், 41
வேல்விருத்தம், 41


---

## *அரும்பத முதலியவற்றின் அகராதி

[எண் - கலித்துறை எண்]


அஃகாது, 31
அகத்தியமாமுனி, அவை. 2, சிறப். 3, 68
அகலம், 72
அங்கம் ஆறு, 73
அசுபதி, 15
அட்டமராசி ஓர் குற்றம், 19
அத்தம், 17
அதிகாரவசம், 39
அதிகார வரவு, 72
அதிதி புசிப்பு, 73
அந்தணர்க்குவமை, 74
அந்தணர் முதலியோருக்கு உரிய இராசி, திசை, 92
அமுதெழுத்து, 10
அரசர்க்குரியன, 75-6
அரசர்க்குவமை, 75
அரசர்கோவை, 54
அரசர் முன்கடையில் முனிவரோடன்றி அந்தணரொழிந்த வருணத்தோர் செல்லார், 92
அரசர்விருத்தம்- ஆசிரியவிருத்தம் 50, 54
அராகம், 48
அரிபத்தன் . சிறப். 3
அரியரபுத்திரன், 28
அவயவமாலை, 44
அவிட்டம், 15
அவைபுகும் நெறி, 96
அழுங்கக்கூறல், 94
அளவியற்ருண்டகம், 39
அளவை, 93
அற்புதன், 28
அற்புதை, தற். 1 [நூல்கள், 76
அறம் முதலிய நான்கைப்பற்றிய
அறுசமயம், 76
அனிதை, தற். 1
அனுசேனம், 19
அனுடம், 16
ஆகம் புனையல், 46
ஆசாரம், 80
ஆசான், 96
ஆசிடை வெண்பா, 38
ஆசீர்வாதமுள்ளான், சிறப். 3
ஆசு, 87 [7
ஆடுஉமகடூஉ அலியெழுத்துக்கள்,
ஆடையுடுத்தல், 46 [28
ஆதித்த பதவிபெற்ற மூர்த்திகள்,
ஆதித்தர் பன்னிருவர், 28
ஆயிலியம், 17


---

* மூலத்திலும் உரைகளிலும் கண்டவை.

ஆயுதம் தொண்ணூற்றெட்டு, 58
ஆரியர், 40
ஆற்றுப் படுத்தற்குரியோர், 53
ஆற்றுப்படுப்பன, 53
ஆன்றவர்-நெறி நில்லாதவர், 99
ஆனந்தம், 4, 8, 24, 67, 99, 104-5
ஆனந்தம் அறுவகை, 74
ஆனைக்கொம்பு உலக்கைக்கு, 60
இசையுடன்வரும் செய்யுட்டிறம், 68
இடுக்கல், 84
இயமானன், 22
இயலிசை நாடகம், சிறப். 3
இரத்தினம் நெருப்புக்கு, 60
இராசி, 19
இரேவதி, 15
இலகு, 52
இலம்பகம், 63
இளைய பெண்களுக்கியைந்த உவமைகள், 85
இறுவது, 78
இறைச்சிப்பொருள், 84
இறையிறுத்தல், 79
உத்தரம், 17
உத்திமுப்பத்திரண்டு, 72
உத்திரட்டாதி, 18
உத்திராடம், 13
உத்தேசம், 90
உதாசீனம், 6
உருத்திரர் பதினொருவர், 28
உரைபதின்மூன்று வகை, 72
உரையும் பாடையும், 64
உரோகிணி, 18
உலாவுக்குரியோர், 46
உலை நீர், 60
உறுப்பழிந்த செய்யுள், 84
உறுப்பு முப்பத்திரண்டு, 44
உறுவது, 78
எடுத்துக்காட்டு, 72, 93
எண்ணிதி, 28
எதிர்நூல், 72
எதுகைத் தொடை, 83
எதுகையில் பெயரமைத்தல், 47
எழுகூற்றிருக்கை, 67
எழுத்தானந்தம், 84
எழுத்துப்பிரிந்திசைத்தல், 84
எழுத்து வருத்தனம், 67
ஏகபாதம், 67
ஏகாதசருத்திரர், 28
ஏங்கல், 84
ஏவல்பெற்ற மாந்தர், 40, 81
ஏவற்றொழிலவர், 35
ஐந்து வேள்வி, 73
ஒருதலைக்காமம், 42
ஒருபாற்படாதவர், 98
ஒருபொருட்பாட்டு, 67
ஒருபோகு, 33, 39
ஒற்றுப் பெயர்த்தல், 67
ஒக்கம், 49
ஓணம், 13, 23
ஓலக்கம், 59
ஓலை, 92
ஓலைய திலக்கணம், 92
கடவுட் பிறந்தன, 2
கடிகை, 54
கடிதல், 43
கடுங்கவி - ஆசுகவி, 87
கடைமுடிவு, 39
கடைவாழ்த்து, 57
கண்ணழிவு, 72
கணப் பொருத்தம், 22-3
கதம், 93
கதிநான்கு, 20, 21
கதிப்பொருத்தம், 20
கதிரம், 92
கபாடபுரம், அவை. 2
கபாலயோசனி, தற்.1
கபாலி, தற்.1
கமகன், 87
கரந்துறை பாட்டு, 67
கருவணி, 63
கருவி, 58, 76
கல்லாத கிள்ளை, 85
கலிப்பா தேவபாணி, 68
கலிப்பாவால் மானிடரைப் பாடலாகாது, 67


கலிவெண்பா நூல்கள், 45
கலை அறுபத்துநான்கு, 39, 88
கலைபதினாறு, 31, 39
கவந்தம், 60
கவிக்கும்நெறி, 87 [100
கவிகட்குரிய குணங்கள், 97-8,
கவிதை, 87
கள்ளக்கவிமுதல் நான்கு, 87
களம் வாழ்த்து, 59
களவு, 45
களிமயங்குறுதல், 63
கற்கடம், 58
கறைகொண்டநேமி, தற். 1
காகப்புட்சொல், 101
காதை கரப்பு, 67
கார்த்திகை; 13, 23
காலை-பகல், 12
காலையன்-சூரியன், 12
காவிய நடை, 63
கிஞ்சுகச் செவ்வாய், 66
கிரீடை, 87
குசைவேறு தருப்பைவேறு, 73
குடைவெண்பா, 99
குணம் பத்து, 72
குரு, 52
குலாவி, 90
குழறல், 84
குளகம், 66
குற்றப்பாடு, 66
குற்றம்பத்து, 72
குற்றளவுப்பாட்டு, 81
குறையவை, 91
கூடகம்-சங்கேதம், 91
கூடசதுக்கம், 67
கூவிளம், 92
கேசாந்தம், 43
கேட்டை, 16, 23
கேட்பிக்கும் நெறி, 101-3
கொடுமைச் சொல், 52
கொலை, 52
கொலையகற்றி, 27
கோகனகம், 65
கோணத்திருத்தல், 95
கோமூத்ரி, 67
கோயின்மரபு, 57
சக்கரம், 67, 87
சங்கேதம், 91
சண்பகம், 92 [தற்.1
சத்தியின் சேடியர் பதினறுபேர்,
சதயம், 16, 63
சந்தம், 38, 68
சந்தமாலை, 52
சந்தனம், 92
சந்தி, 63
சரிவளை, 4, 82
சருக்கம், 63
சருப்பதோபத்திரம், 67
சமநிலை, 5, 8
சமரபூமி, 58, 60
சரியையாதி நான்கு, 76
சவுரியவான், 48
சற்பம், 92-3
சாத்தன், 28
சாதி, 92
சாமர்த்தியம், 48 [தெய்வம், 58
சாமுண்டி-பாலை நிலத்துக்கு அதி
சார்த்துக்கவி, 87
சித்திரக் காதை, 67
சித்திரசெய்யுள், 67
சித்திரம், 87
சித்திரை, 17
சிறுகுமுறை, 40
சினம்செற்றம் பொய் காமம், 88
சீர்க்கணம், 22
சுவை ஒன்பது, 87
சுழிகுளம், 67, 87
சுற்றத்தளவு, 29, 31, 50
சூத்திரம் அறுவகை, 72
சூத்திரர், 79
சூது பொருதல், 46
செந்துவர்வாய், தற். 1
செந்நாப்புலவர், 100
செய்யுட் செய்யலாகாதார், 99
செய்யுட் செய்வார், 97-8, 100
செய்யுண் மொழியின் மரபு, 81
செய்யுள் செய்வதோர் திறம், 83

செவ்வணி, 63
செற்றம்-மறம், வயிரம், 88, 90
சேணிலம், 35
சேய்-முருகன், 11, 12
சொல்லானந்தம், 84
சொல்வழு ஏழு, 84
சொற்சீரடி, 53
சொன்மகள், 102
சோதி-சுவாதி, 16, 23
நகடு, 82 [67, 83
தசாங்கம், 9, 10, 24-5, 40,62
தடுக்குதல்-குத்துதல், 59
தந்திரம், 72
தமிழ் நடை, 68
தமிழ்முறை, 99
தருமன்-எமன், 11
தழற்றட்டை-ஒருபடை, 58
தாண்டகம், 68
தாண்டகமாலை, 52
தாரகைமாலை, 52
தாழ்ந்த உறுப்பினர், 99
தானம் ஐந்து, 6
தானைபெற்ற தலைமையோர், 41
திமிசு, 92 [68
திருமுது பொதியிற் றெய்வமுனி,
திருவள்ளுவப்பயன், 66
திருவாதிரை, 14
திரையரமகளிர், 57
தீக்கணம், 23
தீயவை, 90
துடுப்பு, 60
துவர்வாய், 10
துன்னிமித்தம், 58
தூக்கியல், 83
தூக்கு, 92
தூங்கல், 84
தூசங்கொளல், 67
தெள்ளாநறவம், 85
தெளிதரல், 78
தெற்ற, 84
தேய்ந்த பிறைநுதல், 87
தேவபாணி, 68
தொகுத்தல் முதலிய மூன்று, 70
தொடையானந்தம், 84
தொல்காப்பியனார், 21
தொல்லாசிரியர், 101
தொலைவு, 94-5
தோரணமங்கலம், 51
தோமரம், 58
தோயநாசிகம், 19
தோல்வி, 95, 96 [96
தோற்றல் தொலைவல்லாத இடம்,
நஞ்செழுத்து, 9
நம்பி, 96
நரககதி, 21
நல்லவை, 88
நவநீதநடன், சிறப். 3
நவநீதநாடு, சிறப். 3
நறவூண்களிப்பு, 63
நறைவளர் கோதை, 52
நாகபந்தம், 67
நாட்பொருத்தம், 19
நாடகமுத்திரை, 91
நாரணி, தற். 1
நாராசம், 58
நால்வகைப் பெண்கள், 57
நாவர், 89
நாவார் தமிழ்நடை, 68
நாற் கவி, 87
நிதிசால் ஐயன், 12
நிதிப்பதியவன், 11
நிதிமுதலோன், 28
நிரைத்த நிலை, 29
நிறைகுடம், 102
நிறையவை, 89
நிறையவை அரசன் மூலமாக
இருப்பது, 89
நீர்வல்லி, 85
நுட்பம், 72
நூல் நான்கு வகை, 72
நூற்கருவிப் பொருள், 70
நூனெறி, 72
நோக்கு, 72
பகருவன், தற். 1, 26
பகவதி, 28
பகை, 6

பகைக்களம், 58
பசிப்பு, 57
பஞ்சாலங்காரம், 42
பணிமொழி, 26, 58
பத்திரகாளி, 58
பத்திரை - காளி, 60
பதாதி, 58
பதினறுகலை, 39
பதினெண்தேசம், 46
பதினொரு மூவர், 28
பயனல்ல சொல்லுதல், 94
பரடு, 44
பராயணி, தற். 1
பரிகரித்தல், 76
பரிகலம், 58
பரிச்சேதம், 64
பரிசிற்றிறம், 104
பரியார்க்குந்திருவருளிஉண்ப,92
பருணிதர், 46, 86
பருவமாதர் எழுவர், 45-6
பலபடி, 103
பலவு, 92
பலாசு, 92
பழித்தவுறுப்பு, 84
புன்னிரண்டாதித்தர், 28
பாக்களின் சாதி, 82
பாங்குரைத்தல், 91
பாசண்டநடை, 87
பாட்டியல் - பிரபந்தம், 39, 103
பாடவம், 91
பாண்கோவை, 54
பாதம் பலமயங்கல், 48
பாலம் - ஒரு படை, 58
பாலைக்குப் பத்திரகாளி தெய்வம், [59
பாவியல் - பாட்டியல், 21, 68
பாவிற் கூறத்தக்கவர், 3
பாறு, 58
பிங்கல சரிதை, 66
பிஞ்ஞகன், 27
பிண்டம், 72
பிண்டி - ஒருபடை, 58
பிரப்பு, 102
பிரபந்தச் சாயை, 21, 25, 31
பிரபந்தம், 1-3, 8, 20, 24, 33-4
பிரபந்த விகற்பம், 87
பிராயம், 46, 86
பிள்ளைக்கவி, 87
பிள்ளைக் கவியின் பருவங்கள், 29
பிறப்பிழிந்தோர், 100
புணர்முலை, 7, 31
புணர்மொழி, 25
புறந்தரல், 79
புறநடை, 56
புறப்பொருள் நூல், 61
புனர்பூசம், 14, 23
புனருத்தி, 94
பூசம், 14
பூரட்டாதி, 16
பூரம், 17
பூராடம், 13
பெயருக்கிசைந்த எதுகை, 47
பெருந்தேவி, 57
பெருநிரைப்பு, 95
பெருநூற்கிளவி, 72
பேதை முதலெழுவரின் பிராயம், 44
பொருத்தம் பத்து, 1
பொருவிறந்தோன், 62
பொருள்கோள் எட்டு, 72
பொருள்படுத்துவார், 91
பொருளதிகாரம், 54
பொருளல கூறல், 94
பொருளானந்தம், 84
பொழி பொருள், 72
பொழில் விளையாட்டு, 63
போகினி, தற். 1
போதக் குறுமுனி, சிறப். 3
மக்கட் கதி, 20
மக்கட் பிறந்தன, 20,
மகம், 17
மகயிரம் - மிருகசீரிடம் 18, 23
மங்கலச் சொற்கள், 2
மங்கலமாலை, 87
மங்கை முதலியவர்க்குரியன, 46
மஞ்ஞையின் பிள்ளை, 84

மடலூர்ச்சி, 87
மண்டலித்து முடிதல், 39
மணம் எண்வகை, 54
மதங்கநெறி, 93
மதர்விழி, 5
மதிக்குழவி, 84
மதுரம், 87
மதுரை உத்தர, சிறு, அவை, 2
மருத்துவர் இருவர், 28
மருள வழங்கல், 94
மறைப்பா - வெண்பா, 36
மறையோர்க்குரியன, 73-4
மன்னவிருத்தம், 37
மன்னனைச் சொற்றதோர் பா, 92
மாணி, 96
மாணிலோன், 87
மாயி, தற். 1
மாலவதாரம், 52
மாலினி, தற். 1
மாலினி சத்தி அதிபாக்கியமுள்ளவள், தற். 1
மாலைமாற்று, 87
மாறுகோள், 72
மிகைச்சொல், 105
மிறைக்கவி இருபது, 87
மின்மினிவண்டு, அவை, 2
மின்னும் வெளியுந் துடியுநிகர் இடை, 25
முகுர்த்தம், 101
முகூர்த்தம், 101
முச்சங்கத்திலும் இருந்த புலவர் கணக்கு, அவை, 2
முசலம், 58
முடாகம் - ஒரு படை, 58
முத்தகம், 66
முத்தமிழ், அவை, 2
முத்தீ, 73
முதன்மை, 48
முந்திரியார் வஞ்சினம், 67
முரசபந்தம், 67
முருகனுவமைக்குப்பிராயம், 86
முன்னைமொழி, 22
முதுரை, 72
மூரியும் பிளப்புமில்லா ஓலை, 92
மூலம், 18
மூன்று தமிழ், 99
மெத்தது, 94
மேற்கோள் - கொள்கை, 90
மோகினி, தற். 1, 59
யாப்பானந்தம், 84
யாப்புறுத்தமைத்தல், 72
யாழொடு புணர்ந்த பா, 84
யானைத்தொழில், 49
யோகினி, தற். 1, 59
வகுப்பு, 34, 39
வகையுளி, 4
வசுக்கள் எண்மர், 28
வடநூல் வழி, 71
வடுகன் - வைரவமூர்த்தி, 28
வணிகர்க்குரியன, 77-8
வணிகர்க்குவமை, 77
வயிச்சிரவணன் - குபேரன், 77
வராகி, தற். 1
வருணம், 11
வருணம் நான்கிற்குமுரியராசி திசைகள், 92
வரையரமகளிர், 57
வரையறை, 30, 31
வரையார், 12
வழு எழுவகை, 84
வழுப்படச் சொல்லுதல், 94
வன்னித்தல், 62
வனப்புறுகாட்சி, 63
வனிதை, தற். 1
வாக்கி, 87
வாசலை, தற். 1
வாண்மங்கலம், 51
வாணுதல், தற். 1, 14
வாதம், 92-3
வாதி, 87
வாதினில் வல்லார் இலக்கணம், [93
வாமன சரிதை, 66
வாய்த் தடுமாற்றச் சொல், 90
வாயுறை, 73
வாரானை, 29-30
வாவல் நாற்றி, 67

வானரமகளிர், 57
வானவர் வாழ்த்து, 57
வானோர் கதி, 20
விகற்நடை, 67
விகற்பம், 64
விகற்பித்து முடித்தல், 72
விசாகம், 16
விசேடங் காட்டல், 72
விட்டேறு - ஒருபடை, 58
வித்தாரம், 87
விதண்டை, 92-3
விதானவருக்கம், 67
விதானித்து, 102
விதியவன் - பிரமன், 11
விந்தை, தற். 1
வியம், 10
வியனிலை, 5, 8
விரித்துறை, 81
விருத்தக்கதை, 87
விருத்தப் பிரபந்தங்கள், 41
விருத்தி நால்வகை, 37
விலங்கின்கதி, 21
வினாவுத்தரம், 67
வினைஞர் - வேளாளர், 35, 89
வினைமுந்திய கனவு, 58
வீணை, தற். 1
வீரமகள், 58
வெண்பாவால் பெண்களைப்பாட லாகாது, 67
வெள்ளணி, 63
வெள்ளைக்கவி, 87
வெற்றி தோல்வியாகுமிடம், 96
வேதத்தவன், சிறப். 3
வேய்த்தோளெழுவர், 27
வேளாளர்க்குரியன, 79-80
வைநாசிகம் : ஒரு குற்றம், 19
வைரவதேவன், 28



திரு. எஸ். கலியாண சுந்தரையர் அவர்கள்